பண்டிதமணி

# மு. கதிரேசன் செட்டியார்


பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

முனைவர் ச. சிவகாமி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பண்டிதமணி
# மு. கதிரேசன் செட்டியார்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 12
பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் (29-03-2004)


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Paṇṭitamaṇi Mu. Katirēcaṉ Ceṭṭiār** |
| Editors | : | Dr. S. Krishnamoorthy<br>Director<br>IITS, Taramani, Chennai - 600 113.<br><br>Dr. S. Sivakami<br>Associate Professor<br>IITS, Taramani, Chennai - 600 113. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>IInd Main Road, C.I.T. Campus, Taramani,<br>Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : | 558 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2005 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii +120 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 40/- (Rupees forty only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Chennai - 600 004. |
| Subject | : | Biographical & Critical Studies on<br>Mu. Kathiresan Chettiar |


---

* கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒல்லும்வகையெல்லாம் தமிழை வளர்ப்பதில் அயராது பாடுபட்டுவருகிறது. வாரக்கருத்தரங்கு, திங்கள் கருத்தரங்கு, ஆண்டுக்கருத்தரங்கு, அறக்கட்டளைக் கருத்தரங்கு போன்ற பல்வேறு கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி அக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்து வருகிறது. தமிழாய்வுக்கு உடனடித் தேவை என்ன என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்திவருவதே இதற்குக் காரணமாகும்.

இந்நிறுவனம் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு பொருண்மை களில் கருத்தரங்குகளை நடத்திவருவதைத் தமிழுலகம் நன்கு அறியும். தமிழுக்கென்று அமைந்த மரபையும் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் இலக்கியக் கொள்கை என்ற தொடர்கருத்தரங்கை இந்நிறுவனம் நடத்திவந்தது. தமிழர் கலைச் செல்வங்கள் என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்காகத் தமிழ் மரபினை உணர்த்தும் வகையிலும் கருத்தரங்குகளை நடத்திவந்தது. இவையன்றியும் பல்வேறு இலக்கியப் பொருண்மைகளில் கருத்தரங்கை நடத்திவந்தபெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு. இந்நிறுவனம் தன் அளவிலும் பிற நிறுவனங்களோடு சேர்ந்தும் இத்தகைய கருத்தரங்குகளை நடத்தித் தமிழாய்வுக்குச் சிறப்புச் சேர்த்து வந்துள்ளது. இக்கருத்தரங்குகளைத் தொடர்ந்து தமிழறிஞர்களை மையப்படுத்திய நிலையில் தொடர்கருத்தரங்கு ஒன்றைத் தொடங்க எண்ணியது. இவ்வகையில் **‘தமிழறிஞர் வரிசை’** என்ற பெயரில் தொடர் கருத்தரங்கை நடத்துவதன்மூலம் அறிஞர் பலரின் அரிய தமிழ்த் தொண்டுகளை எல்லாம் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்ட முடியும் என்ற நிலையில் இக்கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது.

வரலாறு எழுதப்படாத தமிழறிஞர்களுக்கு ஒரு வரலாற்றை உருவாக்குவதன் மூலம் அத்தமிழறிஞர்களைப் பற்றிய செய்திகள் ஆவணப் படுத்தப்படும். அவ்வாறு ஆவணப்படுத்தப்படுவதால் இத்தமிழறிஞர்கள் இம்மண்ணில் பிறந்த பயனும், இம்மண்ணிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளும் பின்வருவோரால் போற்றப்படும் நிலை உருவாகும். இதனால் இத்தமிழறிஞர் வரிசைக்கருத்தரங்கை வாழ்க்கை வரலாற்றுக் கருத்தரங்காக அமைக்காமல்

ஆய்வுக்கருத்தரங்கமாக அமைத்துக்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. அவ்வகையில் தமிழுக்கு உழைத்து மறைந்த அறிஞர்கள் பலநூறுபேர் நம்முன் வந்தனர். அவர்கள் அனைவரைப் பற்றியும் இத்தொடர் கருத்தரங்கம் அமையவேண்டும் என்பது எங்கள் அவா. எனவே அனைவரையும் பட்டியலிட்டுப் பகுதி பகுதியாக இத்தொடர் கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில் முதல் கட்டமாகப் பதினாறு அறிஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தமிழறிஞர்களின் முதல் பட்டியலைக் கொண்டு தமிழறிஞர் களைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும் நாள், கட்டுரை வழங்க வேண்டிய நாள் பற்றிய குறிப்புகளுடன் முதல் அட்டவணை தயார் செய்யப்பட்டது.

இப்பதினாறு தமிழ் அறிஞர்களைப் பற்றியும் கட்டுரைகள் வழங்கத் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர்.

ஒரு திங்களுக்கு ஒரு தமிழறிஞர் என ஒருவரைப் பற்றிய கருத்தரங்கில் 5 அல்லது 6 பேர் ஆய்வு செய்யவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கட்டுரைகள் கோரப்பட்டன. ஒருவரைப் பற்றிப் பலர் ஆய்வுசெய்து கட்டுரை வழங்குவதால் அவ்வறிஞருடைய பன்முக ஆளுமையை வெளிக்கொணர முடியும். அத்தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு முதலில் அமையவேண்டும்; பதிப்பு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு போன்ற நிலைகளில் அவ்வறிஞர் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்ற நோக்கில் கட்டுரைகள் பெறப்பட்டன. இக்கருத்தரங்கில் மிகுந்த விருப்பத்துடன் ஆய்வாளர்கள் கட்டுரை வழங்க முன்வந்தமை உண்மையிலேயே எங்களுக்கு வியப்பு அளித்தது. முறையாகத் திட்டமிடப்பட்டுச் செயல்படத் தொடங்கிய **இத்திங்கள் தொடர் ஆய்வுக்கருத்தரங்கு - தமிழறிஞர் வரிசை** புதுப்பொலிவுடன் எண்ணிய வண்ணம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இம்முதல் பட்டியலைத் தொடர்ந்து இரண்டாவது பட்டியல், மூன்றாவது பட்டியல் எனத் தமிழறிஞர் வரிசை ஆண்டுக் கணக்கில் நடைபெறும் தொடர் கருத்தரங்காக உருவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய, நாளைய தலைமுறையினர்க்கும் தமிழ் உலகிற்கும் ஒரு சிறந்த ஆவணமாக அமைய இருக்கும் இத்தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாகத் தொடர்ந்து வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை கொள்கிறது. எப்போதும் ஒரு பணியைத் திட்டமிட்டு எதிர்கால நோக்கில் செயல்படுத்தினால் அத்திட்டம்

வெற்றியடைவது உறுதி என்பதற்குச் சான்றாக இத்தமிழறிஞர் வரிசைத் தொடர் கருத்தரங்கு அமையலாம்.

இத்தமிழறிஞர் வரிசையில் 12ஆம் கருத்தரங்காகப் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் கருத்தரங்கு அமைகிறது. இக்கருத்தரங்கிற்கு எண்மர் கட்டுரை வழங்கியுள்ளனர். பேரறிஞராகவும், பேராசிரியராகவும், நாடுபோற்றும் ஆய்வாளராகவும் மற்றும் இலக்கண ஆராய்ச்சியாளராகவும் விளங்கிய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரின் பன்முகச் சிறப்புகளை வெளிக் கொணரும் நோக்கில் இக்கட்டுரைகள் அமைகின்றன.

கட்டுரை ஆசிரியர்கள் பண்டிதமணியின் மொழி ஆர்வத்தையும், இலக்கியத்திறனையும், தமிழ் இலக்கிய ஆய்வுப்போக்கையும், அவர்தம் உரைநடைத்திறனையும், மொழிபெயர்ப்புப் பணிகளையும் உரிய சான்றுகள் காட்டி விளக்கியிருக்கிறார்கள்.

பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வு நூலாக இந்நூல் அமைந்துள்ளது. பண்டிதமணியின் பன்முகச் சிறப்புகளை அறியவிரும்புவோர்க்கு இந்நூல் சிறந்த ஒரு கருவூலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தொடர் கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து கருத்தரங்கு சிறப்புற நடைபெற முழு ஒத்துழைப்பு நல்கிய இலக்கியம் மற்றும் சுவடிப்புல இணைப்பேராசிரியர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் முனைவர் பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை
26-12-2005

**இயக்குநர்**

# கட்டுரையாளர்

முனைவர் **அ. ஆலிஸ்**
பேராசிரியர், தமிழ்த்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி

முனைவர் **அ. ஆனந்த நடராசன்**
சிறப்புநிலைப் பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

முனைவர் **தி. கமலி**
இணைப் பேராசிரியர், தமிழியல் துறை
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக
ஆய்வு மையம், சென்னை - 600 015

திருமதி **சு. கௌசல்யா**
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

முனைவர் **ஆ. தசரதன்**
திட்டக் கல்வியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

திருமதி **இரா. மாலதி**
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

முனைவர் **நா. வள்ளி**
இணைப் பேராசிரியர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

முன்னவர் **மு. வளர்மதி**
ஆய்வு உதவியாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# உள்ளே

வாழ்க்கை வரலாறு

- சு. கௌசல்யா 1

படைப்பிலக்கியப் பணி

- நா. வள்ளி 18

தமிழாய்வுப்பணி

- தி. கமலி 25

உரைநடைத்திறன்

- அ. ஆலிஸ் 53

கதிர்மணி விளக்கப் பேருரை

- ஆ. தசரதன் 59

மொழிபெயர்ப்புப் பணி

- இரா. மாலதி 79

சுக்கிரநீதி

- அ. ஆனந்த நடராசன் 95

மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்)

- மு. வளர்மதி 106

# வாழ்க்கை வரலாறு

*சு. கௌசல்யா*

ஏழுமாதங்கள் கூட பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலாமல், 12 ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றிய தனிச்சிறப்பு உடையவர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார். பேரவைகளில் கற்றவர்கள் வியப்பும் உவப்பும் எய்தும் வண்ணம், காப்பியச் சுவைகளை எடுத்துரைத்தல், பழம்புலவர் செய்யுட்களுக்கு உரை காணுதல், இனிமை கனியும் பாடல்கள் இயற்றுதல், கருத்துச் செறிவுடைய கட்டுரை வரைதல், வடமொழி நூல்களைத் தமிழிற் பெயர்த்தல் முதலிய பலதுறைகளில் புலமை பெற்று, தம் அறிவாற்றலையும் இறவாத புகழையும் நிலைநாட்டியவர் பண்டிதமணி.

## பிறப்பும் வளர்ப்பும்

பாண்டி நாட்டில், பூங்குன்ற நாட்டின் தலைநகராகிய மகிபாலன்பட்டியில், விசு ஆண்டு, புரட்டாசித் திங்கள், இரண்டாம் நாள் (16.10.1881) வெள்ளிக்கிழமையன்று முத்துக்கருப்பன் செட்டியாருக்கும் சிகப்பி ஆச்சிக்கும் மகனாகத் திருவாதிரை நாளில் பிறந்தார் கதிரேசன்.

பண்டிதமணியின் பாட்டனார் குமரப்பச் செட்டியார் மகிபாலன்பட்டியைச் சுற்றி நன்செய் புன்செய்களை உடையவராக இருந்தார் என்றும், தந்தை முத்துக்கருப்பன் மலேயாவிலும் இலங்கையிலும் பெருவணிகம் நடத்தியவர் என்றும் அறிய முடிகிறது. தந்தையார் கணிதத்தில் மிகுந்த பற்றுடையவராக இருந்தார். மைந்தன் கதிரேசன் இலக்கண இலக்கியங்களில் பற்றுமிக்கவராக விளங்கினார்.

பண்டிதமணி பிறந்து இரண்டு ஆண்டுகள் வரை உடல்நலத்தோடு இருந்தார். மூன்றாம் வயதில் இளம்பிள்ளை வாதத்தால் பீடிக்கப்பட்டார். எனினும் அந்நோய் 15 வயது வரை இவரைத் துன்பப்படுத்தவில்லை. இளமையில் இவர் நோயைப் பொருட்படுத்தாது நாள்தோறும் இரண்டு, மூன்று மைல்கள் வரை நடந்து சென்று வந்தார். அருகேயுள்ள சிற்றூர்களுக்கு யாருடைய துணையுமின்றித் தாமே நடந்து சென்று வந்தார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குத் திருமகள்பாலிருந்த பற்று, கலைமகள்பால் இருந்ததில்லை. தங்கள் குழந்தைகளை ஐந்தாம் ஆண்டில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் மரபு இவர்கள் சமூகத்தில் அந்நாளில் இல்லை. பண்டிதமணி நோயுற்றிருந்ததால் ஏழு வயதுவரை பள்ளிக்குச் சென்றதாகத் தெரியவில்லை. அதன் பின்னர் பெற்றோர்கள் இவரைத் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தனர். செட்டிநாட்டுத் திண்ணைப்பள்ளிகளில் படிப்பு என்பது எண்சுவடிப் படிப்பே ஆகும். ஏனைய படிப்பு, வட்டித் தொழிலுக்குப் பயன்படுவதில்லை என்றும் அதற்குச் செலவிடும் காலமும் வீணாவதாக அச்சமூகத்தினர் கருதினர்.

பொருளீட்டுவதற்காகச் சிறுவயதிலேயே கடல் கடந்து பிற நாடுகளுக்குச் செல்வது செட்டியார்களின் மரபு. பண்டிதமணியும் அவரின் குலவழக்கப்படி, 11ஆம் வயதில் இலங்கைக்குச் சென்றார். கம்பளை நூரேல்யா வழியிலுள்ள இரட்டைப் பாதைத் தோட்டத் தொழிலாளருக்கு அரிசி, புடவை விற்று வந்த வியாபார நிலையத்தில் இவர் வேலை பார்த்துவந்தார்.

ஏற்கெனவே உடல் நலிவுற்றிருந்த பண்டிதமணி இலங்கைக்குச் சென்ற மூன்றாண்டுகளுக்குப் பிறகு தம் தந்தையார் இறந்த செய்தியைக் கேள்வியுற்று, மனம் நலிவுற்றுத் தாய்நாடு திரும்பி வந்தார்.

பண்டிதமணியுடன் பிறந்தவர்கள் இருவர். அவர்கள் இருவரும் இளையவர்கள் ஆகையால், குடும்பப் பொறுப்பைப் பண்டிதமணி ஏற்று நடத்த வேண்டியதாயிற்று. அப்போது அவருக்கு வயது பதினான்கு. இவரைப் பற்றியிருந்த இளம்பிள்ளை வாதம், தன் வன்மையைக் காட்டத் தொடங்கியதால் இவரது இடக்காலும் இடக்கையும் வலுக்குறைந்தன. ஊன்றுகோலின்றி இவரால் நடக்க இயலாததால் மகிபாலன்பட்டியிலேயே வாழ்ந்து வரலானார். பல இடங்களுக்குச் சென்று, தொழில் துறையில் ஈடுபட இயலாதவாறு உடல் நலம் குன்றி இருந்ததை ஈடுசெய்யும் வகையில் இவரது உள்ளம் அறிவுத்துறையில் ஈடுபட்டது. பண்டிதமணி எவருடைய உதவியுமின்றித் தம் வழிபடு கடவுளாகிய விநாயகப் பெருமானையே ஆசிரியராக நினைத்துப் பல நூல்களைத் தாமே கற்றுத்தேர்ந்தார். இவ்வாறு புலவரெல்லாம் பாராட்டும் வண்ணம் இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்ததற்கு மகாவித்துவான் அரசஞ்சண்முகனார் பேருதவியாக இருந்தார். கந்தசாமிக் கவிராயர், சுந்தரேசுவர ஐயர் ஆகியோருடைய நட்பும் இவருக்கு உதவியாக இருந்தது.

மகிபாலன்பட்டியிலும் அண்ணாமலை நகரிலும் வீட்டுக் குள்ளேயே பண்டிதமணி இருந்தாலும், பரந்த வெளியுலகிலேயே அவர் சிந்தனை இருந்து வந்தது. உலகியல் நிகழ்ச்சிகளை அறிய வேண்டுமென்ற துடிப்பு அவருக்கு இருந்தது. நாள் தவறாமல் 'சுதேசமித்திரன்' இதழைப் படித்து வந்தார். இதழில் வராத நிகழ்ச்சிகள், உள்ளூர் நிகழ்ச்சிகள், மகிபாலன்பட்டியில் வாழும் பலருடைய குடும்ப விவகாரங்கள், அண்ணாமலை நகரில் இருக்கும் ஆசிரியர், மாணவர் பற்றிய பலப்பல செய்திகள் ஆகியவற்றை அறிவதில் அவர் பேரார்வம் காட்டினார்.

**கல்வியறிவு**

'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்ற பழமொழிக்கு மாறாக விளங்கியவர் பண்டிதமணி. இவர் கண்டதையெல்லாம் கற்காமல் ஒருசில சிறந்த நூல்களை மட்டுமே ஊன்றிப் படித்துப் புலமை அடைந்தவர். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், திருவாசகம், அகநானூறு, புறநானூறு, கம்பராமாயணம், திருக்குறள் (பரிமேலழகர் உரை) என்னும் குறிப்பிட்ட நூல்களையே இவர் பயின்றார்.

இலக்கிய நூல்களைப் பிறர் உதவியின்றி இவர் கற்று உணர்ந்த போதிலும், சேனாவரையம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களை அரசஞ்சண்முகனாரிடம் கற்றுத் தேர்ந்தார். சண்முகனாரைப் பண்டிதமணி தம் ஆசானாகவே பாவித்தார்.

அரசஞ்சண்முகனாரின் வாயிலாகப் பண்டிதமணிக்கு மதுரை வித்தியாபானு அச்சகத்தின் உரிமையாளரும் குமண சரித்திரம் முதலிய பல சிறந்த நூல்களின் ஆசிரியருமான மு.ரா. கந்தசாமிக் கவிராயரின் நட்பு கிடைத்தது. இந்த நட்பின் பயனாக வித்தியாபானு இதழுக்குப் பண்டிதமணி விஷயதானம் செய்யத் தொடங்கினார். மதுரைக்குச் செல்லும்போது எல்லாம் பண்டிதமணி கவிராயரைச் சந்திப்பது உண்டு. அப்போது அறிமுகமானவரே இராவ்சாகிபு முதுபெரும்புலவர் தமிழ்ப்பெருங்கவி வெள்ளகால் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் ஆவார்.

ஐப்பசி மாதந்தோறும் இராமாயண ஏடு படித்தலை நலம் தரும் கடமையாகக் கருதிவரும் குடும்பங்கள் செட்டிநாட்டில் உண்டு. ஏடு படிக்கத் தெரிந்தவர்களும் ஒரு சிலரே இருந்திருக்கின்றனர். அவர்களும் பெரும்பாலும் தவறாகவே படித்து வந்தனர். தவறான செய்திகள் மக்களிடையே பரவுதலைத் தடுக்க வேண்டுமென்று பண்டிதமணி விரும்பினார். இராமாயணக் கதையையும் கம்பன்

காவியச் சுவையையும் மக்கள் பிழையின்றி உணர்ந்து கொள்ளும் வகையில், வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் கம்பராமாயணச் சாரப் பதிப்பினை வாங்கவும் ஓரளவு நூல் நயங்களைச் செட்டி நாட்டிலுள்ள மக்கள் உணர்ந்து மகிழவும் பண்டிதமணி ஏற்பாடு செய்தார். கற்பதைத் தெளிவாகவும் பிழையில்லாமலும் கற்று அறிய வேண்டும் என்பதில் ஆர்வம் உடையவராக விளங்கியவர் பண்டிதமணி.

பீமகவி என்ற செட்டிநாட்டுப் பெரும்புலவர் பண்டிதமணியின் நண்பராவார். பீமகவியின் சொற்பொழிவு ஒன்றில் காணப்பெற்ற குறைகளையெல்லாம் தொகுத்து 'வித்தியா பானு'வில் பண்டிதமணி விரிவாக எழுதினார். இதைக்கண்டு வெகுண்ட பீமகவி, பண்டிதமணியின் மீது மானநஷ்ட வழக்குத் தொடுத்தார். வழக்கில் வாதாட, தமிழும் ஆங்கிலமும் அறிந்த வழக்கறிஞரான டாக்டர் சோமசுந்தர பாரதியின் நட்பு கிடைத்தது.

அரசஞ் சண்முகனாரின் உதவியால் 1906இல் பண்டிதமணி நாகப்பட்டினம் சென்று வேதாசலம்பிள்ளை (மறைமலையடிகள்) நட்பையும் பெற்றார். நாகை வேதாசலம் பிள்ளையின் மூலமாக ஞானியார் அடிகளைப் பண்டிதமணி சந்தித்து நட்புக் கொண்டார். சொற்பொழிவுக்கு உரிய குறிப்புகளை ஞானியார் ஒழுங்குபடுத்தி, அடுக்கி வைத்திருந்ததை அறிந்த பண்டிதமணி தாமும் அவ்வழியைப் பின்பற்றினார். ஞானியார் அடிகளைச் சந்தித்து விட்டுத் திருப்பாதிரிப்புலியூரிலிருந்து திரும்பும் வழியில் 1903ஆம் ஆண்டு கும்பகோணத்தில் தங்கி, 'காலேஜ் தமிழ்ப் பண்டிதர்' வே.சாமிநாத ஐயரைச் (உ.வே.சாமிநாத ஐயர்) சந்தித்து, நட்புக் கொண்டு தம்முடைய இலக்கிய அறிவைப் பரிமாறிக் கொண்டார்.

இராமநாதபுரத்தில் மகாவித்துவான் ரா.ராகவையங்காரைப் பண்டிதமணி சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது ஐயங்கார் பண்டிதமணியைச் சீவகசிந்தாமணியிலிருந்து சில கேள்விகள் கேட்டார். அவற்றிற்குப் பண்டிதமணி சிறந்த முறையில் விடை கூறியதைக் கேட்டு மகிழ்ந்தார். பின்பு, பண்டிதமணியைப் பாண்டித்துரைத் தேவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பாண்டித்துரைத் தேவர் மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவ விரும்பிய காலமாதலால், மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்த புலவர்களில் ஒருவராகப் பண்டிதமணியைச் சேர்த்துக் கொண்டார்.

இலக்கியச் சுவை நலங்களில் திளைத்து மகிழ்ந்த பண்டிதமணி, வடமொழிக் காவிய நலங்களையும் அறிந்து கொள்ள

விரும்பினார். வடமொழியில் காளிதாசர் போன்ற பெரும் புலவர்களால் இயற்றப் பெற்ற இலக்கியங்களைப் படித்து மகிழ எண்ணினார். வடமொழியறிவு ஓர் இனத்தார்க்கே உரியது என்று எண்ணியிருந்த காலத்தில் வடமொழியைப் படித்து, அம்மொழியில் உள்ள ஆகமநூல்களையும் வியாகரணத்தையும் படிக்க விழைந்தார். ஆதலால், வடமொழியில் வல்லுநராக விளங்கிய தருவை நாராயண சாஸ்திரியாரை ஆசிரியராகக் கொண்டு ஐந்து ஆண்டுகள் முறையாக வடமொழியைக் கற்றார்.

பண்டிதமணி பட்டம் பெறுதலையோ, பொருளீட்டலையோ குறிக்கோளாகக் கொண்டு கல்வி பயிலவில்லை. இலக்கியங்களில் உள்ள சுவையை நன்கு அறிந்து சுவைத்து இன்புறவே பயின்றார்.

வடமொழி அறிவால் இருமொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பண்டிதமணி நன்கு அறிந்து கொண்டார். ஒருமொழியில் நிரம்பிய புலமை அடைய வேண்டுமானால் பிறிதொரு மொழிப்பயிற்சி வேண்டும் என்பது இவரது குறிக்கோள்.

பிறமொழிப் பயிற்சியின் பயனைப் பெறுவதில் பண்டிதமணி சிவஞான முனிவரின் ஆய்வுமுறைகளைப் பின்பற்றினார். வடமொழியில் நிரம்பிய புலமை பெற்றிருந்தும் கூட, மறந்தும் அந்த மொழி கலவாமல், தூயதமிழில் எழுதிய சிவஞான சுவாமிகளின் முறையையே பண்டிதமணியும் கையாண்டுள்ளார். இதிலிருந்து அவரின் மொழிப்பற்றை அறியமுடிகிறது.

பண்டிதமணி பலவான்குடியில் மணிவாசக சங்கம் தோற்றுவித்து, அதைச் சிறப்பாகவும் நடத்தி வந்தார். சிவநேசர் திருக்கூடத்தின் முதல் தலைவராகவும் விளங்கினார். 1910இல் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஜி.சுப்பிரமணியஐயர் சுதேசநிதி திரட்டியபோது, பண்டிதமணி செட்டிநாட்டில் நிதி திரட்டி அனுப்பினார். பல இடங்களில் சொற்பொழிவுகளும் நடத்தினார். இதிலிருந்து இவரின் நாட்டுப்பற்றை நன்கறிய முடிகிறது.

## இலக்கியப் பற்று

1909ஆம் ஆண்டு, மே மாதம் 13ஆம் தேதியில் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார் வ.பழ.சா. பழனியப்பச் செட்டியார். இதைக் கேள்வியுற்ற பண்டிதமணி, பழனியப்பச் செட்டியார் வசிக்கும் மேலைச்சிவபுரிக்குச் சென்று, அவரின் தம்பி அண்ணாமலைச் செட்டியாரிடம் குருபூஜை நடக்கும் நாளன்று, அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்து,

அன்று பிற்பகல் ஒரு சபையைக் கூட்டித் தக்கத் தமிழ்ப் புலவர்களைக் கொண்டு, பிரசங்கம் செய்வித்தால் சிறப்பாக இருக்கும் எனக் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க, 13.05.1909 அன்று பிற்பகல் 3 மணிக்குச் சாமிநாத விநாயகர் சந்நிதியில் சபை கூடிற்று. உள்ளூரிலும் வெளியூரிலும் இருந்து எராளமானோர் கலந்து கொண்டனர். மகாவித்துவான் அரசஞ் சண்முகனார் தலைமை தாங்க, 'வித்தியாபானு' பத்திராதிபர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர், கீழைச்சீவற்பட்டி வித்துவான் பீமகவி, தேவகோட்டை செ.வேற்சாமிக் கவிராயர், வேந்தன்பட்டி புலவர் வாத்தியார் என்ற சைவப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவுகள் நடத்தினர். அவையோர் கருத்துப்படி, 'மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை' என்னும் பெயர் இடப்பெற்றது. எனினும் குருபூஜை நாளில் இது தொடங்கப் பெற்றதையொட்டி, இச்சபைக் கட்டிடத்தைக் 'குருபூஜை மடம்' என்று குறிப்பிடுகின்றனர்.

சபை, சாமிநாத விநாயகர் சந்நிதியில் தொடங்கப் பெற்றதை யொட்டி, அவ்விநாயகர் மீது பண்டிதமணி 'பதிற்றுப்பத்தந்தாதி' பாடினார். அவர் இளமைக்காலத்தில் இயற்றிய பாடல்களில் இவை சிறந்தன.

திங்கள் தோறும் சொற்பொழிவுகளும் ஆண்டுதோறும் விழாக்களும் இச்சபையில் நடைபெற்றன. இதேபோல் செட்டிநாட்டுச் சிற்றூர்களில் தோன்றிய நிலையங்கள் பலவாகும். இவற்றையெல்லாம் தோற்றுவித்த பெருமை பண்டிதமணியையே சாரும். பண்டிதமணி தாம்வேறு சபைவேறு எனக் கருதாமல், சபையின் வளர்ச்சியே தம் வளர்ச்சி என்பதை நன்குணர்ந்து இச்சபையின் முன்னேற்றத்திலேயே முழுக் கவனமும் செலுத்தி வந்தார். பழனியப்பச் செட்டியாரும் இவருக்கு முழு ஆதரவு அளித்து வந்தார்.

சபையின் ஐந்தாம் ஆண்டு (1914) நிறைவு விழாவிற்குப் பின்னர், பண்டிதமணி உவே. சாமிநாதையரை மகிபாலன்பட்டிக்கு அழைத்துச் சென்று, தம் இல்லத்தில் தங்கவைத்து மகிழ்ந்தார். தமிழின்பால் அவர் கொண்ட பற்றின் காரணமாகத் தமிழறிஞர்களின் மீதும் அவர் அதிகப்பற்றும் அன்பும் கொண்டிருந்தார் என அறிய முடிகிறது. அதன் காரணமாக உ.வே.சா. ஏடுதேடி அலைந்தபோது அம்முயற்சியில் பண்டிதமணி அவருக்குப் பேருதவியாக இருந்திருக்கிறார். தமிழ்நாட்டிலுள்ள பெரும்புலவர்கள், பேரறிஞர்கள் ஆகியோரை அழைத்துத் தாம் பயனடைந்தது போலவே, தம்பால் அன்புகாட்டித் தமக்கு ஊழியம் செய்த இளைஞர் - சிறப்பாகத் தம்முடைய மாணவ மாணவிகள் பலரைப் பண்டிதமணி

இச்சபைக்கு அழைத்து அவர்களை முதலில் எழுதிப்படிக்கும்படி சொல்லிப் பேசப் பழக்கினார்.

இத்தமிழ்க் கல்விக்கழகம் 45 ஆண்டுகளுக்கும் மேலாக ஆரவாரமும் விளம்பரமும் இன்றி, மொழிப்பணியாற்றிய பெருமை உடையது. செட்டிநாட்டில் இன்று காணப்படும் தமிழ் அறிவுப் பெருக்கத்திற்கு விதை போன்றது இச்சபையே எனலாம். கேள்வியறிவு வழங்கியும் கல்வி பயிற்றுவித்தும், நூல் வெளியிட்டும், நூல் நிலையம் அமைத்தும் இச்சபை ஆற்றிய பணிகள் யாவரும் பாராட்டற்குரியன. இப்பெருமை அனைத்தும் பண்டிதமணியையே சாரும்.

இச்சபையின் வாயிலாகப் பண்டிதமணி முதலில் வெளியிட்ட நூல் "நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சீர்திருத்தம்" என்பதாகும். சபையின் இரண்டாம்ஆண்டு நிறைவுவிழாவில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் விரிவே இந்நூல் ஆகும். கல்வியின் இன்றியமையாமை பற்றியும் தமிழின் தெய்வீக மாட்சி பற்றியும் விரிவாக இந்நூல் கூறுகிறது. ஊர்கள் தோறும் சபைகள் நிறுவி அவற்றில் புலவர்களைக் கொண்டு சொற்பொழிவு புரியச் செய்வதால் விளையும் நன்மைகளையும் சமயஞானம், ஐந்தெழுத்துண்மை, தேவாரப் பாடசாலைகளின் பயன் ஆகியவை பற்றியும் இந்நூல் தெரிவிக்கின்றது.

வடமொழியினின்று தமிழ்மொழிக்குச் சில அரிய நூல்களை மொழிபெயர்ப்பது இன்றியமையாதது என்ற கருத்து நிலவியதால் வடமொழியைக் கற்பதிலும் ஆர்வம் உடையவராக விளங்கி யிருக்கின்றார் பண்டிதமணி.

பண்டிதமணி சபையின் 23ஆம் ஆண்டு விழாவின் போது தமிழ் வளர்ச்சி கருதிச் சில உறுதியான கருத்துகளைத் தெரிவித்தார். அவை தீர்மானங்களாக அந்த ஆண்டுவிழாவில் நிறைவேற்றப் பட்டன.

1. தமிழ் நாட்டரசராக விளங்கும் புதுக்கோட்டை அரசரைத் தமது ஆட்சியில் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஒரு தனித் தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தித் தருமாறு வேண்டியும்,

2. சென்னை இராசதானிக் கல்லூரி (Presidency College) கும்பகோணம் அரசினர் கல்லூரி (Government College) இரண்டிலும் பி.ஏ. வகுப்பில் 5ஆம் பகுதி (fifth group) தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தகுந்த வகுப்புகளை ஏற்படுத்தித் தரும்படி அரசாங்கத்தாரை வேண்டியும்,

3. இராமேசுவரம் தேவஸ்தானத்தார் நடத்தி வரும் கல்லூரியில் தனித்தமிழ் வகுப்பு ஏற்படுத்தும் படியும்,

4. சென்னைப் பல்கலைக்கழகத்தார் பி.ஏ. ஆனர்ஸ் (B.A. Honours) வழங்க வெகுவிரைவில் ஏற்பாடு செய்யும்படி கழகத்தாரையும் அதற்குத் தகுந்த வகுப்புகளை அரசாங்கக் கல்லூரிகளில் ஏற்படுத்த அரசாங்கத்தையும் வேண்டியும்,

5. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார்களை, அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் வடமொழிச் சிரோண்மணி வகுப்புகளுக்கு ஒப்பத் தமிழிலும் இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம், வேதாந்தம், மருத்துவம், சோதிடம் முதலிய பிரிவுகளை ஏற்படுத்தி நடத்தும்படியும்,

6. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரை நடுத்தரக் கல்வியில் (Secondary Education) ஆங்கிலம் தவிர்த்த ஏனைய பாடங்களைத் தாய்மொழியிலேயே கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கும்படியும்,

7. பள்ளியின் இறுதித்தேர்வுக்குத் (S.S.L.C. Examination) தமிழ் கட்டாயப்பாடமாக இல்லாமலிருப்பதால் மாணவர்களில் சிலர் முதற்றரத்திலேயே (First Form) தமிழை விடுத்துப் பிற மொழிகளைப் படிப்பதால் அவர்களது தமிழறிவு குறைந்து வருவது வருந்தத்தக்கதாகிறது என்பதையும் முன்போல் தமிழில் ஒரு பகுதியையாவது கட்டாயப் பாடமாக ஏற்படுத்த வேண்டும் என்றும்,

8. தமிழ் மொழியை வளர்ப்பதற்கு முயன்று வரும் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கும்படியும் ஆண்டுதோறும் ஒவ்வோரூரில் தமிழ் மாநாடு கூடி இச்சங்கங்கள் உறுப்பினர்களை அனுப்பித்தமிழ் வளர்ச்சிக்குரிய பல முடிவுகளை நடைமுறைக்குக் கொண்டு வரும் வழிகளில் முயலும் படியும்

பண்டிதமணி கொண்டு வந்த தீர்மானங்கள் அவரின் தமிழ்ப்பற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

1934இல் தமிழ்ப்பணி புரிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற பின்னர், சன்மார்க்க சபையின் பொருள்நிலை சீர்கேடு அடைந்தது. சபை பல நல்லறிஞர்களை இழந்து செல்வாக்கு இழந்ததோடு, ஆண்டு விழாக்கள் நடைபெற இயலாமற் போயின. பின்னாளில் பண்டிதமணியின் செல்வாக்கு பெருகிய போது அவர் முயன்று இருந்தால் சபை இன்னும் பல மடங்கு பெருகியிருக்க

வாய்ப்பு உண்டு. சபையைப் பிற்காலத்தில் பண்டிதமணி வளர்க்க முற்படாதது பெருங்குறையே! எனினும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரியை நிலைபெறச் செய்தது பாராட்டற்குரியது. இன்றும் இக்கல்லூரி இவரின் நினைவுச் சின்னமாக விளங்குகிறது. சன்மார்க்கச் சபையின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் இவர் செய்த பெரும் தொண்டு தமிழும் தமிழ்நாடும் உள்ளவரை பாராட்டப் பெறும்.

## நாடறிந்த நாவலர்

சிறந்த அறிவாற்றலுடைய பண்டிதமணி பல சொற்பொழிவுகளும் தலைமையுரைகளும் ஆற்றியுள்ளார். அதில் குறிப்பிடத்தகுந்தவை, 1932 ஆகஸ்ட் மாதம், 6,7 தேதிகளில் நிகழ்ந்த தஞ்சை, திருச்சி மாவட்டப் புலவர் மாநாட்டில் தலைமை தாங்கி நிகழ்த்திய உரை, பூவாளூர் சைவ சித்தாந்த சபை விழாவில் நிகழ்த்திய தலைமை உரை, சென்னைத் தமிழ்ப் புலவர் மாநாட்டிலும், குறுந்தொகை மாநாட்டிலும் ஆற்றிய தலைமை உரை, கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழா, பேரூர் தமிழ்ச் சங்க விழா, தென்காசித் திருவள்ளுவர் கழக விழா போன்றவை ஆகும். அக்காலத்தில் பண்டிதமணி தலைமையைப் பெறாத தமிழரங்கம் இல்லை என்றே கூறலாம்.

உடல்நிலை சரியில்லாத போதும் தமிழ்த் தொண்டிலும் சைவத் தொண்டிலும் மனஉறுதியுடன் ஈடுபட்டார். சைவசமயந் தொடர்பான சொற்பொழிவுகளைப் பண்டிதமணி பல இடங்களில் ஆற்றினார்.

1935ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் 'தாயுமானவர் காலத்தில் சமயநிலை', 1937ஆம் ஆண்டு வேலூரில் 'சைவ ஒழுக்கம்', 1940இல் மயிலத்தில் 'சிவப்பிரகாசர் அனுபவம்' என்ற தலைப்புகளின் கீழ் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் சிறப்பு வாய்ந்தவை.

சைவசித்தாந்தக் கருத்துகளை எளிதாகத் தெரிவித்தது போலவே, இலக்கியச் சுவையையும் பலரும் நுகரும் வண்ணம் பண்டிதமணி தமிழ்நாடெங்கும் பரப்பி வந்தார். எல்லோருக்கும் தெரிந்த பாடலாக இருப்பினும் அதுவரை யாரும் கேட்டிராத நயங்களை அப்பாடலின் வாயிலாக வெளிப்படுத்தும் தனித்திறன் பண்டிதமணிக்கு இருந்தது. பெரிய புராணம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற எந்த இலக்கியத்தையும் பண்டிதமணி இனிமையாக எடுத்துரைக்கும் திறம் கொண்டவர். திருவாசகப் பாட்டு வந்துவிட்டால் இனிமை, இறையின்பமாக மாறிவிடும்.

## சமயப்பற்று

பண்டிதமணி, திருமுறையிலும் சைவசித்தாந்த நூல்களிலும் பெரும்புலமை பெற்றதற்குக் காரணம், காரைக்குடி சொக்கலிங்க ஐயா

ஆவார். பண்டிதமணி இளமையிலேயே சைவசமயப் பற்றுடையவராய் 'சிவநேசத் திருக்கூட்ட'த்தில் பங்கு கொண்டவர். பல இடங்களில் அவ்வியக்கம் பரவத் தம்மாலானத் தொண்டினையும் செய்தவர்.

பண்டிதமணி சைவத்திற்குச் செய்துள்ள பெருந்தொண்டு 'திருவாசகக் கதிர்மணி' விளக்கவுரையே. திருவாசகம் உள்ளத்தை உருக்கும் ஓர் உயர்ந்த நூல். இத்தகைய சிறப்பு வாய்ந்த நூலைப் பண்டிதமணி இளம் பருவந்தொட்டே பன்முறை ஆழ்ந்து ஓதி உணர்ந்து இன்புற்றார். பலகாலம் ஆராய்ந்து பயின்று வருங்கால் அதன்கண் தாம் கண்ட அரிய உண்மைகளைச் சொற்பொழிவு வாயிலாகவும் கட்டுரை வாயிலாகவும் வெளிப்படுத்தினார்.

திருவாசகத்திற்குப் பேருரை எழுதவேண்டும் என்ற ஆசைக்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ள அவர் பல நூல்களைக் கற்றார். திருவாசகத்திற்கு உரை எழுதப் பல ஆண்டுகளாகத் திட்டமிட்டுப் பின்னரே பண்டிதமணி இதில் இறங்கினார். வாழ்நாள் முழுவதும் தம் உள்ளத்திலேயே ஊறிக் கிடந்த கருத்துகளையே பண்டிதமணி தொகுத்தும் வகுத்தும் விளக்கியும் உரையியற்றினார். எனவே, பண்டிதமணி தாம் எழுதிய திருவாசக உரைக்குக் 'கதிர்மணி விளக்கம் என்னும் பேருரை' என்று பெயரிட்டது மிகப் பொருத்தமாகும். உரையாசிரியர் இயற்பெயர், சிறப்புப்பெயர் ஆகியவற்றின் முன்னதன் முதலும் பின்னதன் இறுதியும் இயைந்து, 'கதிரேசராகிய பண்டிதமணி' வழங்கிய விளக்கவுரை என்று பொருள்படுமாறு இப்பெயர் அமைந்துள்ளது.

பண்டிதமணி திருச்சதகம், நீத்தல்விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய மூன்று பகுதிகளுக்கும் உரை எழுதியுள்ளார். இவை தனித்தனி நூல்களாக வெளிவந்துள்ளன. அவர், இறுதியாக, திருவம்மானையில் 'செங்கணெடுமாலும்', 'பாரார் விசும்புள்ளார்', 'இந்திரனும் மாலயனும்' என்னும் மூன்று பாடல்களுக்கும் எழுதியிருக்கும் உரைகள் வெளிவரவில்லை.

பண்டிதமணி திருவாசகத்தில் சில பகுதிகளுக்கு மட்டுமே உரை எழுதியிருக்கிறார். ஆனாலும் அப்பகுதிகளின் உரையிலேயே பிற்பகுதியிலுள்ள சில பாடல்களுக்கும் உரை கூறியுள்ளார். இச்சிறப்புகளையெல்லாம் நோக்க, நூலாசிரியரோடு ஒத்த பாராட்டுக்குரிய உரையாசிரியர் எனப் பண்டிதமணியைக் கூறலாம்.

ஒவ்வொரு பாடலுக்கும் பண்டிதமணி கருத்துரை, பதவுரை, விளக்கவுரை என மூன்று உரைகளை எழுதியுள்ளார். விளக்க உரையில்

சொல்நயம், பொருள்நயம் ஆகியவற்றில் தக்க மேற்கோள்களும் இலக்கண அமைதியும் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

திருச்சதகம், ஒவ்வொன்றும் பத்துப் பாடல்களையுடைய பத்துப் பிரிவு கொண்ட நூறு திருப்பாட்டுக்களாகும். பண்டிதமணி இப்பத்துக்களைப் பதிகமெனப் பெயர் தந்து சதக நுதலிய பொருள், பதிக நுதலிய பொருள் எனப் பகுத்துக் கொண்டு திருப்பாட்டு ஒவ்வொன்றையும் அப்பொருள்களோடு இயைத்து விளக்கியிருக்கின்றார். திருச்சதக உரைக்கு 20.05.1950இல் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார், ஆராய்ச்சித் துறையில் வெளியான சிறந்த நூலுக்கு உரிய பரிசை வழங்கினர்.

திருச்சதகத்தின் அடுத்த பிரிவான நீத்தல்விண்ணப்பத்தின் உரையை உடல்நிலை மோசமான நிலையிலும் வெளியிட்டார். இதன் உரையும் பலராலும் போற்றி வரவேற்கப்பட்டது; பொது மக்களாலும் விரும்பிப் பயிலப் பெற்றது. இத்தகைய ஆதரவு இருந்ததால், தம் முதுமைத் தளர்ச்சியைப் பண்டிதமணி பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து திருவெம்பாவைக்கு உரிய விரிவுரையை எழுதினார்.

திருவெம்பாவை உரையில் திருவெம்பாவை வரலாற்றையும் தைந்நீராடல், மார்கழி நீராடல் பற்றிய செய்திகளையும் பண்டிதமணி விளக்கிக் கூறியிருக்கிறார்.

## வடமொழிப்புலமை

பண்டிதமணி, தருவை நாராயண சாஸ்திரியாரை ஆசிரியராகக் கொண்டு வடமொழி பயின்றதன் பயனாகத் தமிழுக்குப் பல பயன்கள் விளைந்துள்ளன என்பது மிகையன்று.

பெருங்காப்பியங்களிலும் சிறந்த நாடகங்களிலும் பண்டிதமணிக்கு ஈடுபாடு இருந்தது. இந்த ஈடுபாட்டால் தான், வடமொழியைப் பயிலவேண்டும் என்ற அவா இவருக்கு ஏற்பட்டது. அம்மொழியிலுள்ள நாடகங்களை மட்டுமன்றி நீதிநூல்கள், காவியங்கள், அலங்கார நூல்கள், பாணினி வியாகரணம் ஆகியவற்றையும் முறையாக மிக ஆழ்ந்து பயின்றார். அதன் பயனாக, வடமொழிப் பெரும்புலவர்களும் இவரை மிகவும் மதித்தார்கள். வடமொழிக் கழகங்கள் இவரைப் போற்றிச் சிறப்பித்தன. வடமொழி விடைத்தாள்களைத் திருத்தும் தேர்வாளராகவும் இவர் பணியாற்றினார். இவரது வடமொழிப் பயிற்சியை நன்குணர்ந்து இவரை மதுரையிலுள்ள இராமேச்சுர அறநிலைய வடமொழிக்

கல்லூரியின் (Rameswaram Devasthana Sanskrit College) ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் நியமனம் செய்தனர்.

வடமொழி அறிவின் பயனாக, பண்டிதமணி தம் சொற்பொழிவுகளைக் காளிதாசர் போன்ற வடமொழிப் புலவர்களின் செய்யுள் நலங்களை எல்லாம், தமிழ்ப் பாடல்களுடன் வைத்துச் சீர்தூக்கிக் கேட்போர் வியக்கும்படி செய்து வந்தார். இவருடைய சொற்பொழிவுகள் தனிச்சிறப்புடன் விளங்கின.

தமிழ்நூல்கள் அனைத்தும் வடமொழியிலிருந்து வந்தன என்றும் வடமொழிக் காவியங்களின் மேன்மை தமிழில் இல்லை என்றும் தமிழ்ப் புலவர்களாலும் கூடக் கருதப்பட்ட காலத்தில், பண்டிதமணி அக்கருத்துப் பிழையென்பதைப் பலரும் அறியக் கூறினார். பல சமயங்களில் அவர் வட நூல்களையும் தமிழ்நூல் களையும் ஒப்பிட்டு விளக்கித் தமிழின் மேன்மையை நிலைநாட்டி யிருக்கிறார். இது, இவரின் தமிழ்ப் பற்றை விளக்குகிறது.

பண்டிதமணி வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த நூல்கள் யாவும் சிறந்த முறையில் முதல் நூலின் உட்பொருளைத் தரும் சிறப்புடையன. இவர் மொழிபெயர்த்துள்ள 'பிரதாபருத்திரீயம்', 'மாலதீ மாதவம்' என்னும் இரு நூல்களும் அச்சிடப்படவில்லை. ஏனைய நூல்களில் 'அர்த்த சாஸ்திர மொழிபெயர்ப்பு' இவருடைய இறுதிக்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பெற்றது.

மற்றைய நூல்கள், 'உதயண சரிதம்', 'சுலோசனை', 'மண்ணியல் சிறுதேர்', 'சுக்கிர நீதி' என்பன ஆகும்.

'சுலோசனை' என்பது ஒரு சிறுகதை; ஒரு கற்பரசியைப் பற்றியது; அவலச்சுவை நிறைந்தது. இம்மொழிபெயர்ப்பு பண்டிதமணியின் அழகிய உரைநடைக்குச் சிறந்த சான்றாகும்.

காளிதாசர் இயற்றிய நாடகங்களில் சிறந்து விளங்கும் சாகுந்தலம் என்னும் நூலை வடமொழியிலிருந்து மறைமலையடிகள் மொழிபெயர்த்துத் தமிழுக்கு ஈந்தது போலப் பண்டிதமணி மிருச்சகடிக'த்தைச் சிறந்த முறையில் மொழிபெயர்த்தார். இம்மிருச்சகடிகமே வடமொழி நாடகங்களில் எல்லாம் காலத்தால் முந்தியது. இந்நாடகம் பலரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டது. இதனை ஹாவர்ட் பல்கலைக்கழகத்தார் வெளியிட்டனர். நியூயார்க் முதலிய இடங்களில் அரங்குகளில் நாடகமாக நடிக்கப் பெற்றது. இத்தகைய ஒப்பற்ற இலக்கியத்தைத் தமிழில் தந்தபோது,

'மண்ணியல் சிறுதேர்' என்னும் தமிழ்ப் பெயரிலேயே மொழிபெயர்த்தார். இந்நூல் இவருடைய புலமைக்கு மட்டுமன்றி, எல்லையற்ற தமிழ்ப் பற்றுக்கும் தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது வடமொழிச் சொற்களை வழங்க வேண்டியதில்லை என்னும் சீரிய கொள்கைக்கும் சான்றாக அமைகிறது.

பொருளைப் பற்றித் தனித்துக் கூறும் நூல்கள் தமிழில் குறைவாக உள்ளன என்பதை உணர்ந்த பண்டிதமணி அதனை நிறைவாக்க, வடமொழியில் வியாழன், வெள்ளி, சாணக்கியன் ஆகியோர் இயற்றிய நூல்கள் நினைவில் வந்ததன் விளைவாக, 'வெள்ளி' இயற்றிய 'ஔசநசம்' என்னும் பரந்த நூலின் சாரமாகிய 'சுக்கிர நீதி'யைத் தமிழில் மொழிபெயர்த்தார். 24.3.1924இல் உ.வே.சா., சுக்கிரநீதிக் கையெழுத்துப் படியை வாசித்த பின் அவர் பாராட்டியதால் நூலை விரைந்து முடிக்க வேண்டுமென்ற எண்ணம் பண்டிதமணிக்கு ஏற்பட்டது. சன்மார்க்க சபையின் வாயிலாக இந்நூல் அண்ணாமலை செட்டியாரால் வெளியிடப்பட்டது. சுக்கிரநீதி ஒரு நீதி நூல் என்பதால் பெரும்பாலும் அரசியலைப் பற்றியும் ஓரளவு வருணாச்சிரமத்தைப் பற்றியும் கூறிச் செல்கிறது. பண்டிதமணி ஏற்ற இடங்களில் தொடர்புடைய தமிழிலக்கிய மேற்கோள்களையும் குறள் அடிகளையும் ஒப்பிட்டுக் காட்டியது அவரின் மொழி பெயர்ப்பின் தனிச்சிறப்பு ஆகும். இந்நூலின் அருமை பெருமை அறிந்து 1926ஆம் ஆண்டு சென்னை அரசு பாடநூல் இலக்கிய மன்றம் (Madras School Book and Literature Society) பரிசில் வழங்கியது.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணி

பண்டிதமணி 1934ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்றார். இதற்கு முன்னரே தமிழ்ப்பகுதிக்கு அறிவுரை கூறும் சில குழுக்களில் அவர் உறுப்பினராக இருந்தார். பண்டிதமணி ஆசிரியராகச் சேர்ந்த போது அவருக்கு வயது 53. பண்டிதமணியிடம் இயல்பாய் அமைந்த இனிய சுபாவமும் எந்த நூலையும் மாணவர் மனங்கொள்ளும் வகையில் பல்வகைச் சுவையும் சொட்டச் சொட்டப் பாடம் சொல்லும் திறமையும் மாணவர் அனைவரையும் காந்தமென ஈர்த்தன. அரிய நூல்களையும் எளிய முறையில் அழுத்தம் திருத்தமாக மாணவர் மனத்தில் பதியும் வண்ணம் கற்பிக்கும் ஆற்றல் இவரிடம் இருந்தது. பேரிலக்கியம் மட்டுமன்றி உரைநடைப் பகுதி, துணைப் பாடங்கள் ஆகியவற்றையும் மிக அழகாக விளக்கமாக நடத்தும் திறம் உடையவர் பண்டிதமணி.

பண்டிதமணி தமிழ் விரிவுரையாளராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும் பத்தாண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணி ஆற்றினார். பேராசிரியராக இருந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்த்துறைத் தலைவர் என்ற அளவில் பல அலுவல்களை ஆங்கில மொழியிலேயே செய்ய வேண்டியதாக இருந்தது. அம்மொழியறிவு பெறாதவரும் திறம்பட ஆட்சிபுரியலாம் என்பதற்குப் பண்டிதமணி எடுத்துக்காட்டாவார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் சென்னை, மைசூர், திருவனந்தபுரம் பல்கலைக்கழகங்களிலும் பாடப் புத்தகக்குழு, தேர்வுக்குழு முதலியவற்றில் தலைவராகவும் உறுப்பினராகவும் பலமுறை பணியாற்றியதோடு, அண்ணாலைப் பல்கலைக்கழகப் பேரவை (Senate), கல்விக்குழு (Academic council) ஆகியவற்றிலும் உறுப்பினராகவும் தொண்டாற்றி உள்ளார்.

பண்டிதமணி, தம் ஊருக்குச் சென்று ஓய்வு பெற்றிருக்கும் போதும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் தமிழ்ப்பணி செய்ய அழைத்ததற்கு இணங்கப் பண்டிதமணி தமிழாராய்ச்சி அறிவுரை யாளராகப் பொறுப்பேற்றார். அப்போது வடமொழியிலிருந்து கௌடில்யரின் 'அர்த்தசாஸ்திர'த்தை மொழிபெயர்த்தார். அந்நேரம் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.

பண்டிதமணி பல்கலைக்கழகத்தில் பல பணிகளில் ஈடுபட்டதோடு அல்லாமல் வெளியிலும் தமிழ்ப்பணி செய்து வந்தார். இவர், இரு மன்றங்களை அமைத்தார். அவை, அண்ணாமலை நகர் மணிவாசக மன்றமும் தில்லைத் தமிழ்க் கழகமும் ஆகும்.

உடல்நலக் குறைவினால் 1946இல் பண்டிதமணி பதவியிலிருந்து விலகிக் கொண்டார். பண்டிதமணியின் வாழ்நாளில் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலமே மிகச் சிறப்பானது எனலாம்.

## பெற்ற பட்டங்கள்

வித்துவான் கதிரேசச் செட்டியாருக்குப் 'பண்டிதமணி' என்னும் பட்டம் சன்மார்க்க சபையில் தான் கொடுக்கப் பெற்றது. பிற்காலத்தில் முதுபெரும் புலவர், மகாமகோபாத்தியாயர், சைவசித்தாந்த வித்தகர் போன்ற பல பட்டங்கள் கிடைக்கப் பெற்றாலும் 'பண்டிதமணி' என்ற பட்டமே இவரின் பெயருடன் இரண்டறக் கலந்து, இயற்பெயரான

கதிரேசன் என்பதையே மக்கள் மறந்துவிடும் அளவுக்கு இன்றளவும் நின்று நிலவி வருகிறது.

"பண்டிதமணி" என்ற இப்பட்டமானது, சன்மார்க்க சபையின் 16ஆம் ஆண்டு விழாவில் 25.8.1925இல் உ.வே.சாமிநாதஐயர் தலைமையில் மகாவித்துவான் ரா. ராகவையங்கார் முன்னிலையில் இவரின் புலமையையும் சொல்லாற்றலையும் மொழிபெயர்க்குந் திறனையும், பாராட்டி மதுரை, கரந்தை ஆகிய தமிழ்ச்சங்கங்களின் ஒப்புதலோடு வழங்கப்பெற்றது.

அரசியலார் 'மகாமகோபாத்தியாய'ப் பட்டம் ஓர் இனத்தவர்க்கே உரியது என்ற கருத்தால், அதற்குப் பதிலாகப் பண்டிதமணிக்கு 'ராவ்பகதூர்' என்ற பட்டத்தை வழங்க விரும்பியபோது பண்டிதமணி அதனை ஏற்க மறுத்ததும் குறிப்பிடத்தக்கது. ஆயினும் அரசு, பண்டிதமணியின் பெரும் புலமையைப் பாராட்டி, 'மகாமகோபாத்தியாயர்' என்ற பட்டத்தை 1942ஆம் ஆண்டு கொடுத்துச் சிறப்பித்தது. அப்பட்டத்திற்குரிய விருதுகள் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவன்று கவர்னர் முன்னிலையில் பண்டிதமணிக்கு வழங்கப்பட்டன.

சன்மார்க்க சபை தொடங்கிய 1909ஆம் ஆண்டு முதல் தாம் காலமாகிய 1953ஆம் ஆண்டுவரை பண்டிதமணி அச்சபையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 1934ஆம் ஆண்டு பண்டிதமணி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குப் பணியாற்றச் சென்றது வரை அதாவது 25 ஆண்டுகள் சபையின் நல்வளர்ச்சியில் நாள்தோறும் ஆர்வம் காட்டி வந்தார். இவருடைய தொண்டுக்கு நன்றி செலுத்தும் வகையில் பண்டிதமணியின் உருவப்படம் 7.7.1940ஆம் ஆண்டு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரால் திறந்து வைக்கப்பெற்றது.

## இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையிலும் பண்டிதமணி தம் காலத்தவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். அக்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார் குடும்பங்கள் 12 அல்லது 13 வயதிலேயே திருமணம் செய்து வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தன. இளமையிலேயே தந்தையை இழந்துவிட்ட காரணத்தாலும், உடற்குறையாலும் பண்டிதமணிக்கு உரிய காலத்தில் திருமணம் நடைபெறவில்லை. அதனால் தம் இரு தம்பிமார்களுக்கும் திருமணம் நடைபெறாமல்

இருப்பதை உணர்ந்த பண்டிதமணி, தாமே முன்னின்று தம் தம்பிமார்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

பண்டிதமணி தம் திருமணத்தைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல், உயர்ந்த நூல்களைக் கற்று இன்புறுவதிலும் சன்மார்க்க சபையின் வளர்ச்சியிலுமே தம் பொழுதைக் கழித்து வந்தார். தம்பிமார்களுக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகளுக்குப் பின்னர், 1912ஆம் ஆண்டு சனவரித்திங்கள் தம் முப்பத்திரண்டாவது வயதில், வேகுப்பட்டி என்னும் சிற்றூரில் வசித்து வந்த அத்தையின் இரண்டாவது பெண்ணான மீனாட்சியைத் திருமணம் செய்து கொண்டார். பல காலம் காத்திருந்ததன் பயனாக இறைவன் இன்னருளால் கொண்டான் குறிப்பறிந்து ஒழுகும் பெண்ணாக மீனாட்சி ஆச்சி விளங்கினார். பண்டிதமணி தம் மரபுக்கேற்ற தொழிலைச் சில இடங்களில் தொடங்கிப் பொருளீட்டினார். தொழில்கள் வெவ்வேறு இடங்களிலிருந்த போதும் தாம் இருக்கும் இடத்திலிருந்தே செம்மையாகப் பணிபுரிந்தார்.

பண்டிதமணிக்குச் சுப்பிரமணியன், கனகசபாபதி, மாணிக்கவாசகன், தியாகராசன் ஆகிய பெயர்களுடைய நான்கு ஆண் மக்களும் மங்கையர்க்கரசி, மீனாட்சி, சகுந்தலை ஆகிய மூன்று பெண்மக்களும் பிறந்தனர். பண்டிதமணி அளவான செல்வத்தோடு கௌரவமாக வாழ்க்கை நடத்தினார். பொருளைப் போற்றி, சிக்கனமாகவே செலவு செய்து, தம் வாழ்க்கையைத் திறம்பட நடத்தினார். இதனால் இவருடைய வாழ்வு இனிமையும் எளிமையும் கலந்து விளங்கியது.

பண்டிதமணி தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து சுவைத்தது போலவே உணவையும் சுவைத்து உண்ணும் இயல்பு உடையவர். உணவு வகைகளை விடப் பண்டிதமணி மிகுதியாக உட்கொண்டது மருந்துகளே எனலாம். பண்டிதமணி உடல்நோயால் அடிக்கடி சுடுசொற்களைக் கூறுவார். அப்போதெல்லாம் அன்புக்கடலாக இருந்து இன்சொல் கூறி, அவருக்குத் துணைபுரிந்தவர் அவருடைய மனைவி மீனாட்சி ஆச்சியார் ஆவார். பண்டிதமணியின் உயர்வு அனைத்திற்கும் இந்த அம்மையார் பெருங்காரணமாக இருந்திருக்கிறார். 26.8.1945இல் அண்ணாமலை நகரில் இருந்த போது மீனாட்சி ஆச்சியாரின் மறைவு பண்டிதமணிக்குப் பெரும் கவலையை உண்டாக்கியது. அதன் பின்பு பண்டிதமணியின் உடல் நலம் மிகவும் கெட ஆரம்பித்தது. இரத்தக் கொதிப்பு, வாத நோய் ஆகியவை வாட்டின. இதனால் நடக்க முடியாமல் கைவண்டியில் மட்டுமே செல்ல வேண்டியதாயிற்று. நோய் பெருகியதால் சிந்தனைக்குரிய

நேரம் குறைந்தது. பண்டிதமணி அதிகமாக விரும்பியது இனிய பேச்சு, பொருள், சுவையான உணவு ஆகியன. அவர் விரும்பாதது, பிழைபட்ட நடை, குழுவாக நண்பர்கள் சிலர் சேர்ந்து கொண்டு ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்வது ஆகியன.

தமிழுக்கு முழுமையாகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த பண்டிதமணி, விசய ஆண்டு ஐப்பசித் திங்கள் எட்டாம் நாள் (24.10.1953) வழக்கம்போலத் தம் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கும் போது மூச்சுத் திணறல் ஏற்பட்டு, மாலை 3 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

## துணை நூல்கள்


1. பண்டிதமணி, சோமலெ, ஒளி பதிப்பகம், மதுரை, 1971.
2. மணிமலர், பண்டிதமணி முதுபெரும்புலவர் திருவாளர் மு. கதிரேசன் செட்டியார் அவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் செட்டிநாட்டரசர் திருமிகு ராஜா. சர். மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைமையில் அளித்த கட்டுரைத் தொகுதி, பதிப்பு 1941.


******

# படைப்பிலக்கியப் பணி

நா. வள்ளி

செட்டிநாடு தமிழ் உலகுக்குத் தந்த கொடை பண்டிதமணி. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதநேயத்துக்குக் குரல் கொடுத்த கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊரினர். 'பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றம்' எனக் கல்வெட்டுக்கள் கூறும் பூங்குன்றத்தின் இன்றைய பெயர் மகிபாலன்பட்டி. அவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டி ஆங்கிலேய அரசு 1942இல் 'மகாமகோபாத்தியாய' என்ற பட்டத்தை வழங்கிய போது நடந்த நிகழ்ச்சி ஒன்றைச் சோமலெ தம் நூலில் குறிப்பிடுகிறார். 'பட்டத்திற்குரிய சான்றிதழில் இயற்பெயர் மட்டுமே எழுதுவது பிரிட்டிஷ் அரசியலாரின் மரபு. அதற்கு மாறாகக் கதிரேசனார்க்கு வழங்கப்பெற்ற இதழில் 'பண்டிதமணி முத்துக்கருப்பன் கதிரேசன் செட்டியார்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. பண்டிதமணி என்பதும் அவரது இயற்பெயரின் ஒரு பகுதி என்று உரிய அலுவலர்கள் எண்ணியிருக்க வேண்டும். அந்த அளவிற்குப் பண்டிதமணி என்ற பெயரே இயற்பெயர் போல நிலைத்து விட்டது.

சிறந்த பேராசிரியராகவும், சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கிய பண்டிதமணி சிறந்த படைப்பாளியாகவும் விளங்கினார். பொதுவாகச் சிறந்த பேச்சாளர்கள் சிறந்த எழுத்தாளர்களாக இருப்பதில்லை. சிறந்த எழுத்தாளர்கள் சிறந்த பேச்சாளராக இருப்பதில்லை. ஆனால் பண்டிதமணி, கேட்பார் பிணிக்கும் தகையவாய்ப் பேசும் ஆற்றல் மிக்கவராகவும் சிறந்த படைப்பாளியாகவும் விளங்கினார். பன்முக ஆற்றல் வாய்ந்த பண்டிதமணியின் படைப்புகளை உரைநடைநூல்கள், செய்யுள் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், திருவாசகத்தின் சில பகுதிகளுக்கு அவர் எழுதிய கதிர்மணி விளக்க உரைகள் எனப் பகுத்துக் காணலாம்.

**உரைநடை நூல்கள்**

உரைநடைக் கோவை I சமயம்
உரைநடைக் கோவை II இலக்கியம்
நாட்டுக் கோட்டை நகரத்தாரின் சீர்திருத்தம்
மணிமலர்த் திரட்டு
நூலாக வெளிவராத நூற்றுக்கணக்கான கட்டுரைகள்

## செய்யுள் நூல்கள்

பதிற்றுப் பத்தந்தாதி
பண்டிதமணியின் பாடல்கள்
பண்டிதமணியின் கடிதங்கள்
(இவற்றில் பல நூல்வடிவம் பெறவில்லை)

## பதிப்பித்த நூல்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழிசைப் பாடல்கள் வரிசை
மகாவித்துவான் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் தொகுத்த நாட்டுக் கோட்டை வரலாறு

## மொழிபெயர்ப்பு நூல்கள்

உதயண சரிதம்
சுலோசனை (சிறுகதை)
மண்ணியல் சிறுதேர் (நாடகம்)
மாலதீ மாதவம் (நாடகம்)
கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்
சுக்கிர நீதி (சுக்கிராச்சாரியார் இயற்றிய ஔசநசம் என்னும் நீதி நூலின் தமிழாக்கம்)
பிரதாபருத்திரீயம் (நாடக நூல்)

## கதிர்மணி விளக்க உரை

திருவாசகம் - திருச்சதகம்
திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம்
திருவாசகம் - திருவெம்பாவை

## உரைநடை நூல்கள்

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் பண்டிதமணி 'நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சீர்திருத்தம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். அச்சொற்பொழிவைச் சபை 1911இல் நூலாக வெளியிட்டது. இதுதான் பண்டிதமணியின் முதல் நூலாகும். கல்வி, சமயம், தமிழ், விவாகமுறை, வியாபாரம், தருமங்கள், ஒற்றுமை என்ற தலைப்புகளில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் காலச்சூழ்நிலைகளுக்கு ஏற்பப் பின்பற்ற வேண்டிய சீர்திருத்தங்களைத் தெளிவுடனும் துணிவுடனும் இந்நூலில் சொல்லியிருக்கிறார்.

அன்று, பெண்களுக்குக் கல்வி என்பது அதிலும் நகரத்தார் பெண்களுக்குக் கல்வி என்பது முயற்கொம்பாக இருந்த காலத்தில் குடும்பத்தைச் சிறப்பாகப் பேணுதற்கு நகரத்தார் பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்று சான்றுகளோடு எடுத்துக் காட்டியுள்ளார்.

அதுபோல நகரத்தார்களின் விவாக முறையைப் பற்றி எழுதிய கருத்தும் சிந்திக்கத்தக்கதாகும். அக்காலத்தில் பெண்ணைப் பெற்றவர்கள் பொன்னையும் பொருளையும் பெற்றுக் கொண்டு, பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பது வழக்கமாயிருந்தது. அதனால் நகரத்தார் சமுதாயத்தில் ஆண்களுக்குத் திருமணம் நடப்பது என்பது ஒரு பெரிய சமுதாயப் பிரச்சினையாக இருந்தது. அப்பிரச்சினையைக் கையில் எடுத்துக் கொண்டு ஆராய்ந்து தீர்வும் சொல்லுகிறார் பண்டிதமணி. ‘மிகுதியாகப் பொருளை வாங்கிக் கொண்டு பெண் கொடுத்தலும் அப்பொருளால் தம் சீவனகாரியம் நடைபெற விரும்புதலும் மிக்க பாவச் செயலாகுமென்று அறநூல்கள் கூறுகின்றன’ என மனுஸ்மிருதி போன்ற வடமொழி நூல்களையும் தமிழ் நூல்களையும் மேற்கோள் காட்டிப் பெண் வீட்டார் பொன்னும் பொருளும் வாங்குவது தவறு என்று சுட்டிக் காட்டியுள்ளார். தாம் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், தம் சமூகத்தில் காணப்பட்ட குறைகளைச் சுட்டிக்காட்ட அவர் தயங்கவில்லை. இது போன்ற சமூக அக்கறையை இந்நூல் முழுக்கக் காணலாம்.

அவர் வாழ்ந்த காலம் நகரத்தார்கள் இலங்கை, பர்மா, மலேயா போன்ற கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று பெரும்பொருள் ஈட்டிய காலம். அக்காலத்தில் நகரத்தார்கள் ஈட்டியதில் ஒரு பகுதியை அறப்பணிகளுக்குச் செலவிட்டனர். குறிப்பாகக் கோயில் திருப்பணிகளுக்கு ஏராளமாகச் செலவிட்டனர். ‘தருமங்கள்’ என்ற தலைப்பில் அதைப் பற்றியெல்லாம் எடுத்துக்கூறிய பண்டிதமணி அவ்வாலய தருமம் செய்தற்குரிய இடத்தை நோக்கி அளவோடு செய்தலே போதியதாகும் என அஞ்சாநெஞ்சினராய் எடுத்துக்கூறிக் கால நிலைக்கு ஏற்ப அறங்களின் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும், இலவச மருத்துவமனை, கல்விச்சாலை போன்றவற்றை ஏற்படுத்தினால் நல்லது என்றும் கூறுகிறார். ‘எவ்வகையறங்களையும் தவறாமல் செய்யும் எண்ணமுடைய நம்மவர்கள் இத்தரும காரியத்தை ஏன் பிறருக்கு விட வேண்டும்?’ என்றும் கேள்வி எழுப்புகிறார்.

நுண்மாண்நுழைபுலம் மிக்க, நாவீறு படைத்த சொற்பொழிவாளராக விளங்கிய பண்டிதமணி பற்பல இடங்களில்

நிகழ்த்திய சொற்பொழிவுகளைத் தொகுத்து உரைநடைக்கோவை-சமயம், உரை நடைக்கோவை - இலக்கியம் என்று இரண்டு நூல்களாக வெளியிட்டுள்ளனர் சபையார். உரைநடைக்கோவை (இலக்கியம்) நூலை,

'என்னை ஈன்றெடுத்து என் உடல்நலம் பேணி
இருந்தமிழ்ப் புலவர்தம் குழுவில்
துன்னியான் இருப்பக் கண்டுள மகிழ்ந்து
சொலற்கரும் உதவிகள் புரிந்து
முன்னையான் செய்த நல்வினைப் பேற்றின்
அன்னையின் அருளை நினைவுறீஇ
உருகற்கு அமை அடையாள மீதால்'

என்ற பாடல் மூலம் ஐயிருதிங்கள் சுமந்து அங்கம் நோவப் பெற்றெடுத்து வளர்த்த அன்னைக்குக் காணிக்கையாக்கியுள்ளார். இந்நூலைப் படித்த சிலர் பண்டிதமணியின் நடை கடினமாக உள்ளது என்று அவரிடமே கூறியிருக்கின்றனர். நடையின் சிறப்பைக் காட்ட வேண்டுமென்ற எண்ணத்தாலும், நுட்பமான பொருள் நயத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற விருப்பத்தாலும் தாம் இவ்வாறு எழுத நேர்ந்தது என்று அவர் அதற்குப் பதில் கூறியுள்ளதாக அறிகிறோம். பிற்காலத்தில் அவரது நடை ஓரளவு எளிமையாக அமைந்தது.

அனைவரும் அறிந்த பாடலாக இருப்பினும் இதுவரை யாரும் கேட்டிராத நயங்களை வெளிப்படுத்தும் திறம் பண்டிதமணிக்கு உண்டு. உதாரணத்திற்கு ஒன்றைக் காண்போம். சென்னையில் நடந்த குறுந்தொகை மாநாட்டின் தலைமையுரை, உரைநடைக்கோவை இரண்டாம் பகுதியின் ஏழாவது கட்டுரையாக அமைந்துள்ளது. அக்கட்டுரையில் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு அவர் காட்டியுள்ள நயம் நினைந்து நினைந்து இன்புறற்குரியதாகும். ஐந்திணை ஒழுக்கம் குறுந்தொகையின் பொருளாதலின் அப்பொருளை இக்கடவுள் வாழ்த்துப்பாடல் உட்பொருளாகக் கொண்டுள்ளது என்று அவர் விளக்கும் போது நாம் வியப்படைகிறோம்.

'தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத்தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கை குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே'

என்ற குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாடல் இந்நூல் முகத்தே திலகம் போல் ஒளிர்கின்றது. இப்பாடலின் தூய்மையை நன்கு ஆராய்ந்த யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் எல்லாக்குற்றமும் தீர்ந்த செய்யுட்கு மேற்கோளாக இதனை எடுத்துக்காட்டியுள்ளார். “நானிலத்து ஐந்திணை ஒழுக்கமும் இந்நூல் நுதலிய பொருளாதலின் அப்பொருளைக் கருக்கொண்டுள்ளது இப்பாடல்” என்று கூறும் பண்டிதமணி அதைப் பின்வருமாறு விளக்குகிறார். ‘இங்ஙனம் நூல் நுதல் பொருளைத் தன்னகத்து அடக்கி முதற் பாடல் புலப்படுத்துமாற்றைத் திருக்கோவையாரில் ‘திருவளர் தாமரை’ என்னும் முதற் செய்யுட்குப் பேராசிரியர் செய்த நல்லுரையானும் உணரலாம். ‘தாமரை புரையும் காமர் சேவடி’ என்புழி மருதநிலத்துக் கருப்பொருளாகிய தாமரையும், ‘பவழத்தன்னமேனி’ என்புழி நெய்தல் நிலத்துக் கருப்பொருளாகிய பவளமும், ‘குன்றியேய்க்கும் உடுக்கை’ என்புழி முல்லைக்கு உரியதாகக் கருதப்படும் குன்றிமணிக் கொடியும், ‘குன்றின் நெஞ்சுபக எறிந்த’ என்றதனால் குறிஞ்சிக்குரிய மலையும் புலப்படுத்தப்பட்டுள்ளன. பாலைக்கெனத் தனியே நிலமின்மையானும் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிவம் கொள்ளும் ஆதலானும் அம்முறையில் குறிப்பாக அந்நிலமும் புலப்படுக்கப்பட்டதெனலாம். குன்றியையும் குன்றத்தையும் ஒரே அடியில் இயைய வைத்துள்ள குறிப்பும் இதனை வலியுறுத்துவதாகும்” என்ற விளக்கத்தைப் படிக்கும் போது நுணுகி நுணுகி ஆராயும் அவரது மதி நலம் புலனாகின்றது.

பண்டிதமணியின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் செட்டிநாட்டு அரசர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தலைமையில் வாசித்தளித்த கட்டுரைகள் எட்டும் பண்டிதமணியின் கட்டுரைகள் நான்கும் ஆகப் பன்னிரண்டு கட்டுரைகள் ‘மணிமலர்த்திரட்டு’ என்னும் பெயரால் நூலாக வெளிவந்துள்ளன. அதில் பண்டிதமணியின் கட்டுரைகளுள் ஒன்று இசையின்பம் பற்றியது. தமிழகத்தில் வடமொழிக் கீர்த்தனைகளும், தெலுங்குக் கீர்த்தனைகளும் அதிகமாகப் பாடப்பட்டுத் தமிழிசை புறக்கணிக்கப்படுவதைக் கண்டு பொறுக்காத பண்டிதமணி, ‘நம்நாட்டு மொழியாகிய தமிழோ இயற்கையிலே இனிமை வாய்ந்தது. இசைக்குப் பெரிதும் ஏற்றதொன்று. இவ்வியைபு நோக்கியன்றோ அப்பர் தம் தேவாரத்தில், ‘தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்’ என்றருளினார். நாளடைவில் தமிழிலுள்ள இனிய இசைப்பாட்டுகள் எடுத்தாளப்படாமையானும், புதியன ஆக்குதற்கு ஊக்கமுறுத்துவார் இன்மையானும் இக்காலத்து இசைப்புலவருட் பலர் மொழியறிவு செவ்வையாக வாய்க்கப் பெறாதவராக இருக்கின்றமையானும்

பிறமொழிப் பாடல்களை வரவேற்றுத் தம் மொழிப்பாடல்களைப் புறக்கணிக்கும் இயல்பு தமிழர்களிடையே பெருகி வரலாயிற்று' என்று மனம் வருந்திக் கூறுகிறார். தமிழில் பண்டைக்காலந் தொட்டு இசை ஒரு கூறாக நின்று பெருமை செய்வது என்றும், இத்தகைய தமிழிசையை வளர்த்தற்குச் செட்டிநாட்டு அரசர் மேற்கொண்டுள்ள முயற்சி பாராட்டத்தக்கதென்றும் அதன் விளைவாகத் தமிழிசை வளர்ச்சியடையும் என்றும் கூறி இறுதியில்,

> **'இன்ப வுணர்ச்சி யினிய தமிழிசைக்கே**
> **என்ப துணர்மி னிருநிலத்தீர் – துன்பொழிவு**
> **வாய்ப்ப முயன்மின் மருள்மின் மாசிரிய**
> **ஏற்ப விழிமி னெழுந்து'**

என்ற வெண்பா மூலம் அறியாமையில் உறங்கிக் கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்புகிறார். அடுத்த கட்டுரையில், கம்பன் கவி நலத்தில் தோய்ந்த பண்டிதமணி,

> **'ஆன்றதமிழ்க் கம்பன் அரிய இலக்கியத்தை**
> **ஊன்றிப் பயில உளமினிக்கும் – தோன்றுசுவை**
> **ஊற்றாகும் செஞ்சொல் உரைக்குங்கால் நாவினிக்கும்**
> **ஏற்ற செவியினிக்கு மே'**

என்கிறார். இவரது படைப்புகளுக்கும் இப்பாடல் பொருந்தும். தமிழ்மொழியிலும் அங்கதம் உண்டு என்று முதன் முதலில் வெளியிட்ட ஆராய்ச்சியாளர் இவரே.

பண்டிதமணியின் தமிழ் குறித்து, "வண்டின் யாழும், குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், அருவியின் முழவும் இன்னபிறவும் ஒன்றி வழங்கும் இன்பத்தைச் செட்டியாரின் தமிழ் வழங்கும்" என்று திரு.வி.க. கூறுவது முற்றிலும் உண்மை. தமிழுக்குத் துறைதோறும் தொண்டு செய்து தமிழன்னையின் தளர்ச்சியை நீக்கித் தமிழுக்குக் 'கதி'யாக விளங்கிய பண்டிதமணி மு. கதிரேசனாருக்கு இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் உள்ள இடம் விரிவானது.

## துணை நூல்கள்


1. 'பண்டிதமணி' – ஆசிரியர் சோமலெ
2. பண்டிதமணியின் நாடகத்தமிழ் – புலவர் ஆ. பழநி
3. மண்ணில் சிறுதேர் – முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

4. திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம் - கதிர்மணி விளக்கம்.

5. திருவாசகம் - திருவெம்பாவை - கதிர்மணி விளக்கப் பேருரை.

6. சபைக் கட்டுரைகள் - சன்மார்க்க சபை வெளியீடு

7. பண்டிதமணியின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியும் பாராட்டும், கருமுத்து தியாகராஜச் செட்டியார் வெளியிட்டது.

8. உரைநடைக்கோவை - இலக்கியக்கட்டுரைகள் - மகாமகோபாத்தியாய முதுபெரும்புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

9. மணிமலர்த்திரட்டு - பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார்.

10. செட்டிநாடும் செந்தமிழும் - சோமலெ

11. நகரத்தார் கலைக்களஞ்சியம் - பதிப்பாசிரியர் ச. மெய்யப்பன்.

12. சுலோசனை - பண்டிதமணி மு. கதிரேசன்.

13. நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சீர்திருத்தம் - மு. கதிரேசச் செட்டியார்.

******

# தமிழாய்வுப் பணி

தி. கமலி

தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தைத் தமது படைப்புகளின் ஊடாகவும், தமிழ்ப் பேராசிரியராகத் தாம் ஆற்றிய பணியின் ஊடாகவும், தமது சொற்பொழிவுகளின் மூலமாகவும், வாழ்வியல் செயல்பாடுகளின் மூலமாகவும் தமிழக மக்களுக்குக் கொண்டு சேர்ப்பித்த ஆளுமைத் திறன் மிக்கவர் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார். தனவணிகர்தம் இலக்கினைக் கல்வியின்பால் திருப்பிய பெருமை இவருக்கு உண்டு.

பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளும், வகுப்பறைக்குள்ளும் மட்டுமே கட்டுண்டு இருப்பதன்று இலக்கியக் கல்வி. வார விடுமுறை நாட்களிலும் ஆர்வலருக்கு அளிக்கப்பட வேண்டுவது. தமிழறிஞர்கள் கலந்து உரையாற்றுவதற்கான கழகங்கள், நடத்தப்படும் கருத்தரங்குகள் என்று விரிந்த தளத்தினது என்பதைத் தம் வாழ்வால் உணர்த்தியவர் அவர். இன்றைய பல்கலைக்கழகப் பேராசிரியர்களது பன்முகப் பரிமாணப் பணியாற்றலுக்குத் தக்க, 'முன்மாதிரி'யாகக் கொள்ளற்குரிய முன்னோடியாவார்.

கடுமையான உழைப்பு அவரைப் பல்துறை வல்லுநராக்கியது. ஒரு புதிய இலக்கிற்கு, நெறி சார்ந்த வெளியையும், இடத்தையும், ஒடுக்கப்பட்டிருந்த தமிழினத்துக்குத் தமது முழு தார்மீகபலத்துடன் பண்டிதமணி உருவாக்கினார். ஊதியம், பதவி, மதிப்பு என்று எதையும் முன்னிறுத்தாத அவரது ஆய்வுகள், மொழியாக்கங்கள், இலக்கிய ஆக்கங்கள், உரை விளக்கங்கள் என்பன அபூர்வமான தேடல் முயற்சியின் விளைபொருட்கள் ஆகும். அவருக்குச் சமூக மதிப்பையும், பல்கலைக்கழகப் பதவியையும், மைய, மாநில அரசு பட்டங்களையும், உலக அளவிலான வரலாற்றுப் பதிவினையும் தந்திருத்தல் பொருத்தமுடையதேயாம்!

## பண்டிதமணியும் தமிழ்ப்பணியும்

ஆங்கிலேயரின் ஆட்சி வழியிலான ஆதிக்கம், கிறித்தவ சமயஞ்சார்ந்த ஆதிக்கம், பண்பாட்டு மேலாதிக்கம் மூலமான, வெள்ளையர் - கறுப்பர் ஆதிக்கம், ஆளுவோர் - அடிமைகளாய் உரிமையின்றி வாழுவோர் என்ற அதிகார ரீதியிலான ஆதிக்கம்

ஆகியவற்றால் இந்தியச் சமூகம், இந்திய இனம், இந்தியத் தேசத்தின் மொழிகள் ஆக்கிரமிக்கப்பட்டுச் சிதைக்கப்பட்ட வரலாறு பதிவாகியுள்ளது. இத்தகைய தாக்கங்களால் பலியான மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று. நசிந்த இனங்களுள் தமிழினமும் உண்டு. ஆங்கிலேயரது மொழி உயர்வானது என்ற எண்ணம் இருந்தது.

"ஆங்கிலம் ஒன்றையே கற்றார் – அதற்கு
ஆவியோடாக்கையும் விற்றார்
தாங்களும் அன்னியரானார்–இன்பத்
தமிழின் தொடர்பற்றுப் போனார்"

என்று மாயூரம் வேதநாயகம் பிள்ளை தமிழர்களின் ஆங்கிலமோகம் பற்றிப் பாடுவார். ஆம்! அன்று ஆங்கிலம் கற்றோர் தமிழிலிருந்து அகன்று இயங்கினர். தமிழைத் தாழ்வாக மதிப்பிடவும் தயங்கவில்லை. இச்சிதைவை உணர்ந்து, அவ்வுணர்வு வீறுமிக்க எதிர் இயக்கமாக வடிவம் தரித்ததன் வெளிப்பாடே தன்மொழி அல்லது தாய்மொழி மீட்பு இயக்கம் எனலாம். இத்தகைய வரலாற்று இயக்க நிகழ்வுகளை இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழ்மொழி சந்தித்துக் கொண்டிருந்தது. மீட்பு இயக்கத்தின் முதன்மையான பணி மொழித் துப்புரவு இயக்கமாகும். மொழித் துப்புரவு இயக்கங்களை இந்தியாவுக்கு வெளியிலும், உள்ளிலும் பல மொழிகள் சந்தித்தன.

இந்திய பாரம்பரியத்தை அறிய விரும்பிய ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசு 1784-இல் வங்கத்து ஆசிய சங்கத்தை நிறுவியது (Royal Asiatic Society of India). இதன் முதல் தலைவர் நீதிபதி வில்லியம் ஜோன்சு கிரேக்க மொழியிலும், இலத்தீன் மொழியிலும் ஆழமான புலமை பெற்றவர். சமஸ்கிருத மொழிக்கும், கிரேக்க மொழிக்கும் மேலெழுந்த நிலையில் சில ஒற்றுமைகளைக் கண்டு 1787இல் ஆசிய சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழாவில் ஐரோப்பிய மொழிகளுக்கும் சமற்கிருத மொழிக்கும் உறவு காட்டி இந்தோ ஆரிய மொழிக் கொள்கையை (Indo-European Family of Language) அறிவித்தார். இவரது தலைமையிலான குழுவினர், சமற்கிருத நூல்களை ஆங்கிலத்தில் பெயர்த்தனர். இந்தியாவிலும், மேற்கிலும் பரப்பினர். போடன் நிதி உதவியில் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் சமற்கிருதத்துறை நிறுவப்பட்டது. இதில் சேர்ந்த மாக்சுமுல்லர் சமற்கிருதப் (ஆரிய) பண்பாட்டின் உயர்வையும், இந்தோ ஐரோப்பிய மொழிக் கொள்கையையும் மேற்கில் பரப்பினர். இந்தியாவில் நிலவிய சமற்கிருத மொழி உயர்வுக் கருத்தை வங்கத்து ஆசிய சங்கத்தார் ஐரோப்பா வரை விரிவுபடுத்தினர். 1815இல் இந்திய வரலாறு எழுதிய ஆங்கிலேயர், 'ஆரியர் வருகையுடன் இந்தியாவில் பண்பாடு உதயமாகியது என்றும், ஆரியர் அல்லாதார் பண்பாடில்லா

நிலையிலிருந்தனர் என்றும், வேதியர்கள் இந்தியாவின் உயர் மேற்குடியினர் என்றும் சமற்கிருதமொழியை உயர் செம்மொழி என்றும் இந்திய மொழிகளுக்கு எல்லாம் சமற்கிருதமே தாய்மொழி என்றும் நூல்கள் வாயிலாகவும், ஆசிய சங்கக் கிளைகள் வழியாகவும் பரப்பினர். அன்று சிந்துவெளி நாகரிகம் புதை பொருளாய்வில் தெரிய வரவில்லை. சங்க இலக்கியம் அச்சேறவில்லை. பௌத்த, சமண சூக்தங்களும் வெளிவரவில்லை என்பது குறிக்கத்தக்கது. கிடைத்த தரவுகளைக் கொண்டு சமற்கிருத உலகிலேயே அனைத்தையும் உள்ளடக்க முயன்றனர். 1922இல் 'தென்னிந்திய வரலாறு எழுதிய சா.கிருட்டினசாமி ஐயங்காரும், க.அ. நீலகண்ட சாத்திரியாரும் ஆரியர் வருகையுடன் தென்னிந்தியாவில் நாகரிகம் தோன்றியது என்றே திரும்பத் திரும்ப எழுதியதைக் குறிப்பிடலாம்.

1801இல் சென்னை மாநிலத்தில் ஆங்கிலேயர் ஆட்சி உறுதியானது. 1820இல் சென்னையில் ஆளுநர் பொறுப்பேற்ற தாமசுமன்றோ 1822இல் கல்விக்குழுவை நியமித்தார். 1834இல் மாவட்டங்கள் தோறும் இரண்டு பொதுப் பள்ளிகளையும், தாலூக்காக்களில் மொத்தம் 70 பள்ளிகளையும் துவக்கினார். 1835இல் சென்னை மருத்துவப் பள்ளியை நிறுவினார். மாவட்டப் பள்ளிகளில் ஆங்கிலமும், தாலூக்காப் பள்ளிகளில் தமிழும் பயிற்றுமொழி ஆயின. ஆனால் 1835 முதல் மெக்காலேயின் பரிந்துரையின்படி உயர்கல்வியை ஆங்கில வழிக்குத் திருப்பினர். மேனாட்டுக் கல்விமுறை விரிவடைந்தது. எனினும் கல்வி நிலையங்களின் நுழைவுச் சிரமங்கள், கடுமையான கல்விக்கட்டணம் முதலியவற்றால் சமூகத்தின் மிகப்பெரும்பாலான மக்களுக்கு மேல்நாட்டுக் கல்விமுறை எட்டாக் கனியாகவே இருந்தது. வெகு சில சமீன்தார்களும், வைதீகர்களும், மிகவும் வசதியுடையவர்களும் மட்டுமே மேல்நாட்டுக் கல்வியின் பயனைப் பெற்றனர்.

1856இல் இராபர்ட் கால்டுவெல் (1814-1891) 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' நூலை வெளியிட்டுத் தமிழ் தனித்தன்மை உடையது, தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்தது, சமற்கிருதத்திலிருந்து பிறந்தது என்பது அடிப்படையற்றது, திராவிடமொழிகளுள் உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது என்றும், சமற்கிருதம் அல்லாத, 'திராவிட மொழிப் பேரரசு' ஒன்றிருந்ததையும் வெளிப்படுத்தினார். 1852இல் வின்சுலோ தமிழ் அகராதியை வெளியிட்டார். தமிழ் ஒரு பண்பட்ட மொழி; சமற்கிருதக் கலப்பற்ற பண்டைய தமிழ் இலக்கியம் இருந்தது உண்மை' என்று குறிப்பிட்டார். 1865இல் சான் மர்டாக் தமிழ் நூல்களின் அட்டவணையைத் தொகுத்தார். 1857 முதல் சென்னைப்

பல்கலைக்கழகம் உருவாக்கிய பட்டதாரிகள் இலக்கிய மீட்பாளர் களாகவும், மேல்நாட்டு மாதிரி இலக்கியப் படைப்பாளர்களாகவும், சமூகத் தொண்டர்களாகவும், நிர்வாகிகளாகவும் பெருகினர். தமிழ்ப் பாரம்பரியத்தில் கவனத்தைத் திருப்பியோர் பண்டைத் தமிழ் இலக்கியத்தை மீட்க உதவினர்.

இருபதாம் நூற்றாண்டு தாய்மொழிப் பற்றைத் தூண்டுவதாகத் தொடங்கியது. இத்தகைய சூழலில் தமிழுக்கு வலிமை சேர்த்த தமிழ்ச் செம்மல்களுள் பண்டிதமணி முக்கியமானவர்.

> **“செய்யுளின் அழகிலே, அது தரும் இன்பத்திலே**
> **ஈடுபட்டே யான் கலைகளைப் பயின்றேன்;**
> **அல்லது, பொருட்பேறடைவதற்குக் கல்வி ஒரு**
> **சாதனம் ஆம் என்று கருதியாதல், புகழ்பெற**
> **வேண்டும் என்றாதல் யான் கலை பயின்றேன் இல்லை.”**

என்று பண்டிதமணி கூறுகிறார். தமிழுணர்வு அவரிடம் நிறைந்து இருந்தது. தமிழ்ச் செய்யுட்களில் மனம் தோய்ந்து, அதன் மாண்புகளில் திளைக்க அவரால் முடிந்தது. தமிழ், ‘முத்தமிழ்’ என்றழைக்கப்பட்டதன் காரணத்தைச் சொல்லுகையில் நெக்குருகுகின்றார். தமிழிலக்கியப் பற்று அவரது தமிழ்ப்பணிகளில் மிளிர்ந்த வண்ணமே இருந்தது.

தமிழுரைகாரர்கள் என்று பண்டைய தமிழ்ச் சான்றோர்களையும் மதிக்கத் தவறவில்லை பண்டிதமணி. தம் காலத்து வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களிடம் அன்பு பாராட்டியவர். நலிவுற்ற தமிழ்ச் சான்றோருக்கு உதவத் தயங்காதவர். அவரது வடமொழி அறிவு மொழியாக்கஞ் செய்யத் துணை நின்றது. சமய அறிவு திருவாசகத்தைப் பாமரர்க்கும் உணர்த்தத் துணை நின்றது.

பண்டிதமணி காலத்தில் தமிழ்மொழிப் பயிற்சியாலே ஒரு சிறிதும் பொருளீட்ட முடியாத நிலை இருந்தது. தமிழ் கற்றவர்களைப் புகழ்வாரும் அக்காலத்து அரியர்: அந்நிலையில் தமிழைப் புகழ்ந்து, தமிழிலக்கியங்களை மதிக்கும் வண்ணம் - மனங்கொள்ளும் வண்ணம் கற்பித்தத் தனிப்பெரும் ஆசானாகத் திகழ்ந்தவர் அவர். பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு மட்டுமன்றி, மேடைப் பேச்சுகள், சொற்பொழிவுகள் மூலம் பொதுமக்களுக்கும் தமிழ் இலக்கியத்தின் மாண்புகளைக் கொண்டு சேர்த்த மாண்பிற்குரியவர் பண்டிதமணி.

உலகில் உயர்வற உயர்ந்த பெரும் புகழாளரின் பெயர்களைத் தேடிப் பொறிக்கும் அமெரிக்கக் கலைக் களஞ்சியப்

பெருநூலில் (Who's who in the world - Biography, USA) பண்டிதமணி வாழ்க்கைச் சரிதமும் தமிழ்ப் பேராசிரியப் பெருந்தகையாகக் குறிக்கப்பட்டுள்ளது.

பண்டிதமணி சிறந்த சொற்பொழிவாளர். அவர் காலத்தில் அவர் கலந்துகொள்ளாத தமிழ் மாநாடே இல்லை. அவரது திருவாசகச் சொற்பொழிவைக் கேட்டு மனம் உருகிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,

> 'நெற்றி நிறைந்த நீறுடையான்
> நெஞ்சில் பஞ்சாக் கரமுடையான்
> முற்றி முதிரும் அன்பாலே
> மூவர் தமிழும் பயில்நாவான்
> சுற்றம் தழுவும் குணசீலன்
> தூய நெறி கண்டொழுகிடுவான்
> கற்ற பெரியோன் கதிரேசன்
> கடவுள ருளால் வாழியவே

என்று வாழ்த்துகின்றார்.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை வழி, ஞாயிறு தோறும் வகுப்புகள் நடத்தியும், சிதம்பரம் பல்கலைக்கழகத்தில் பணி செய்த போது ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் இலக்கிய வகுப்புகள் நடத்தியும் பணிசெய்தவர்.

'நூல்களின் உண்மைக் கருத்துக்களைத் தம் மதிநுட்பத்தால் கண்டு உரை வரைந்த ஆசிரியர்களின் பெருமையை என்னென்பேன்? இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் முதலிய ஆசிரியர்களின் திறமையைத் தனித்தனி விரிக்கப் புகின் மிக விரியும். இவரெல்லாம், மிக விரைவாக ஓடிச் செல்லும் ஒரு பேரியாற்றை எதிர்த்து நீந்தி அந்நீரோட்டத்தின் வன்மையை இற்றென உணர முற்படுவார் போலத் தாம் உரையெழுத மேற்கொண்ட சான்றோர் செய்யுட்களிலுள்ள சொற்களின் செலவை எதிர்த்தாராய்ந்து உண்மைப் பொருள் கண்டு உலகிற்கு உதவியவராவர்' என்று முந்தைய உரையாசிரியர்தம் திறனைப் போற்றும் தகைமையர்.

குறுந்தொகை என்னும் நூல் அடியளவாற் குறுகிச் சொற்கள் செறிக்கப்பட்டுப் பொருள் நலம் சிறந்ததொன்று என்று குறுந்தொகையை அறிமுகம் செய்கிறார்.

உயர்ந்த கருத்துகளை எடுத்துக்கூறிக் கேட்போரைச் செயற்படுத்தும் நெறியில்,

ஒரு பொருளை மறைநூல் கூறுதல் தலைவன் தன் பணியாளனுக்கு இடும் கட்டளையை ஒக்கும் எனவும்,

அத்தனையே 'அறநூல்' கூறுதல் ஓர் அன்பன் தன் நண்பனுக்குக் கூறுவதை ஒக்கும் எனவும்,

காப்பியம் கூறுதல், 'ஒரு காதலி தன் இனிய காதல் கிழவனுக்குக் கூறுவதை ஒக்கும்'

எனவும் ஒரு புலவர் கூறியுள்ளார்'. இம்முறையில் இறுதியில் கூறப்பட்டதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது கம்பராமாயணம் என்று சுட்டிக் காட்டுகிறார்.

சிலம்பில் கோவலன் கண்ணகியை விட்டுப் பிரியும் சோகமான கட்டம். இனி மீண்டும் அவன் அவளைச் சந்திக்கப் போவதே இல்லை என்ற நிலை. நான் பிரிகிறேன் வருந்தாதே எனத் தேற்றும் கோவலன்,

பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி

என்கிறான். கோவலன் பிரிவுத்துயர்ச் சுடச்சுடத் தூய்மையுற்று ஒளிரும் கண்ணகி- "பொன்". பற்றுக்கோடாகிய கொழுநனை - கொம்பைப் பிரியும் கண்ணகி - 'கொடி'. கொடியின் செழுமை கொழுந்தில்தான் தெரியும். நீரின்றேல் முதலில் கொழுந்துதான் கருகும். கணவனின்றேல் வருந்தும் கண்ணகி- 'பூங்கோது' என வர்ணித்த விதத்தை எடுத்துக்காட்டியவர் பண்டிதமணி.

"இவர் பேச்சைக் கேட்கும்போது கேட்போரும்
ஒருமித்து அவரோடு பாட்டில் சமாதி கூடிச்
சாந்தி என்று புகழப்பெறும் மனஅமைதியை
அடைந்து வருவது கண்கூடு. அந்த வகையில்
இவர் ஒரு மகரிஷி; ஒரு ஆச்சாரிய பீடம்" [6] (ப.5)

என்று பண்டிதமணியைப் பற்றித் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கூறுகிறார். தம் கனிந்த சொற்களால் கேட்போரை இலக்கியத்தில் மனந்தோயச் செய்பவர்; தாமும் மனம் தோய்ந்தவர். இரண்டறக் கலப்பார். பிறரையும் அந்நிலையாக்கும் பேராற்றல் கைவரப் பெற்றவர்.

பண்டிதமணியின் கால் ஊனம் அவர் வாழ்வை முடக்க வில்லை. ஒருமுறை திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் மகா சன்னிதானத்தின் திருவடிகளில் இவர் வீழ்ந்து வணங்கிய போது கையில் இருந்த ஊன்றுகோல் வழுக்கவே, தவறிக் கீழே விழுந்து விட்டார். சன்னிதானம் அவர்களைத் தாங்கிப் பிடித்தார்.

அப்பொழுது, 'பக்தர்களாகிய நாங்கள் தவறுவதும், தாங்கள் தாங்குவதும் இயல்புதானே' என்றாராம். தமிழ் எப்படிக் கையாளப்பட்டுள்ளது!

"தூய மனத்தில் பொங்கி எழுந்தது இயற்றமிழ்;
தூய வாயின் முழக்கமே இசைத்தமிழ்;
தூய மெய்யின் இயக்கமே கூத்துத் தமிழ்"

என்று 'முத்தமிழ்' பற்றி விளக்கும் பண்டிதமணி, 'அறியும் ஆன்ம அறிவு குறை நீங்கி நிறைவாம் வீட்டு நிலையில் மெய்யறிவு நிலையாக விளங்க எங்கும் நிறைந்த இறைவன் அடிப்படையான உண்மை நிலையாக விளங்க மயங்கி நின்ற இருளுலகம் முற்றும் மாறி இன்ப நிலையாக விளங்க இவ்வாறு இவை மூன்றும் ஒற்றித்து முதிர்ந்து பழுத்து முற்றி நிற்கும் நிலையும் - அம்முத்தி நிலையும் முத்தமிழ் நிலைதானே' (452) என்று முத்தமிழ்நிலையை, முத்தி நிலையோடு கூறுகிறார். "இக்காலத்துக் கல்வி அறிவுநிலை ஒன்றையே வளர்க்கின்றது. இதன் பயனாகத் தலை கொழுத்து உள்ளம் வற்றி உடல் வாடி நின்ற மக்களையே காண்கின்றோம். போரும் மூண்டெழுகின்றது. முத்தமிழ் நெறியில் கல்வி கற்றிருந்தால் முழுமலர்ச்சி பெற்ற சான்றோர்களாய்த் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் விளங்கி இருப்பர் அன்றோ? 'சங்கத்தமிழ் மூன்றுந்தா' என எல்லோரும் வேண்டுதல் இன்றியமையாததன்றோ?" என்று தமிழ்க்கல்வியின் மாண்பைச் சொல்லும் அவரது மனத்துள் தமிழ் பெற்ற மதிப்புமிகு இடமும் தெற்றெனப் புலப்படுகிறது.

பண்டிதமணி, சிறந்த திறனாய்வாளராகவும் உள்ளமை வியப்பே. 'இயற்கைப் பொருள்களை நுனித்துணர்ந்து பாடுவதில் சங்கப் புலவர்கள் மிகத் திறமை படைத்தவர்கள். இயற்கைப் பொருள்களின் இயல்பைக் கண்கூடாகக் கண்டு பயில்பவர் தெரிந்து கொள்ளும் வண்ணம் அக்காட்சிக் கருத்தைப் பாடலில் அமைக்கும் ஆற்றல் அவர்களுக்கு மிகுதியாக உண்டு. அவ்வியற்கைப் பொருள்களை முன்னர்க் காணாதார்க்குப் புலப்படுத்த வேண்டி உவமை அணியையும் கையாளுவர். அவர்கள் கூறும் உவமைகள் உவமிக்கப்படும் பொருள்களோடு மிகநெருங்கிய ஒற்றுமை உடையனவாகும் என்கிறார்.

சங்கத் தமிழின் மொழிநடைகள் தூய்மையும் இனிமையும் வாய்ந்து பொருள் ஆழமுடையனவாய் உற்றுணர்ந்து பயில்வார்க்குப் பெரிதும் இன்பம் பயப்பன வாகும். சங்கப் புலவர் வர்ணனை மரபும், மொழிவளமும், பொருளாழமும் ஆகிய இவற்றைப் பிற்காலத்துப் புலவர்கள் மேற்கொண்டனர் ஆயினும் அத்துணைத் திட்பம்

அமைதல் அரிதாயிற்று. ஆயினும் சங்கத்துச் சான்றோர் சென்ற வழியே, பிற்காலத்துப் புலவர்கள் செல்லுவதற்குரிய நன்னெறியாக அமைந்தது என்பதில் தட்டின்று என்று மதிப்பீடு செய்வதைச் சான்று காட்டலாம்.

மணிவாசகரைப் போற்றும்போது அவரது கண்களிலிருந்து நீர் பெருகி ஓடும். "ஆண்டவன் அமைப்பாகிய அன்பு, அருள், அறிவு, முதலிய அருங்குணங்களில் ஈடுபடுதல் அன்றி மக்கள் அமைப்புகளாகிய சாதி, குலம், பிறப்பு, பொருள் முதலியவை பற்றிய உயர்வு தாழ்வுகளைச் சிறிதும் நம் மணிவாசகர் கருதியவர் அல்லர். இவ்வுண்மையைப் புலப்படுத்துவதற்கே, 'சாதி, குலம், பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேன்' என்று தம் முற்பட்ட இயல்பையும், 'குலம் களைந்தாய், களைந்தாய் என்னைக் குற்றம்' என்று இறைவனுக்குத் தாம் ஆளாய பிற்பட்ட இயல்பையும் கூறுவார் ஆயினார். மக்களுக்குக் குலப்பெருமை பேசுவது இயல்பு என்பதும், அதனால் உண்டாஞ் செருக்கு ஒழியின் அது மூலமாக உண்டாகும் எல்லாக் குற்றங்களும் நீங்கி விடும் என்பதும் அவர்கள் உண்மைகள்" என்று மக்கள் நடைமுறை வாழ்க்கையியல்புடன் பொருத்திக் கூறுகின்றார்.

சுப்பிரமணிய சிவா (1884-1925) தாம் ஆசிரியராக இருந்த, 'ஞானபானு' இதழில், "உங்களால் தூயதமிழில் எழுத முடியுமா? முடியுமானால் முந்துங்கள்" என்று பரிசு அறிவித்து அழைப்பு விடுத்தார். 1915இல் ஆங்கிலமும் கற்ற சிலர் சென்னையில் 'தமிழ்க்கழகம்' ஒன்றைத் துவக்கினர். ஒரு மேடையில் மறைமலையடிகளும், பண்டிதமணியும் சேர்ந்து பேசும் நிலை ஏற்பட்டது. 'சங்க இலக்கியத்தில் இருப்பவையாவும் தூயதமிழ்ச் சொற்களே' என்று மறைமலையடிகள் பேச, பண்டிதமணி, கலித்தொகையில் வடமொழிச் சொற்கள் பயின்று வந்திருத்தலைச் சுட்டிக் காட்டினார். திருஞானசம்பந்தர் பாடல்கள் தூய தமிழ்ச் சொற்கள் நிறைந்தவை. 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர்' என்று மறைமலையடிகள் கூற,

'சலமும் பூவும் தூபமும் மறந்தறியேன்
தமிழ்ப்பாடல் மறந்தறியேன்'

என்ற அடிகளைச் சுட்டிக் காட்டிப் பண்டிதமணியார், வடமொழிச் சொற்கள் இடம் பெற்றிருத்தலைக் குறிப்பிட்டார். சினமுற்ற மறைமலையடிகள் தாம் நின்று பேசிக் கொண்டிருந்த மேசையைக் கையால் குத்தி இவரது கருத்திற்கு மறுப்புத் தெரிவித்தார். பண்டிதமணியோ சிறிதும் மனம் பதறாது, 'இதைவிடப் பெரிய

மேசை என் முன் இடப்பட்டிருந்தால், நானும் இதைவிட வேகமாகக் குத்திப் பேசியிருப்பேன்' என்ற கூற அனைவரும் சிரித்துவிட்டனர். நிலைமை சுமுகமாகியது.

தாய்மொழிப் பயிற்சியின் இன்றியமையாமையைப் பெரிதும் வலியுறுத்தியவர் பண்டிதமணி. நமக்குரிய நாட்டு மொழியைப் புறக்கணித்து வேற்றுமொழியில் எத்துணை மேற் சென்றாலும், மொழியறிவில் பெறும் பயன் முற்றும் பெற்றதாக மாட்டாது. இந்நிலையில் நாம் இன்றியமையாது பயில வேண்டுவது நமக்குரிய தாய்மொழியையே ஆகும் என்று வலியுறுத்துகிறார் அவர்.

'என் நெடுவாழ்க்கையில் முதலில் ஆங்கிலமன்றித் தமிழில் பேசியறியாத என்னைத் தாய்மொழியில் தமிழர் கூட்டத்தில் பேச வைத்து, அத்துறையில் ஊக்கித் தமக்கு இனியர் குழுவில் என்னையும் சேர்த்து அன்புகாட்டி, பண்டிதமணி அவர்கள் அறிஞருலகில் எனக்கும் இடம் தந்தார்கள்' என்று சோமசுந்தர பாரதியார் கூறுவது உண்மைதான். பண்டிதமணி மீது ஒருவர் அவதூறு வழக்குத் தொடர அதன் பொருட்டு வழக்கறிஞர் சோமசுந்தர பாரதியாரை நாடியவர் பின்னாளில் நட்பு வலுக்க, அவரையும் தமிழறிஞராகத் தடமாற்றினார்.

ஒரு காலத்தில் பண்டிதமணியின் எழுத்திலும் பேச்சிலும் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் காணப்பட்டன. ஆனால் அதனை அவர் செம்மைப்படுத்திக் கொள்ளத் தயங்கவில்லை.

> "வைசிய மக்களாகிய நாம் நமது பூர்வாசிரங்களினின்றும் பிறழ்தலின்றித் துவிஜத்வம் உடையராய் இருப்போமேயாயின் வேதத்தைத் தடையின்றிப் படித்தற்கு அதிகாரிகளாவோம்"

என்று 1912இல் அவர் பேசிய பேச்சில் வைசியர், பூர்வாச்சிரம், துவிஜத்துவம், வேதம், அதிகாரிகள் ஆகிய சொற்கள் தடையின்றிக் கலந்துள்ளன. 1944இல் அவரது பேச்சு இதோ:

> "உருக்கரந்த நூல்களினின்றும் சிதறுண்டு அங்கும் இங்கும் காணப்படும் சில செய்யுட்களைப் பார்க்குங்கால், முழுஉருவம் காணப் பெறாமை, தமிழரின் தவக்குறை என்றே இரங்க வேண்டியதாயிற்று. சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களையும் தனித்தனியே மூவாயிரம் வெண்பாக்களால் புகழ்ந்து பாராட்டும் முறையில் அமைந்த முத்தொள்ளாயிரச் செய்யுட்களில் சிதறிக்கிடந்த சிலவற்றைக் கண்டதும் அந்நூல் முற்றும் பெறாமை கருதி என் மனம் வருந்தியதுண்டு. சிற்றுருவமாகிய வெண்பாவில் உயர்ந்த பொருள்களைச்

**செப்பனிட்டு அமைத்துச் சொல்வளமும் பொருள் வளமும் கெழுமப் பாடியிருக்கும் வனப்பு தமிழ்ச் சுவை துய்ப்பார் யாவருள்ளத்தையும் கவரவல்லதாம்"**

என்று கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழா உரையில் உள்ளது. தமிழின் தூய்மையில், தனிமையில் பெருநோக்கு உடையார் பண்டிதமணி. தனித்தமிழில் பேசுவது எழுதுவதை அவர் மறுத்தது கிடையாது. தனித்தமிழ்நடை கலப்பினும் சிறந்தது என்று அவரே கூறுவது வருமாறு:

**'சுவையுடைமை அவ்வம் மொழிகளில் தனிநிலைமைகளில் காணப்படுதல் போல் கலப்பில் காணப்படுதல் அரிது. ஒரு மொழியில் செவ்வனம் பயின்று அதன்நிலை கண்டுணர்வார்க்கு அதன் தனி நிலையிற் போலப் பிறமொழிக் கலப்பில் அத்துணை இன்பம் உண்டாகாது என்பது உண்மை அனுபவம் உடையார் எல்லார்க்கும் ஒத்ததாகும்'**

என்கிறார். 'தமிழ் வடமொழியில் இருந்து தோன்றியது' என்று சிலரால் கருத்து சொல்லப்பட்ட நாளில்,

**"இது (தமிழ்) மற்றொரு மொழியினின்றும் தோன்றிய தென்றாதல் பிறிதொன்றன் சார்பின்றி நடைபெறாதென்றாதல் கூறுவார் உண்மை ஆராய்ச்சியின்றிக் கூறுவதாம். ஒரு சில வடசொற்கள் உண்மை பற்றித் தமிழ் மொழியை வடமொழி யினின்றும் தோன்றிய தென்றல் பொருந்தாத ஒன்றாம்"**

எனச் சினவாது அவர்தம் சிறுமை காட்டித் தம் கருத்தைக் கூறுகின்றார்.

'வர்ணனைகள் வெறும் சொல் அடுக்குகள், அன்றியும் அவைகள் கருத்தை எளிதில் மறக்கும்படி செய்கின்றன' என்றார் அக்காலத்துச் சிலர். தமது விரிவுரைகளில் இதை வன்மையாகக் கண்டித்தார் பண்டிதமணி. வர்ணனைகள் சொல்லடுக்குகளல்ல. ஆழ்ந்த பொருள் நலமுடையன எனப் பல இடங்களிலிருந்தும் எடுத்துக்காட்டினார். மிகச் சிறந்த உரையாசிரியர் என்பதைத் திருவாசக உரைகள் காட்டும்.

'பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் சைவ, வைணவக் கன்னிப் பெண்கள் மழைவளம் குறித்தும், சிறந்த கணவரைப் பெறுதற் பொருட்டும், மார்கழித் திங்க ரில் வைகறையில் நீராடிப் பராசக்தியாகிய கௌரியை வழிபட்டு, நோன்பு மேற்கொண் டொழுகினர் என்பது அடிகள் அருளிய இத்திருவெம்பாவையாலும்,

திருமால் பத்தியில் சிறந்த ஆண்டாள் அருளிய திருப்பாவையாலும் அறியத்தக்கது'.

'சத்தியை வியந்தது' என்பதே இப்பத்தியின் உள்ளுறைப் பொருள். பாவை என்றது, 'பார்வதி உருவமாக மணலால் சமைத்த தெய்வப் படிமத்தை' என்பது கருதத்தக்கது. சக்தி என்றது பராசக்தியாகிய உமையம்மையை. அன்புநெறி ஒழுகுவார் முதலில் அம்மையை வழிபட்டு அவள் மூலம் அப்பனை அடைதல் வேண்டும் என்பது பெரியோர் கண்ட உண்மையாகும்.

ஐந்து முதல் பன்னீராண்டுத் தொடக்கம் வரை கன்னிமைக்குரிய காலம். ஆண்டுவகையால் கன்னியர் எண் வகைப்படுவர். இவ்வெண் வகயினரே நோன்பு மேற்கொண்டவர்கள். முதலில் பன்னீராண்டுத் தொடக்கமுடைய பெரிய கன்னிப் பெண்கள் சிலர் தாமே விடியுமுன் துயில் எழுந்து உடல் தூய்மை செய்து, இறைவன் புகழைப்பாடித் தம்மோடு ஒத்த பருவத்தினளை எழுப்பியதை, 'ஈதேயெந் தோழி பரிசு' என்ற முதல் பாடல் அடியால் அறியலாம். பின்னர் முறையே பதினொன்று, பத்து, ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு, ஐந்து ஆண்டுகளான பெதும்பைப் பருவத்தினரையும், பேதைப் பருவத்தினரையும் எழுப்பினர் எனக் கொள்ள வேண்டும். இரண்டு, மூன்று, நான்காம் திருப்பாட்டுக்களில் எழுப்பப்பட்டார் மாற்றம் கூறினர் என்று கூறப்பட்டிருத்தலானும், அத்திருப்பாட்டுக்களிலும், ஐந்தாம் திருமுறைப்பாட்டிலும் அன்னார் அறிவும், அறியாமையும் பொருந்தியவராகப் புலப்படுத்தப்பட்டிருத்தலானும் அவர் பெதும்பைப் பருவத்தினர் ஆவர் என்றும், ஆறு, ஏழு, எட்டாம் திருப்பாட்டுக்களில் எழுப்பப்பட்டவர், மாற்றங் கூறாமையானும் எழுப்பியவர் மானே எனவும், அன்னே எனவும் விளித்தலானும், ஏழாவது பாட்டில், வன்னெஞ்சப் பேதையர்போல் வாலா கிடத்தியால்' என்று பருவத்தால் மட்டுமன்றி இறைபுகழில் ஈடுபடாதிருத்தலும் சொல்லப் பட்டிருத்தலின் 'எழுப்பப்பட்டவர் பேதைப் பருவத்தினர்' என்பது புலனாகும். எட்டாம் திருப்பாட்டில் எழுப்பப்பட்டவள், ஐந்தாண்டுச் சிறுமியாதலின் அவளை எழுப்பிட, 'கோழி சிலம்பச் சிலம்புங் குருகு', என்று வைகறையின் இறுதிப்பகுதி குறிக்கப்பட்டிருத்தலும் கருதத்தக்கது. ஆண்டில் மூத்த, பெரிய பெண்கள் முன்னரே எழுந்தனரென்பதும், ஆண்டில் இளைய, சிறு பெண்கள் நாழிகை ஆக ஆக எழுப்பப்பட்டனர் என்பதும் பொருத்தமாகும். ஈண்டு ஐந்து முதல் பன்னீராண்டுத் தொடக்கம் வரை எழுப்பப்பட்டவர் ஒவ்வொருவராகக் கூறப்பட்டிருப்பினும், உபலக்கணத்தாற் பலராகக் கொள்ளல் வேண்டும். இடையிடையே

உமாதேவியைப் பாராட்டியிருத்தலால் சத்தி வழிபாடு செய்தமை பெறப்பட்டவாறறிக என்கிறார்.

'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்து' என்றதலைப்பில் 'சத்தியை வியந்தது' எனும் உள்ளுறை குறிப்பில் புலப்பட வைத்தவாறாம். என்னை? இறைவன் திருவடி இறையருளாகிய சிவசத்தியைக் குறிக்குமாதலின், திருவடிவாழ்த்து சத்தியை வாழ்த்தியதாகும் என்பது.

'விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசுமலர்ப்பாதம்' என்று திருவடிச் சிறப்புக் கூறப்பட்டது, 'சத்தியை' வியந்ததாகும்.

'அத்தன் ஆனந்தன்' என்புழி அன்னையுமான அத்தன் என்பது பெறப்படும். இதனால் சத்தியை வியந்தது குறிப்பில் பெறப்படும்.

'கண்ணுக்கினியானை' என்றதனால் இறைவனுக்குத் திருமேனி உண்டென்பது புலப்படுத்தப்படுதலின், அத்திருவுருவுக்கு இடனாகிய சத்தியை வியந்தது பெறப்படும்.

'ஞாலமே, விண்ணே, பிறவே அறிவறியான் என்றதனால் இறைவனது சொரூப நிலையும், 'கோலம்' என்றதனால் தடத்த நிலையும் பெறப்படுதலின் அக்கோலங் கோடற்கு இடனாகிய சத்தியை வியந்தது குறிப்பினால் புலனாதல் காண்க.

இதன்கண், 'வான்வார்கழல்பாடி' என்றதனால் திருவடியால் குறிக்கப்படும் சத்தியை வியந்தது பெறப்படும்.

'தென்னா வென்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய்' என்றதனால் சிறந்த பத்திக்கு ஏதுவாகிய தென்னன் என்னும் சொல் மீனநோக்கின் மடவரலை மணந்து கொண்டதால், 'சத்தியை வியந்தது' புலனாயவாறறிக.

இதன்கண், 'ஏழைபங்காளனையே பாடு' என்றமையால் சத்தியை வியந்தது கூறப்பட்டமை அறிக என்றும் 'இறைவன் திருவடியைப் பலமுறை புகழ்ந்து காப்பு வேண்டியிருத்தலின், 'சத்தியை வியந்தது' பெறப்பட்டவாறறிக' என்றும் முடிக்கிறார். "பண்டிதமணியவர்கள் உரை மிக அழகாயிருப்பதை அனுபவித்து வருகிறேன். ஒப்புயர்வற்ற உரை" என்று போற்றுகிறார் இராசாசி.

> "வாசக மெல்லாம் மணிவாசக மாமோ?
> காசெல்லாம் காணும்பொற் காசாமோ? – பேசுலகில்
> மன்னுமுரை யெல்லாம் மகிபால மாநகரான்
> சொன்னவுரைக் கீடாமோ? சொல்"

என்றும், 'இம்மாதிரியான விளக்கவுரை எழுதுவதற்குத் தங்களைத் தவிர வேறொருவர் இல்லை என்பது எனது உண்மையான அபிப்ராயம்' என்கிறார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

அண்ணாமலை நகர் மணிவாசக மன்றம், தில்லைத் தமிழ்க் கழகம் அமைத்து ஞாயிறுதோறும் இலக்கிய பாடம் கூறித் தமிழ்ப்பணி புரிந்தவர் பண்டிதமணி. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை குடும்பத்திற்குப் பொருளுதவி செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டவர். உ.வே.சாமிநாதையருக்கும் பல உதவிகளைச் செய்துள்ளார். 21.6.1925இல் இதற்கு நன்றி தெரிவித்து உ.வே.சா. எழுதிய கடிதத்தில், 'முன்பு பிள்ளை அவர்களுடைய குடும்பக் கவலையைத் தீர்த்தீர்கள்; இப்போது அவர்களுடைய மாணாக்கனது கவலையைத் தீர்த்தீர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

கருத்து வேறுபாடிருப்பினும் தமிழறிஞர்களை அவர் மதிக்கத் தவறியதில்லை. டி.கே.சி.யைப் பல முறை கண்டித்துப் பேசிய போதும் கடிதப் போக்குவரத்து வைத்திருந்தார். அவர் மகன் தீத்தாரப்பன் காலமான போது அவர் இல்லம் சென்று அவரைக் கண்டு ஆறுதல் கூறி வந்தார். சுத்தானந்த பாரதியார் கருத்துகளை ஏற்றுக் கொண்டதில்லை, ஆனால் புதுச்சேரி சென்று அவரைக் கண்டளாவிய போது அடிகள் தம் விடைகளைத் தாளில் எழுதித் தர, அதைப் பேணி வைத்திருந்தார்.

## பண்டிதமணியும் தமிழிசை மீட்பியக்கமும்

தமிழிசைக்கு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. திணை சார்ந்து வளர்ந்து வளம் பெற்றது. பாணர்களால் போற்றி வளர்க்கப்பட்டது. சங்க காலத்துக்குப்பின் இசையிலும் வர்க்கபேத உணர்வு புகுந்தது. உயர்ந்தோர் கலை, பாமரர் கலை என்ற பாகுபாடு உதயமாகியது. இப்பகுப்பின் வெளிப்பாடே வேத்தியல், பொதுவியல் எனும் பாகுபாடுகள். இடைக்காலத்தின் முற்பகுதியில் காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டுத் திருப்பதிகங்களும், நீலகண்ட யாழ்ப்பாணரின் பதிகங்களும் தமிழ் இசை மரபினை வளர்க்க உதவின. விசயநகரத்தார் ஆட்சியாலும், நாயக்கர் ஆட்சியாலும், மராட்டியராட்சியாலும், கன்னடம் மற்றும் தெலுங்கு மொழித் தாக்கத்தால் தமிழிசை பலம் குன்றியது. சமற்கிருதமும், தெலுங்கும் தென்னகத்து இசையரங்கில் இடம்பிடித்தன. தியாகராயரின் கீர்த்தனைகள் தெலுங்கு மொழியில் எழுதப் பட்டிருப்பது இதனாலேயாம்.

மேல்மட்டத்தில் தமிழிசை வலுவற்று இருந்தாலும், சமுதாயத்தின் அடித்தட்டில் செல்வாக்குடன்தான் இருந்தது. வயலில்

உழைப்பவரும், குறவரும், பள்ளரும் கதாநாயகர்களாக உயர்த்தப்பட்டனர். இசை நாடகங்கள் வெளிவந்தன. குறவஞ்சி, குறம், உழத்திப்பாடல், பள்ளுவகை இலக்கிய ஆசான்கள் தமிழிசை வாழ வழி வகுத்தனர். மேலும் 18ஆம் நூற்றாண்டில் முத்துத் தாண்டவரும், அருணாசலக் கவிராயரும் 19ஆம் நூற்றாண்டில் நந்தனார் கீர்த்தனை வழி கோபால கிருட்டின பாரதியும் தமிழிசைதனைத் தக்க வைத்தனர். காவடிச்சிந்து மூலம் அண்ணாமலை ரெட்டியாரும், கீர்த்தனைகள் மூலம் மாரிமுத்தாப் பிள்ளையும் மாயூரம் வேதநாயகனாரும் தமிழிசை முழுமையாக மறையவில்லை என மெய்ப்பித்தாலும், சென்னை மாநிலத்து இசையரங்குகளைத் தெலுங்கும், சமற்கிருதமும் ஆட்சி செய்வது வலுப்பெற்றிருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழிசையை உலகறியச் செய்தவர் ஆபிரகாம் பண்டிதர் (1859-1919) ஆவார். 1912இல் தஞ்சை சங்கீத வித்யா மகாசன சங்கத்தை நிறுவினார். 1916இல் பரோடாவில் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டில் பங்கேற்று, 'இந்திய இசை வரலாற்றில் தமிழ் இசையின் பங்கையும், தனித்தன்மையையும், உயர்வுகளையும் விளக்கியுள்ளார். வல்லுநர்களைக் கொண்டு அங்கேயே தமிழிசையை முழங்கச் செய்துள்ளார். ஆபிரகாம் பண்டிதரின் தமிழிசை நுணுக்க ஆராய்ச்சித் தொகுதியே, 'கருணாமிர்த சாகரம்' என்பது. 1917இல் வந்த இந்த நூல் பண்டைத் தமிழிசைக்கும், கருநாடக இசை எனும் இசைக்கும், தாய்க்கும் சேய்க்குமான உறவிருப்பதை நிருபித்தது. தமிழிசை விஞ்ஞான அடிப்படையிலானது. வானியல் தொடர்புடையது என்று காட்டியுள்ளார். தமிழிலே புதிய மெட்டுகளில் பாடல் அமைத்தவர் பாரதியார். தமிழிசையை மீட்கவும், பரப்பவும் நிலையான நிறுவனம் ஒன்று தேவை என்று தமிழ் இசை ஆர்வலர்கள் விரும்பினர். அண்ணாமலைச் செட்டியார் 1923இல் இசைக்கல்லூரியைத் துவக்கினார். 1932இல் இசைக்கல்லூரியை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்தார். தேவார இசைப்பாடல் வளர்ச்சிக்குக் காசிமடம் நிதி உதவியது. 1930இல் ஈரோட்டிலும், 1934இல் நெல்லையிலும் நடைபெற்ற சுயமரியாதை மாநாடுகள் தமிழிசைச் சிக்கலை விவாதித்தன. தமிழிசை எதிர்ப்பாளர்கள் தமிழிசைக்கு எதிரான வாதங்களைத் துண்டுப் பிரசுரங்களாக வெளியிட்டு விவாதத்துக்கு வித்திட்டனர். தமிழிசை உரிமை எழுச்சி வலுப்பெற்றது. ஆர்.கே. சண்முகம் செட்டியார், தெ.பொ. வேதாசலம் ஆகியோர் எதிர்வாதங்களுக்கான விடைகளைத் தர்க்கரீதியாகத் தொகுத்து வழங்கினர். அண்ணாமலை அரசரின் ஆதரவும் இருந்தது.

1939இல் சென்னையிலும், 1940இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழிசைக் காப்பு

இயக்கங்கள் நடைபெற்றன. ஆர்.கே.சண்முகம் செட்டியாரின் ஈடுபாடும், அண்ணாமலை அரசரின் நிதியுதவியும் தமிழிசை மீட்சிக்கு வலிமை சேர்த்தன.

1941இல் தமிழிசைக் காப்புக்குழு கூடியது. அனைத்திந்திய வானொலியிலும், இசைமன்றங்களிலும் தமிழிசைக்கு இடமளிக்கத் தீர்மானவடிவில் வேண்டுகோள் தரப்பட்டது. 1941இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழிசை மாநாடு நடைபெற்றது. 1943இல் சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில் இசைமாநாடு நடந்தது. 'தமிழ்நாட்டில் பாடப்படும் இசை தமிழர்களுக்கு இன்பமளிக்க வேண்டும்; அதுவே நமது நீண்டகால ஆசை' என்று அண்ணாமலையரசர் பேசினார்.

தமிழிசைபால் ஈடுபாடு உடையவர் பண்டிதமணி. இசையறிவு உடையவர். 'இசை இன்பம்' என்ற தலைப்பில், 'குமரன் தமிழிசை மலரில்' பண்டிதமணி எழுதியுள்ள கட்டுரை அவரது இசையறிவிற்குச் சான்றாகும். "இசைக்கருவிகளில் சாகித்தியங்களின் சுரநிலைகளே அமையுமன்றிச் சுவையும் கருத்தும் மிடற்றுப் பாடலில் வெளிப்படுதல் போல் வெளிப்படா. கேட்போர்க்கு இன்பம் ஊட்ட வேண்டின், இனிய இலக்கியப் பாடல்களில் இசை கலப்பது மிக அவசியமாகும். இசைக்கு இடையில் ஆக்கப்படும் பாடல்களைத் தமிழ் நூலார், 'வரிப்பாடல்' என்பர். தமிழ் நூலார், பண், பண்ணியல் திறம், திறத்திறம் என்று முறைப்படுத்திய இராக வகைகளை வடநூலார், 'சம்பூர்ணம், சாடவம், சாடலம், ஔடவம், சதுர்த்தம் என்று குறிப்பிட்டாளுவர்" என்று வரையறை செய்யும் தெளிவைக் காண முடிகிறது.

"இனி இசைக்குரிய பாடல்கள் எம்மொழியில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சில கூற விரும்புகின்றேன். மக்களுக்குரிய நாட்டு மொழியில் இருப்பது இன்றியமையாதது. பொருள் விளங்காத வேற்றுமொழிப் பாடல்கள் கேட்டுத் தலையசைக்கும் குழு உண்டு. ஏதோ இசைக்கலையில் தமக்கு அறிவுண்டென்று பிறர்மதிக்க வேண்டும் என்னும் குறிக்கோளே அன்னார் தலைநடுக்கத்திற்குக் காரணமாகும் என்றாகிறார். ஒரு இசையரங்கிற்குச் சென்றபோது பாடகரின் பல்லவி, சுரவேகம் அதிகரிக்க அதிகரிக்க, மிருதங்க வாசிப்பாளர் அதற்கேற்ப ஒரு படி மேலாகவே செல்ல அது மற்போர் நிகழ்ச்சி போலக் காணப்பட்டது என்கிறார் (ப.24). ஒரு கலியாண வீட்டில் நிகழ்ந்த இசையரங்கிற்குச் சென்றபோது, 'தமிழ்ப் பாடல்களில் ஏதேனும் பாடலாகாதோ' என்று கேட்ட பண்டிதமணியைப் பார்த்து இசையரங்கை நடத்திக் கொண்டிருந்த இளைஞர் நகைத்தாராம். 'அச்சிரிப்புக்குறிப்பு அவருக்குள்ள

இசையறிவு பெரிதென்பதையும், யான் அரங்கின் இயல்பறியாமையான் தமிழ்ப்பாட்டுப் பாடச் சொன்னேன்' என்பதையும் புலப்படுத்தியது. நெடுநேரம் விளங்காத பாடல்களைப் பாடிவிட்டு முடிவில் பாடுவோரும் கேட்போரும் அயர்ந்த நிலையில் தமிழ்ப் பாடல்களில் ஒரு சில புறக்கணிப்பாகப் பாடுதலே இசையரங்கின் இயல்பென்பது அவர் கருத்தெனப்பின் அறிந்தேன். அம்முறையே இதுகாறும் இசைப்புலவர்கள் மேற்கொண்டதுமாம் (ப.24).

இக்காலத்துப் புகழ்படைத்த இசைப்புலவர்களுள் பலர் போதுமான தமிழ் மொழிப் பயிற்சி இல்லாதவராகக் காணப்படுகின்றார். அன்னார் கேள்வி மூலம் கற்ற ஒரு சில தமிழ்ப் பாடல்களைப் பாடும்பொழுது பொருணிலை தெரியாமல் சொற்களைப் பிய்த்துச் சிதைத்து விழுங்கி விடுகின்றனர். சொற்பொருள் உணர்ச்சி இல்லாமையால் பாடுங்கால் உள்ளம் ஈடுபடல் அவர்க்கு அரிதாகின்றது. பாடுவோர் அனுபவித்துப் பாடவில்லை என்றால் கேட்பவர்க்கு எங்ஙனம் இன்பம் நிகழும்? பாடுவோர் நாவளவில் பாடக் கேட்பவர் செவியளவில் பட்டு ஒழியும். அவ்வளவின்றி இருவருளத்தையும் தொடாத பாடலால் விளையும் பயன் என்னையோ? என்று வினவும் பண்டிதமணி, 'இக்காலத்தில் நிகழும் இசை அரங்குகளில் வேற்றுமொழிப் பாடல்களுக்குக் கொடுக்கப்படும் கால அளவை நந்தமிழ்மொழிப் பாடல்களுக்கும், தமிழ்ப்பாடல் களுக்குக் கொடுக்கப்படும் காலஅளவை வேற்றுமொழிப் பாடல்களுக்கும் ஆக மாற்றிக் கொண்டாலே போதியது' என்று வழிமுறை கூறுகிறார். 'தமிழிசை வளர்த்தற்குச் செட்டிநாட்டு அரசர் சர். அண்ணாமலைச் செட்டியார் மேற்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது. அதன் விளைவாகத் தமிழ் இசை வளர்ந்து தமிழர் ஆக்கம் ஓங்கும்' என்கிறார்.

இயந்திரத்தனமான, சடங்கு போன்ற ஒழுங்குமுறை மீறாத, முன் தயாரிப்புகளோடு அரங்கேற்றப்படும் அன்னிய மொழி இசை அரங்குகளால், கேட்பவர்களுக்கும், இசைவாணர்களுக்கும் இடையிலான இட்டு நிரப்ப முடியாத ஒரு இடைவெளியைத் தம்மைச் சுற்றித் தாமே போட்டுக் கொள்ளும் போலியான, பொய்யான ரசனை வளையத்தை வினாவிற்குட்படுத்துகிறார் பண்டிதமணி.

இசை குறித்த அனுபவங்களையும், எது நல்லது? தமிழருக்கு ஆக்கம் தருவது எது என்பது பற்றிய தீர்மானங்களையும் அவர் வெளிப்படுத்தியுள்ள விதம் நடைமுறை உலகின் பூசப்பட்ட உண்மைகளுக்காகத் தாம் பொய்யராக மாறிப் போக மறுத்துவிடும் தன்மையைப் புலப்படுத்துகிறது.

## மொழிபெயர்ப்பில் பண்டிதமணியின் பங்களிப்பு

மொழிபெயர்ப்பு ஒரு ஆக்கபூர்வமான அரும்பணி. இருவேறு உலகங்களை ஒரு பெரும் படைப்பு தனக்குள் அடக்கும் மிகச் சிறந்த கருவி. பெயர்ப்பு ஓர் கலைப்பணியாக அமைவதால், மூலத்தின் உயிர்ப்பைப் பேணுதல் அவசியம். மொழிபெயர்ப்பின் பயன் பிறமொழி இலக்கிய அறிமுகம், மொழியின் சொல்வன்மை, பொருள் வன்மை, விரிவாக்கம் எனச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஸஹ்ருதயா (சகிருதயா) எனும் வடமொழி இதழில், 'ஸ்ரீ.வே. அனந்தாச் சாரியவர்களால் வடமொழி வசனவடிவில் எழுதப்பட்டு வந்த உதயணசரிதம், மேலைச் சிவபுரி சன்மார்க்கச் சபையாரின் விருப்பப்படி மொழிபெயர்த்துத் தம்மால் எழுதப்பட்டதாகப் பண்டிதமணி குறிப்பிட்டுள்ளார்.

முதல் வகுப்பு என்று உதயணன் பிறப்பில் தொடங்கி, 'திருமஞ்சனம் பெறுதல்' எனும் பதினைந்தாம் வகுப்புடன் முடிகிறது. ஒவ்வொன்றின் செய்தியும் இறுதியில் வெண்பா வடிவில் தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அகாரணம் | - | காரணமில்லாமை |
| அமயம் | - | சமயம் |
| ஆசமித்தல் | - | வலக்குடங்கையால் மந்திர பூர்வமாக நீரை மூன்றுமுறை உட்கொள்ளல் |

என்று அரும்பதவுரையும் பண்டிதமணியால் தரப்பட்டிருப்பது சிறப்புமிக்கது.

மிருச்சகடிகம் - மண்ணியல் சிறுதேர் என்ற பெயரில், 'பாட்டிடை வைத்த குறிப்பு' வழித்தாய உரைநடையில், பத்து அங்கங்களைக் கொண்டதாக 271 பாடல்களில் எழுதப்பட்டுள்ளது. இக்காப்பியம் சிலப்பதிகாரத்துடன் ஒப்பிடுவதற்குரிய தன்மைகள் நிரம்பப் பெற்றுத் திகழ்வதைத் தம் ஆராய்ச்சி முன்னுரையில் சோமசுந்தர பாரதியார் கூறுவார்.

மூலநூலில் சிலவரிகளில் செறிவாகப் பொருள் நிறைந்து காணப்படும் பகுதிகளைத் தெளிவாக விளக்க மொழிபெயர்ப்பில் பல வரிகளாக விரித்துள்ள பான்மைக்குச் சான்றாக, சாருதத்தனின் குணங்களை விடன் பாராட்டும் செய்யுள் மூலநூலில் நான்கே வரிகளைக் கொண்டதாக அமையத் தமிழில் பதினேழு வரிகளில் விரித்திருத்தலைச் (மண்ணியல் சிறுதேர். ப.107) சொல்லலாம்.

சுக்கிராச்சாரியார் வடமொழியில் எழுதிய, 'ஔசநசம்' என்னும் நூலின் மொழிபெயர்ப்பு 'சுக்கிரநீதி' ஆகும். கௌடலியரின், 'அர்த்தசாத்திரம்' எனும் பொருள் நூலை மொழிபெயர்க்கும் பணியை மேற்கொண்டு மூன்று அதிகரணங்களைப் பெயர்த்தார். பின் உடல்நலம் குன்றியதால் அப்பணி தடைப்படும் நிலை ஏற்பட்டது. வடமொழி ஆய்வு உதவியாளராக இருந்து மொழிபெயர்ப்புத் திட்டத்தில் பண்டிதமணியின் கீழ் பணிசெய்த சிரோன்மணி பி.ஸ்ரீ. இராமானுசாச்சாரியார் மொழிபெயர்ப்பை முடித்துக் கொடுப்பார் என்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவித்தார். பொருள்நூல் என்ற தலைப்பில் இரண்டு பகுதிகளாக வந்த அந்தநூலில் ஒன்று முதல் மூன்று வரையிலான அதிகரணங்கள் பண்டிதமணியாலும், நான்கு முதல் பதினைந்து அதிகரணங்கள் இராமானுசாச்சாரியாராலும் பெயர்க்கப்பட்டுள்ளன.

## பண்டிதமணியெனும் மரபுப் பெண்ணியவாதி

பண்டிதமணியின் ஆக்கங்கள் பற்றி ஆராய, அவருக்கு வாய்த்த பல்வேறு சூழல்களைப் புரிந்து கொள்வது முதல் தேவையாகும். இலக்கியவாதிக்கும் சூழலுக்கும் உள்ள உறவு என்பது, இலக்கியவாதிக்கும், அவர்தம் இலக்கிய ஆக்கங்களுக்கும் உள்ள நெருக்கத்தைப் போல இறுக்கமான ஒன்றாகும். எனவேதான், பங்களிப்பையும், கொடையையும் பற்றி ஆயும் போது அதற்கான சூழலை அறிவது முதன்மை பெறுகிறது.

இலக்கிய ஆக்கம் என்பது இலக்கியவாதி தன் காலத்தோடு கொள்ளுகின்ற உறவின் வெளிப்பாடு ஆகும். ஆகவேதான் இலக்கிய ஆக்கங்கள் மூலம், காலம் குறித்த இலக்கிய வாதியின் மதிப்பீடுகளைக் கண்டறிய முடிகிறது. தனக்குச் சாதகமாகவோ, எதிராகவோ வாய்க்கிற தன் காலத்திய சூழலுடன் இலக்கியவாதி கொள்கிற நேர்மையான உறவு அடுத்து வரும் காலகட்டங்களுக்கும் அவரது தேவையை வலியுறுத்துகிறது. காலச் சூழலால் கிடைக்கப் பெறுகிற பாதிப்புகளை உண்மையோடு எதிர்கொள்ளுகின்ற இலக்கியவாதியால் மட்டுமே தனது சிந்தனைகளை மரபு என்ற தகுதிக்கு உயர்த்த முடியும். ஆக, எதுவும் சூழல் இல்லாமல் தோன்றாது. 'தான்' இல்லாமலும் தோன்றாது. உள் உலகத்தின் வெளிப்பாடும், மொழியின்றி இலக்கியத்தில் சாத்தியமில்லை.

1881 முதல் 1953 வரை வாழ்ந்து தமிழ்த்தொண்டு செய்தவர் பண்டிதமணி. இவரது ஆக்கங்கள் இந்திய விடுதலைக்குப்பின் ஆறாண்டுக்கால இடைவெளி சார்ந்தவை.

"இல்வாழ்க்கையிலும் இனிமை, உடையிலும் இனிமை,
ஊணிலும் இனிமை, பேச்சிலும் இனிமை,
மூச்சிலும் இனிமை, எழுத்திலும் இனிமை,
குழுவிலும் இனிமை, அவர் பிறரைப் புகழ்வதிலும் இனிமை,
இகழ்வதிலும் இனிமை"

என்று பண்டிதமணியைத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இனிமைமயமாகக் காண்பார். இனியவர், மனிதநேயர் என்பவர் எல்லாத் தத்துவங்களிலும், சமயங்களிலும், விருப்பம் உடையவராகத் திகழ்வர். பண்டிதமணி சிறந்த மனிதநேயர். விரிந்த நோக்கம் உள்ளவர். நெகிழ்வு உடையவர். எந்த வாழ்க்கைமரபும் பழமையிலும், புதுமையிலும் வேர் ஊன்றி இருக்க வேண்டும் என்று கருதுபவர். அவர் காலத்துப் பெண்கள் நிலை சமூகத் தீங்குகளாலும், சாதி, சமயக் கட்டுத்தளைகளாலும் தளையுண்டு ஒடுக்குதலின்றும் விடுபட வழி காணாது தவித்துக் கொண்டிருந்தது. மரபுத் தீமைகள் அகலுமா? மகளிர்க்குச் சமூக, பொருளாதார விடுதலை கிடைக்குமா? என்று ஏங்கிய காலத்தில் மகளிரது வாழ்வியல் சூழலைப் புலப்படுத்தும் சாசனமாக இவரது இலக்கிய ஆக்கங்கள் இலங்குவதைக் காட்டலாம்.

'பாஞ்சாலியை' இந்தியத் தாயாக உருவகம் செய்து பாரதியார், 'பாஞ்சாலி சபதத்தை' ஆக்கினார். பண்டிதமணி, துன்பமிக்க பெண் வாழ்வுதனைப் பதிவு செய்வதன் மூலம், மகளிர் நலிவினைச் சுட்டிக்காட்ட, 'சுலோசனை'யை அமைத்துள்ளார். அவர் காலத்திய பெண்டிர் நிலை, 'சுலோசனை' மூலம் காட்டப்பட்டுள்ளது. மரபுசார் பெண்ணியவாதியாகப் (Conservative Feminist) பண்டிதமணியின் பங்களிப்பு உறுதிப்படும் விதம் குறித்துக் காணலாம்.

சுலோசனை என்பது சிறுகதை. இராவணனின் புதல்வன் இந்திரசித்து. இந்திரசித்துவின் மனைவி சுலோசனை. இராவணனின் ஆணைப்படி போருக்குச் சென்ற இந்திரசித்து தோற்றுத் திரும்புகிறான். 'இராம இலக்குவனர்கள் உண்மையில் மக்கள் அல்லர். இராமன் திருமகள் கொழுநன்; எனவே சானகியை அவர்கள் பக்கல் சேர்க்கவில்லை எனில் நங்குலத்தில் ஒரு சிறுதுகளும் காண்டல் அரிது'' என்று தந்தையிடம் எச்சரிக்கிறான். இராவணனோ நிகும்பலையில் விரும்பியவை தரும் ஒருவேள்வியைச் செய்துமுடிக்க இந்திரசித்துவைப் போக்குகிறான். இந்திரசித்து செல்லுவதற்கு முன்னர் சுலோசனையைக் காண வருகிறான்.

''என்னை ஒத்த துன்பமிக்க பெண் இவ்வுலகில் வேறு ஒருத்தியும் இல்லை'' என்று கணவனது பிரிவினால் நலிந்து

காணப்படுகிறாள் சுலோசனை. அவளைக் கண்டதும் பரிவுடன் வினவுகிறான் இந்திரசித்து.

> "ஏ காதலி! அழகிய விழிகளில் இந்நீர்ப் பெருக்கு
> ஆறுபோல் வழிகிறதென்னை?
> பெருங்காற்றான் அலைப்புறூஉம் இளங்கதலிபோல்
> மிகமெல்லிய நினது இவ்வுடற்கொடி நடுங்குதல் எதற்கு?
> அன்பே, அணி செய்து கொள்ளாமை என்?
> அழுதல் எக்காரணம் பற்றி?
> யான் சிறிதேனும் கேடு செய்ததாகக் கூர்ந்து
> ஆராய்ந்து பார்த்தும் புலப்பட்டிலதே;
> அங்கணாய்!
> நினது வருத்தத்திற்குக் காரணம் இன்னதென்று
> கூறுவாயாக!
> இப்பொழுது நின் துக்க காரணத்தைப்
> போக்குதற்கு அடியேன் சித்தனாக இருக்கிறேன்"

என்கிறான். 'நாத! அனாதையைப் போல் என்னை விடுத்து இத்துணைக் காலமாக வாராதிருந்த நின் நெஞ்சைப் பேற்றிலனாகிய யான் என்னென்று கூறுவேன்? இப்பேதை செய்த குற்றம் யாது? இப்பொழுது அவசியம் வருவாய், மாலை வருவாய், இரவில் வருவாய், நாளை வருவாய் அதன் பின்னால் வருவாயென நினைந்து எத்துணையோ கற்பம் போன்று நாட்களைப் போக்கினேன்' என்கிறாள்.

தந்தைக்கும் இராமனுக்கும் நிகழும் போர் பற்றி இந்திரசித்து கூறுகிறான். அதற்கு அவள் 'என் மாமன் செல்கின்ற இவ்வழி நல்லோரால் விரும்பத் தக்கதன்று. அவனோ கற்பினுக்கணியாகிய சீதாபிராட்டியைக் கொணர்ந்து எரிகின்ற நெருப்பைப் புதர்நடுவண் இட்டாங்கு நகரின்கண் வைத்தான்' என்கிறாள். 'யான் சுதந்திரம் இல்லாதவன். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. தந்தையின் கட்டளை பெரிதன்றே. தெய்வம் அருள் செய்யின் மீள்வேன்' என்று பதில் அளித்து வேள்விக்குச் செல்கிறான்.

அவள்முன் கைத்துண்டு வந்து விழுகிறது. 'விறகுகளை அடுக்குங்கள்; சிதையில் நெருப்பை எழுப்புமின்கள்' என்று கணவனுடன் இறக்க ஈமவிறகு அடுக்குமாறு சுலோசனை ஏவுகிறாள். இக் கைத்துண்டு யாருடையதென்று ஆராயாமலும், யாரால் ஈண்டு எதற்காக எறியப்பட்டது என்று உணராமலும் இறக்க எண்ணுகிறாய்' என்கின்றனர் தோழியர். நிகும்பலையில் வேள்வி செய்யச் சென்ற காதலனின் செய்தி குறித்துக் கைத்துண்டை வினவுகிறாள்:

**ஏ! கைத்துண்டே! கைப்பிடித்தவன்று தொட்டு இன்றுவரை இன்பத்திலும் துன்பத்திலும் எனது பிராணகாந்தனை அன்றி வேறொன்றையும் கருதிலேன் என்பதூஉம், ஒருபொழுதும் எனது கணவனையன்றி வேறொருவனை நெஞ்சத்தாலும் நினைத்திலேன்' என்பதூஉம் உண்மையாயின் எனக்கு மறுமொழி தருவாயாக.**

என்கிறாள். 'ஏடி சுலோசனை முதலில் நின் கண்களைத் துடைத்துக் கொள்க. என் செய்திகளைப் படிப்பாயாக! இதோ எழுதுகின்றேன். வேள்வி செய்ய முற்பட்ட வேளையில் இலக்குமணன் விடுத்த இராமபாணத்தால் தலை துண்டிக்கப்பட்டு இராமனது திருவடிகளில் வீழ, கை துண்டிக்கப்பட்டு நின்பால் வீழ்ந்தது' என்கிறது.

இன்னும் எத்தனை தூரத்தில் என் மாமனது அரசிருக்கை மண்டபம் உள்ளது? என்று ஒவ்வொரு கணத்திலும் தோழியரை வினவியவாறே அங்கு வந்து சேர்கிறாள். கைத் துண்டை முன் வைத்து, 'அரசர் பெரும பேறிலனாகிய நினது மருகி 'சுலோசனை' யென்னும் பெயரினை உடைய யான் இங்குப் போந்தேன். என் சொற்களைக் கேட்டருளல் வேண்டும். என் அவாவை நிறைவேற்றல் வேண்டும். யான் எனது தலைவனது தலையைக் கண்டு அப்பொழுதே அவனுடன் இறத்தலை விரும்புகிறேன்' (ப.20) என்கிறாள். மகன் இறந்தது கேட்டுப் புலம்பும் இராவணன், 'ஏடி ஒழுங்கிழந்தவளே! வீரனாக நினைக்கத்தக்க எவன்தான் பகைவன் பக்கல் எய்திப் போரில் இறந்தவனது தலையை வேண்டுதற்குத்துணிவான்? என் அருகில் நில்லாது செல்க. 'தீக்கண் வீழ்ந்து நின்றலைவன் செல்லுழிச் செல்க' என்கிறான். 'மரணம் எய்திய என் தலைவனது முகத்தைக் காணாமல் தீப்புகுதற்கு யாங்ஙனம் துணிவேன்? நினக்கு இராமன் பக்கலெய்தி என்றலைவனது தலையை வேண்டுதலில் விருப்பமின்றேல் எனக்கு விடை தருவாயாக. யானே அவன் சந்நிதியை அடைந்து என் நாதனது சிரத்தை வேண்டுவேன்' என்கிறாள். 'ஏடி! நாணமற்றவளே! புதல்வன் இறத்தலால் அச்சமுற்ற இராவணன் பகைவர்களை உடன்படுத்தற் பொருட்டுத் தன் மருகியை ஏவினான் என்றன்றே உலகம் பழித்துரைக்கும். அப்பாதகன் இராமன், முன் என்தங்கையை விகாரப்படுத்தியது போல் நின்னையும் செய்வான்? ஆதலின், அறிவிலியாகிய நீ அவன் பக்கலிற் சேர்தல் தகுதியன்று. நின்சொல்லை ஏற்பேனல்லேன்; என் முன் நில்லாது விரைந்து செல்வாயாக' என்கிறான். "எஞ்ஞான்றும் தீத்தொழிலையே புரிகின்ற நீ கொடிய நரகத்தில் வீழ்தல் உறுதி" என்று கூறி வெளியேறுகிறாள்.

இராமனிடம் சென்று "இராமபத்திர, யான் நிகும்பலையில். இலக்குமணனால் கொல்லப்பட்ட இந்திரசித்துவின் மனைவி.

பேறிலளாகிய என்னைச் 'சுலோசனை' என்னும் பெயரால் அழைப்பார்கள். என் தலைவனது துண்டிக்கப்பட்ட கைத்துண்டினால், 'தலை இராமபிரான் திருவடித் தாமரைகளை அடைந்து இன்பம் நுகர்கின்றது' என்று எழுதப்பட்டது. பகவானே! அருள்க. என் தலைவன் தலையைக் கொடுப்பாயாக. பூதனைக் கண்ட பின்னரே என் பிராணபதியைத் தீப்புகுந்து பின்தொடர்வேன்" என்று வேண்டுகிறாள்.

வானரங்கள் அரக்கியின் சூழ்ச்சி என்று ஆர்ப்பரிக்கின்றன. இலக்குமணனோ இனம் புரியாது கலங்குகிறான். இராமனோ. 'அறுபட்டதலையின் செய்தியை அறுபட்ட கை எழுதியது' என்பதன் உண்மையை வெளிப்படுத்துவோமாக! என்றவனாய், 'நின் தலைவனது அறுபட்ட தலை கொணரப் படுமாயின் அது நின் வினாக்களுக்கு விடை கூறுங்கொலோ' என்கிறான். 'யான், உண்மையாகவே இந்திரசித்துவின் மனைவியாயின், அறுபட்டதாகிய என் நாதன் தலையும் என்னால் கேட்கப்படும் வினாக்களுக்கு இன்றியமையாது விடை கூறும்' என்கிறாள். தலை கொணரப்படுகிறது. 'நின்னையே புகலிடமாகவுள்ள என்னுடன் சிறிது உரையாடல் வேண்டும் நாத. கட்டளையின் வண்ணம் ஈண்டெய்திய என் சொல்லில் யாரும் நம்பிக்கை வைத்திலர்' என்று வேண்டவும் தலை மௌனத்தை விட்டிலது. "தலைவ! இவர்கள் முன்னிலையில் எதற்காக என்னை ஈர்த்துவந்து அவமானப்படுத்துகின்றாய்? இலக்குமணனோடு போர் நிகழுங்கால் நினக்குத் துணைசெய்தற் பொருட்டு என்தந்தையை யான் அழைத்து வந்திலேன் என்றோ என்னைச் சினக்கின்றாய்?" என்று மொழிய அச்சொல்லைக் கேட்டுச் சினத்தால் கவரப்பட்டது போலவும், நாணத்தால் பற்றப்பட்டது போலவும், அத்தலை பரபரப்புடன் ஒருமுறை நகைத்து, 'ஏடி! என்பிரியே! சுலோசனை! என்னை நன்றாகப் பழிக்கின்றாய். இப்பொழுது இவ்வெல்லாரும் எனதன்புரிமைக் காதலியாக நின்னையே நம்புகின்றார்கள்' என்று மேக முழக்கம் போன்ற பேரொலியால் கூறி ஒழிவுற்றது. எல்லோரும் அதுகேட்டு வியப்பு மனத்தினராய்ச் சுலோசனையின் கற்புநிலையைப் பாராட்டினார்கள்.

அநுமான் சுலோசனையை நிலத்தில் வீழ்ந்து வணங்கி, 'யான் செய்த எல்லாப் பிழைகளையும் பொறுத்தருள்க' என்று வேண்டுகிறான். பின்னர்ச் சுலோசனை இராமலக்குமணர்களை, அன்புடன் வணங்கி வாயுபுத்திரனைத் துணையாகப் பெற்றுத் தன் காரியத்தை நிறைவேற்றுதற்குப் புறப்பட்டாள். முகூர்த்தப் பொழுது கடந்தபின்னர், 'ஆ! கற்பரசியாகிய, சுலோசனை தன் காதலன் சென்றுழிச் சென்றாள்' என்று தழுதழுத்த குரலில் அநுமான் வந்து

கூற, சுலோசனையின் நிகழ்ச்சியால் எல்லோரும் சிறிது நேரம் துன்பக் கடலுள் முழ்கினார்கள்.

அனுமன் இராமனிடம், 'போர் நிகழுங்கால் நினக்குத் துணை செய்தற் பொருட்டு என் தந்தையை யான், அழைத்து வந்திலேன்' என்று அக்கற்பரசி சொன்னதன் உண்மையை என் மனது அறிய விரும்புகின்றது அருள் செய்க' என்று வேண்டுகிறான். இலக்குவனோ 'ஐய, அவ்விளம்பெண் எப்பொழுது என் கண்ணுக்குப் புலனாயினாளோ, அது முதலே எனக்குப் பெரிய கவற்சி உண்டாயது. நெஞ்சம் நிலையின்றிச் சுழல்கின்றது. இதன் காரணமறிந்திலேன். தெரிவிக்க' என்கிறான். இலக்குவன் மார்பில் இராகவன் தன் கைத்தலத்தை வைத்தான், 'ஆ, கெட்டேன், ஆ! குழந்தாய்! சுலோசனே தீவினையானாகிய யானே எனது மருமகனைக் கொன்றேன். கொடியவனாகிய யானே நின் மரணத்திற்குக் காரணமாயினேன்' என்று வாய் திறந்து அழுகிறான். இராகவன் தேற்றும் வண்ணம் அவனைத் தடவ, இலக்குவன் துன்பங்களை மறந்து இயல்பாகிறான். ஈதென்னை, என்று யாவரும் இராமனைக் கேட்கின்றனர். அவனும், 'சுலோசனையோ நாக குலத்துக்குத் தலைமணியான ஆதிசேடனது புதல்வி ஆவாள்! திக்குவிசய யாத்திரை நிமித்தம் நாகருலகத்தை எய்திய இந்திரசித்துவுக்குக் கொடுக்கப்பட்டாள். இலக்குமணனை இந்நிலவுலகத்தில் அவதரித்த ஆதிசேடன் என்று உணர்மின்கள், அதனால் அவனுக்கு உள்ளேயுள்ள தொடர்பால் அத்தகைய மனக்கலக்கம் உண்டாயிற்று. கற்புடையாருட் சிறந்தவளன்றே சுலோசனை. ஆ! அச்சுலோசனையினது கற்பின் மாட்சியைக் காண்மின்கள்' என்று கூறினான்.

கற்பிற் சிறந்த கனங்குழையார் தம்முள்ளே
சொற்புகழின் மிக்காள் சுலோசனையே – பொற்பில்
திகழுடலைத் தீப்பெய்து சென்றன ளாலன்பன்
புகுமிடத்தைச் சார்ந்தின் புற.

'சுலோசனை' எனும் சிறுகதை இராமாயணத் தொடர்புடையது. இதைப் பற்பல வேறுபாடுகளுடன் வடமொழியில் பெரியார் பலர் செய்துள்ளனர். 'முதற் காப்பியமாகிய இராமாயணப் பயிற்சியில் மிக்க பற்றுடையார்க்குங் கேட்டவளவினானே நிகரிலா வியப்பைத் தருகின்ற இச்சுலோசனை என்னும் பழஞ்சரிதம் அறிஞர் வாயிலாக கேட்கப்படுகின்றது' என்று நூல் தொடங்குகிறது. இது ஏதாவதொன்றில் அடங்கும் என்று ஊகஞ் செய்யத்தக்க நிலையில், 'அறிஞர், வாயிலாக கேட்கப்படுகின்றது' என்று இதன் தொடக்கத்தில் கூறியது போலும் என்கிறார் பண்டிதமணி.

**"எங்ஙனமாயினுங் கதை நிகழ்ச்சி மிக்க சுவையுள்ளதே"**

> அவலச் சுவையே இதன்கண் சிறப்பாக நிலவுகின்றது. சுலோசனையின் அருங்கற்பும், பெருங்குணங்களும், அறிவுடைமையும், தலைவன் பிரிவால் துன்புறு நிகழ்ச்சிகளும் படிப்போர்க்கு வியப்பும் உருக்கமும் தோன்றி இன்புறுத்துவனவாம்.
>
> உண்மையில் கற்புநிலை இற்றென்று இதனால் தெள்ளிதின் உணரலாம்.
>
> இப்பிறப்பில் பயிலப்படாதாரைக் கண்டவிடத்து ஓரோவழி உண்டாம் அகநிகழ்ச்சிகளுக்கு முற்பிறப்பின் தொடர்பே காரணமென்பதும் இதன்கட் காணலாம்.

என்று, 'அறிஞர்காள்' என விளித்து 'அறிவித்தல்' செய்கிறார் பண்டிதமணி. மதுரையிலுள்ள இராமேசுவர தேவஸ்தான வடமொழிக் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்தியாரதி ஸ்ரீ ர. கிருஷ்ணமாச்சாரியர் எம்.ஏ., அவர்களால் திங்கள்தோறும் சென்னையினின்று பிரசுரிக்கப்படும்' ஸஹரஷ்யா எனும் வடமொழிப் பத்திரிகையில் பத்துவருடங்களுக்கு முன் (1912) வந்தது. இப்போது தமிழறிஞர்களும் படித்து இன்புறும் பொருட்டுத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது' என்று எழுதியுள்ளார்.

பாண்டியனிடம் வாதாடிய கண்ணகி, கணவனுடன் உடன்கட்டை ஏறிய பெருங்கோப்பெண்டு என்று இருவரின் ஒருமித்த வடிவினளாகிய, 'சுலோசனை' பண்டிதமணியைக் கவர்ந்தமைக்கு அவர் மரபுப் பெண்ணியவாதியாகத் (conservative feminist) திகழ்ந்தமையும், 'சுலோசனையின் கற்பு, கணவன் மேல் வைத்த அன்பு, உயிர்விடத் துணியும் நேசம், மாமனோ, இராமனோ தயங்காது வினவும் தீரம்' ஆகியவை அவரைக் கவர்ந்தமையுமே ஆகும்.

## செயல்தளம்

மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையை உண்டாக்கியவரும், அது எந்நாளும் ஊறின்றிப் பணியாற்றிட ஆலோசனை கூறுபவரும் அவராகவே இருந்தார்.

> **எனக்கு இவ்வளவு சிறப்புச் செய்கிற அளவு யான்**
> **இச்சங்கத்திற்குத் தொண்டு செய்ததாக நினைவுக்கு**
> **வரவில்லை. யான் படித்தது எங்கே என்றால்**
> **இங்கேதான்; யான்தான் இச்சங்கத்தின் முதல் மாணாக்கன்**

என்று செட்டிநாட்டரசர், தம் படத்தை மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையில் திறந்து வைக்கையில் நன்றிகூறுமுகமாகப் பண்டிதமணி கூறுகிறார்.

இவரது சமயக் கட்டுரைகள் குறித்து, 'ஈண்டுத் தொகுக்கப்பட்ட ஐந்து கட்டுரைகளும் திருவைந்தெழுத்துப் போலப் பாராட்டத்தக்கன. அவை முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல், முத்திப்பேறு என்பனவற்றின் நுட்பங்களை விளக்குவன. இந்நூல் சைவ உண்மையை அறிய விரும்பும் தமிழ் மாணவர்களுக்கு எளிதில் பெரும்பயன் தரும் இணையற்ற அறிவுக் கருவூலமாகப் போற்றற்பாலது' என்பார் கா.சு.பிள்ளை.

பதிற்றுப்பத்தந்தாதி, சுந்தரவிநாயகர் பதிகம், வீரவிநாயகர் மாலை, செட்டிநாட்டரசரை வாழ்த்திப் பாடிய வாழ்த்தியல் செய்யுட்கள், 'மண்ணியல் சிறுதேர் 'நூலில் மொழி பெயர்த்தமைத்த செய்யுட்கள், பிற தனிச் செய்யுட்கள் என்பன இவரது கவித்துவ அறிவிற்குச் சான்றாய்த் திகழ்வன.

கதிர்மணி விளக்க உரைகள் கருத்துரை, பதவுரை, விளக்கவுரை எனும் முக்கூறுகளைப் பெற்றுள்ளன. திருப்பாட்டுகளின் வைப்புமுறை, சொற்களின் பொருத்தம், நயம், ஆகியவற்றை விளக்கும் ஆற்றொழுக்கு நடை போற்றற்குரியது. சான்று:

மெய்யுணர்தல் என்பது பொய்ப் பொருளாகிய உடல் முதலியவற்றின் நிலையாமை நீங்கி, மெய்ப்பொருள் ஆகிய கடவுளை அநுபவ வாயிலாக உணர்தல் என்னும் பொருள் உடையதாகும் (திருச்சதக உரை).

இத்திருச்சதகத்தின் முதல் பதிகத்தில் பொய்ப் பொருள் கடிந்து, மெய்ப்பொருளாகிய கடவுள் உணர்ச்சியில் தலைப்படுதலும் இரண்டாம் பதிகத்தில் அதற்குத் துணை புரிய வேண்டிய மனம் நன்னெறிப்படாமை கண்டு, அதனை இடித்துரைத்து அறிவுறுத்தலும் தெளிவுறுத்தப்பட்டன.

"சுட்டறிவு என்பது, இது குடம், இஃது ஆடையென்று கண்ட பொருளைப் பொறி முதலிய கருவிகளுடன் கூடி நின்று அறியும் அளவை அறிவாகும். இதனை ஆன்மபோதம் என்றும் கூறுவர். இவ்வறிவால் அறியப்படுவன எல்லாம் அழியும் இயல்பினவாகும். இவ்வுண்மையை 'ஈண்டு அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்து' என மெய்கண்டாரும், அதன் விளக்கமாகச் 'சுட்டறிவினால் அறியப் பட்ட சுட்டுப் பொருள் எல்லாம் அசத்து' என மாதவச்சிவஞான முனிவரும் கூறியவாற்றால் தெளியலாம்" என்கிறார்.

நயஞ்செறிந்த எழுத்துகள் அவருடைய எழுத்துகள். 'கண்ணப்பர் முன் பல பார்வை விலங்குகளைக் கொண்டு வேடர் சென்றனர் என்பதை விளக்கும் பொழுது,

'இறைவன் வலக்கண்ணில் ஊறுபாடு கண்டு தம் வலக்கண்ணை இடந்து அப்பிய பின் இடக்கண் பார்வை ஒன்று கொண்டு இறைவனைக் கண்டு இன்புறுநிலையினர் முன் வேடர் பல பார்வை விலங்குகளைக் கொண்டு சென்றனர் என்னும் இந்நிகழ்ச்சியில், வேற்றுப் பார்வையின்றி ஒரு பொருளையே அகப்பார்வையால் ஆரா அன்பினில் கண்டு கொண்டிருப்பவர் கண்ணப்பர் என்பதும் புறப்பார்வை பலவுடையர் வேடர்கள் என்பதும் தோன்றக் கூறிய நயம் அறிந்து இன்புறத்தக்கது' என்கிறார்.

"தமிழ்மக்களை நிரம்பிய அறிவுடை யோராக்குதல் வேண்டும். அறிவு கல்வியாலே பெருகுவது! எனவே நாடு முழுதும் கல்விக் கழகங்கள் நிறுவவேண்டும்" என்று துணிந்த பண்டிதமணி தாம் பிறந்த மகிபாலன்பட்டி எனும் சிறுகிராமத்தில், சிறார்கள் பயில வீரவிநாயகர் பெயரால் தொடக்கப் பள்ளியை நிறுவினார். 'வீரவிநாயகர் கல்விக் கழகம்' என்ற பெயரில் இன்றும் அப்பள்ளி திறம்படச் செயல்படுகின்றது. மேலைச் சிவபுரி எனும் மூதூரில் வ.பழ.சா. பழனியப்ப செட்டியார் என்பவர் பெருந்தனவணிகர். அவரிடம் பண்டிதமணி, தனவணிகர் அறிவு முன்னேற்றத்துக்குத் தாங் கருதிய திட்டம் பற்றிக் கூற அவரும் உடன்பட்டார். 'சங்கங்கள் வாயிலாக மொழி வளர்த்தல் வேண்டும்' என்பது இவரது கொள்கை. அதன்படி, 'சன்மார்க்க சபை' நிறுவப்பட்டது. கி.பி. 1909இல் அமைக்கப்பட்ட இச்சபை, சைவமும், தமிழும் தழைத்தோங்கப் பணி புரியும் நோக்கினது. இதன் உறுப்பாக, கணேசர்செந்தமிழ்க் கலாசாலை என்றொரு கலைக்கழகமும், 'தொல்காப்பியனார் புத்தகசாலை' என்றொரு நூல்நிலையமும் நிறுவப்பட்டன.

நாட்டில் உள்ள நல்லறிஞர்களை அழைத்து வந்து உரையாற்றச் செய்தல்.

உண்டி, உடை, உறையுள் தந்து மாணாக்கருக்குக் கல்வி பயிற்றல்.

தனித்தமிழ்த் தேர்வில் மாணவர்களைச் சிறந்த முறையில் தேர்ச்சி பெறச் செய்தல் ஆகியன இதன் நோக்கங்களாம்.

இன்று தனவணிகர் நாட்டிலே பற்பல தமிழ்க்கழகங்கள் தோன்றி அறிவொளி பரப்ப வித்திட்டவர் பண்டிதமணியே ஆவார்.

'தமிழ்க் கலாசாலைகள் ஊர்தோறும்
நிறுவுதல் வேண்டும். பத்து ஊர்களுக்கு
ஒன்றாக எல்லா வசதிகளும் நிரம்பிய
ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் புலவர்

> பெருமக்கள் அடிக்கடி வந்து அறிவுரை வழங்குதற்கேற்றனவாகக் கழகங்கள் நிறுவுதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, இச்சன்மார்க்க சபையை நினைவு கூர்மின். . . நம் தன வணிக நகரங்களில் இதுபோன்று இருபது சபையேனும் தோன்றுவனவாயின், நம் மக்கள் அறிவுச் செல்வத்தை நிரம்ப எய்தி நாகரிக நிலையில் மேம்படுவார் அல்லரோ? பொருளுடையர் என்று நம்மைப் பிறர் புகழ்வதிலும், அறிவுடையார் என்று புகழ்வதன்றோ நமக்கு மேம்பாடு தரும்'

எனும் பண்டிதமணி இச்சபை தொடங்கிய இரண்டு ஆண்டனுள், நாம் கண்டறியாத எத்தனை பெரியோர்களைக் கண்டோம்! அவர் வாயிலாக எத்தனை நுண்பொருட்களைக் கேட்டு அறிவுப் பெருக்கம் எய்தினோம் என்று வியக்கின்றார்.

ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின் இயக்கத்தோடு தன்னையும் இணைத்துக் கொள்ள வேண்டும். தன்னால் இயன்ற அளவிற்குச் சமூகத்திற்குத் தொண்டாற்ற வேண்டும். ஒரு இலட்சிய தமிழ்ச் சமூகம் அமைவதற்கு அதன் இயக்கத்தோடு சேர்ந்து தம் பங்கைச் செம்மையாக ஆற்றியவர் பண்டிதமணி. ஒவ்வொரு மனிதரும் தமிழுணர்வுடைய மனிதராக மாற வேண்டிய அவசியத்தைப் புலப்படுத்துவன அவரது ஆக்கங்கள். கூடி வாழ்தல் என்பது மனிதரது பலமாகவும், பாதுகாப்பாகவும் திகழ்கிறது. நெடிய பாரம்பரியத்தைக் கொண்ட தமிழினம், கல்வியறிவும், இலக்கியச் செழுமையும், அனைத்து வளமும் நிறைந்து வாழ அவாவித் தக்கதொரு 'முன்மாதிரியாக'ப் பண்டிதமணி தம்மை நிலைநிறுத்தி இருக்கும் பாங்கினை அறியலாம்.

## துணை நூல்கள்


1. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், உதயண சரிதம், மேலைச் சிவபுரி, சன்மார்க்க சபை, 1929, மு.ப.,
2. பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார், சுலோசனை, மேலைச் சிவபுரி, சன்மார்க்க சபை, 1922, மு.ப.,
3. பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார், உரைநடைக்கோவை (முதல் பகுதி), மேலைச் சிவபுரி, சன்மார்க்க சபை, 1941.
4. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், கதிர்மணி விளக்கம் (திருவாசகம்-திருச்சதகம்) புதுக்கோட்டை, ரிப்பன் பிரசுரம், 1947.

5. பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார், உரைநடைக்கோவை (இரண்டாம் பகுதி), மேலைச் சிவபுரி, சன்மார்க்க சபை, 1941.

6. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், மணிமலர்த்திரட்டு, புதுக்கோட்டை, தமிழ் நிலையம், 1944.

7. சோமலெ, பண்டிதமணி, மதுரை, ஒளி பதிப்பகம், 1955.

8. விசு. திருநாவுக்கரசு, பண்டிதமணி- வாழ்க்கைச் சரித்திரம் புதுக்கோட்டை, தமிழன்னை நிலையம், 1944.

9. பொ.வே. சோமசுந்தரனார், பண்டிதமணி, சென்னை, கழக வெளியீடு, 1954.

10. மெ. சுந்தரம், எம்.எஸ். மெய்யப்பன் (பொறுப்பாசிரியர்கள்) பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் திருவுருவச் சிலை திறப்புவிழா மலர், மகிபாலன்பட்டி, 1974.

11. அ. விசுவநாதன் செட்டியார், பண்டிதமணியவர்களின் உருவப்படத் திறப்புவிழா மலர், சென்னை, சாது அச்சுக் கூடம், 1940.

12. பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார், உதயண சரிதமும் சுலோசனையும், மேலைச் சிவபுரி, சன்மார்க்க சபை, 1983, (பண்டிதமணி நூற்றாண்டு விழா வெளியீடு)

13. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், மண்ணியல் சிறுதேர், சென்னை, அன்னை நிலையம், 1933.

14. சிதம்பரம் செட்டியார், நீ. கந்தசாமி, மு.கதிரேசன் செட்டியார் மணி விழா மலர், தஞ்சை, கூட்டுறவு மின்னியக்குப் பதிப்பகம், 1941.

15. ஜெ. ஸ்ரீசந்திரன், மண்ணியல் சிறுதேர் (திறனாய்வுக் கட்டுரைகள்) சென்னை, வர்த்தமானன் பதிப்பகம், 1967.

16. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், பி.ஸ்ரீ. இராமானுசாச்சாரி, கௌடலீயம், பொருள் நூல், சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1979, 1980.

******

# உரைநடைத்திறன்

அ. ஆலிஸ்

தமிழ் இலக்கிய அறிஞர் தம் வரிசையில் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களுக்குத் தனித்த ஒரு இடம் உண்டு.

> தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலின் தோன்றாமை நன்று

எனும் வள்ளுவரின் குறளுக்கேற்பத் தமிழன்னை பெற்றெடுத்த தவப்புதல்வர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார். இவர் இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளி. தமது முயற்சியினாலும் ஊக்கத்தினாலும் தமிழின் மீது கொண்ட தாகத்தாலும் தம்மைத் தலையாகச் செய்து கொண்டவர். தமிழறிஞர் பலரை நாடி அறிவும் அனுபவமும் மிகப் பெற்றவர். எழுத்தாற்றல், இனிய சொல்லாற்றல், படைப்பாற்றல் எனும் முக்கொள்கைகளில் முதன்மை பெற்றவர். இருமொழி வல்லுநர். இத்தனைச் சிறப்பு மிக்க தமிழ் மைந்தனின் உரைநடைத்திறனை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பல்வேறு இலக்கியப் படைப்புகளைப் படைத்த பண்டிதமணியின் உரைநடைத்திறமும் இலக்கியப் புலமையும் அளப்பில. பல்வேறு படைப்புகளிருப்பினும் அவரது 'மண்ணியல் சிறுதேர்' என்ற இலக்கியப் படைப்பு மட்டும் அவர்தம் உரைத்திறனைக் கணிப்பதற்கு இங்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### பண்டிதமணியின் உரைத்திறன்

ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் தமிழில் செழித்து வளர்ந்த உரைநடை வளர்ச்சியில் குறிப்பிடத் தக்கவகையில் பல உரைநடைக் கட்டுரைகள் எழுதிய பெருமை பண்டிதமணியைச் சாரும். அவர்தம் உரைத்திறனுக்கு அவரது 'உரைநடைக்கோவை' நூல் சான்றாகும். 'மண்ணியல் சிறுதேர்' என்ற நூல் அவரது மொழிபெயர்ப்பு நூலாயினும் அதனையும் தமிழ் மரபுக்கேற்ப மொழிபெயர்ப்புச் செய்துள்ளமை போற்றற்குரியது. இந்நூலில் செய்யுட்களை மொழிபெயர்த்து விட்டு, அச்செய்யுட்களுக்குக் கீழே அவர் தரும் விளக்கங்களும் உரையாடல்களும் அவர்தம் உரை மாட்சியைப் புலப்படுத்துவன ஆகும். பண்டிதமணியின் உரைத்திறனுக்கு ஆக்கமளிப்பனவாகப் பின்வருவனவற்றைச் சுட்டலாம்.

1. சொல்லாட்சி
2. தொடரமைப்புகள்
3. தூய தமிழ் நடை
4. கவித்துவப் பாங்கு

மொழிநடை சரிவர அமைவதும், தகுந்த இடத்தில் தகுந்த பொருள் தெரிவிக்கப்படுவதும், இலக்கியப் படைப்பாளனின் மனத்திட்பம் வெளிப்படுவதும் ஆகிய பல்வேறு நிலைகளில் ஓர் இலக்கியப்படைப்பு சிறப்பாக அமைவதற்குக் காரணம் அங்குக் கையாளப்பட்டிருக்கும் சொல்லே ஆகும். சொல் தெரிவு படைப்பாளனின் ஆளுமையை வெளிப்படுத்தும்; அதுமட்டுமன்று அவரது வாழ்க்கைப் பின்னணி, காலப் பின்னணி முதலியவற்றையும் காட்டும். இவ்வகையில் பார்த்தால் பண்டிதமணி உரைநடையில் தூய செந்தமிழ்ச் சொற்களே நிறைந்துள்ளன.

> இசை பாடியாயிற்று, நீண்டநேரம் இவ்விசை பாடினமையான், முதுவேனிற் காலத்திற் கடுங்கதிர்க் கிரணங்களில் உலர்ந்த தாமரைக் கொட்டை போல் துடிக்கின்ற கருமணிகளையுடைய என்கண்கள், பசியினாற் சுழலுகின்றன. ஆதலின் என் மனைவியை யழைத்துச் சிறிது பழஞ்சோறு உண்டோ? இன்றோ? என்று கேட்பேன். (காரிய நிமித்தமும் நாடக நிகழ்ச்சியும் பற்றிப் பாகத மொழியிற் பேச வேண்டியவனாகின்றேன்).
>
> அந்தோ! அந்தோ! நெடுநேரம் இசைபாடினமையான் உலர்ந்த தாமரைத் தண்டு போல என் உடலுறுப்புக்கள் உணவு வேட்கையால் வாடுகின்றன. ஆதலின் இல்லமெய்தி மனைவியால் ஏதாயினுஞ் சித்தஞ் செய்யப்பட்டதுண்டோ இன்றோ? என்று அறிவேன். (சுற்றிப்பார்த்து) இதுதான் நமது இல்லம். இதன்கட் புகுகின்றேன். (புகுந்து பார்த்து) ஆச்சரியம்! ஈது என்னை! நம் வீட்டில் வேறு மாதிரியான ஏற்பாடுகள் உள்ளன. . . . . . (பக். 69–70)

இச்சான்றுக்கான அடிக்குறிப்பில் 'தூய வடமொழியிற் பேச இயலாதவர்கள் பிராகிருதத்தில் பேசுவது இயல்பு. தமிழ் இயற்கை மொழியாதலானும் இதன்கண் இழிவழக்குக்கு விதியின்மை யானும் பயில்வார்க்கு மொழிநயமுந் தோன்றச் செந்தமிழ் மொழியிலேயே எழுதப்படும்' என்று விளக்கம் தருகிறார். இச்சான்றிலேயே உவமைத் தொடர், அடுக்குத் தொடர், வியப்புத் தொடர், வினாத்தொடர் எனப் பல்வேறு தொடரமைப்புகள் விரவி வந்துள்ளதைக் காணலாம். மேலும், முதுவேனில், மனைவி, பழஞ்சோறு, இல்லம் போன்ற தூய தமிழ்ச்சொற்களும் அமைந்து வருவதைக் காணலாம். உள்ளத்து உணர்வை அப்படியே புலப்படுத்தும் மொழிநடை பண்டிதமணியின்

நடையில் அமைவதால் அவரது படைப்பு இலக்கியச் சுவை மிக்கதாய் அமைகிறது. உரையாடல்களில் எளியநடை அமைகிறது. இதனால் வாசிப்பவர்க்கு எளிதில் பொருள் புலனாகிறது. பின்வரும் சான்றில் நகைச்சுவை உணர்வு எளிதில் புலனாகிறது.

*சூத்திரதாரன்:* பெண்ணே! ("நெடுநேரம் இசை பாடினமையால்" என்னும் இது முதலியவைகளைக் கூறி) நம் வீட்டில் ஏதாவது உண்ணத்தக்கது உண்டோ? இல்லையோ?

*நடி:* ஐய! எல்லாம் இருக்கின்றன.

*சூத்திரதாரன்:* யாது யாது இருக்கின்றது?

*நடி:* அவையாவன: அக்கார அடிசில், நெய், தயிர், அரிசி, தாங்கள் உண்டற்கு உரிய மற்றைச் சுவைப் பொருள்கள் முதலிய எல்லாம் உள்ளன. இவ்வாறே என்றும் இருக்குமாறு தங்கள் குலதெய்வங்கள் அருள் செய்க!

*சூத்திரதாரன்:* நம் வீட்டில் இவ்வெல்லாம் உள்ளனவா? அன்றிப் பரிகசிக்கின்றாயா?

*நடி:* (தனக்குள்) பரிகசிக்கின்றேன் (வெளிப்படையாக) ஐய! அங்காடியில் உள்ளன.

*சூத்திரதாரன்:* (சினத்துடன்) ஆ! இழிந்தவளே! இத்தகைய நினது அவா சிதைவுறுக. இப்பொழுது வளைவு சுவர்க்கு ஆதாரமாக இடப்படும் அடுக்குச் செங்கலைப் போல் என்னை உயரத்தூக்கி வீழ்த்தியமையால் நீயும் கேடுறுவாயாக. (பக். 70-71)

இங்குச் சூத்திரதாரனாகிய நடனின் மனைவி நடி அவனைப் பரிகசிக்கும் நகைச்சுவை உணர்வு சரியாகப் புலப்படுத்தப்படுகிறது. அதற்கு ஏற்ற தொடரமைப்புகளும் சொற்களும் பயன்படுத்தப் பட்டுள்ளமை இதற்கான காரணமாகும். வியங்கோள் தொடர் அவளது தாழ்ந்து பேசும் நிலையைச் சுட்டுகிறது. அடுத்தே அமையும் பட்டியல்களை உள்ளடக்கிய கலவைத் தொடர் எதிர்பார்ப்பை உண்டாக்குகிறது. 'ஐய! அங்காடியில் உள்ளன' என்ற எளிய தொடர் இரங்கல் தொனியிலான கூற்று நிகழ்த்துபவரின் விளித்தலையும் பரிகாசத்தையும் குறிக்கின்றது. மீண்டும் இச்சான்றில் உவமைத் தொடர் இடம் பெறுவது குறிக்கத்தக்கது.

பொதுவாகவே பண்டிதமணியின் நடையில் பல்வேறு வகைத் தொடர்கள் இடம்பெற்று கூற்று நிகழ்த்துபவரது

உணர்ச்சியைத் தெரிவிப்பதைக் காணலாம். வினாத்தொடர், ஏவல் தொடர், வியங்கோள் தொடர் முதலியன கலந்து இடம்பெறுவதால் இத்தகைய பொருள் தெரிவிப்பு அமைகிறது.

**வசந்தசேனை:** ஆ! தாயே! எங்கிருக்கின்றாய்? ஆ! ஐய! சாருதத்தரே! யான் மனவிருப்பம் முற்றும் நிறைவேறப் பெறாமலே கொல்லப்படுகின்றேன். இனி உரக்கக் கதறுகிறேன் (ப. 356).

**சகாரன்:** மகனே! நெஞ்சமே! தலைவ! மகனே! இத்துறவி போகலாமா? அன்றி நிற்கலாமா? (தனக்குள்) போகவும் வேண்டாம். நிற்கவும் வேண்டாம் (வெளிப்படையில்) ஐய! என் நெஞ்சொடு ஆலோசித்துத் துணிந்துள்ளேன். என் உள்ளம் இவ்வாறு கூறுகிறது (ப. 324).

இச்சான்றுகளில் பல்வேறு தொடர்கள் வருவதனைக் காணலாம்.

ஒரே சொல் அல்லது ஒரே வாய்பாட்டுத் தொடர் திரும்பத் திரும்ப வருவது இவரது நடையில் காணக்கூடிய ஒன்று.

**சந்தனகன்:** - - - - - - ஆதலின் "காணப்பட்டான்" என்றாதல் "காணப்பட்டாள்" என்றாதல், "ஆரியன்" என்றாதல் "ஆரியை" என்றாதல் விரும்பிய வண்ணம் பேசும் இயல்புடையேன்" (ப. 299)

இங்கு 'என்றாதல்' என்ற சொல்லும் செயப்பாட்டு வாக்கிய அமைப்பும் திரும்பத் திரும்ப வருகின்றன.

ஆ! ஆ! நகரத்தினின்றும் நெடுந்தூரம் கடந்து வந்துளேன் ஆதலின், இனி இவ்வண்டியினின்றும் இறங்கி இச்சிறுமரச் சோலையுள் மறைந்து செல்லலாமா? அன்றி இவ்வண்டிக்குரிய தலைவரைப் பார்க்கலாமா? இச்சிறுமரச் சோலைக்கட் புகுதலாற் பயனென்? மாட்சிமிக்க சாருதத்தர், தம்மையடைந்தவர் பால் அன்பு மிக உடையவர் என்று கேட்டிருக்கிறேன். ஆதலின் அவரை நேரில் கண்டு செல்வேன். (ப. 308)

இங்கு வினாத்தொடர் தொடர்ந்து வருவது கூற்று நிகழ்த்தும் பாத்திரத்தின் ஐய உணர்வைப் புலப்படுத்தும். 'உம்' என்ற இணைப்புச் சொல்லாகிய இடைச்சொல்லைப் பயன்படுத்தித் தொடர்களை இணைப்பதன் வாயிலாகப் பெரிய தொடர்களை உருவாக்குகிறார்.

**விதூடகன்:** ஆ! விலைமகளின் பொருளாசையும், கண்ணோட்டமின்மையும் மிக்க வியப்பைத் தருகின்றன. வேறொரு

சொல்லும் பேசப்பட்டிலது. நட்பு முறை பற்றிப் பலவாறு என்னென்னவோ பேசிவிட்டு இங்ஙனமே இரத்தினமாலையைக் கவர்ந்து கொண்டாள். இவ்வளவு செல்வப் பெருக்கு உடையவளாயிருந்தும் என்னை நோக்கி, "ஐய! மைத்திரேயரே! இளைப் பாறுங்கள்; இக்கிண்ணத்துள்ள நீரை அருந்திச் செல்லுங்கள்" என்று இதுதானும் கூறினாளல்லள். ஆதலின், அவ்விழிதகையாளாகிய விலைமகளின் முகத்தையும் இனிப் பாரேன். (வெறுப்போடு) கிழங்கின்றியுண்டாய தாமரையும், வஞ்சகம் இல்லாத வணிகனும், திருடுதல் இல்லாத பொற்கொல்லனும், கலகமில்லாத சிற்றூர்க் கூட்டமும், அவாவற்ற கணிகையும், எஞ்ஞான்றும் இல்லையென்று இங்ஙனம் உலகம் கூறும். ஆதலின் என் நண்பரையடைந்து இவ்விலைமகள் பால் அவர் வைத்துள்ள பற்றை ஒழித்து விடுவேன் (சுற்றிப் பார்த்து) என் அன்பு மிக்க நண்பர் இவ்விளமரப் பூங்காவில் இருக்கின்றார். செல்கின்றேன். (அருகில் சென்று) நமக்கு மங்கலம் உண்டாக. நம் நலம் வளர்க.

மிக நீண்ட தொடர்களை அமைத்துக் கொள்வதில் பண்டிதமணிக்கு விருப்பமே எனலாம். பண்டிதமணியின் தமிழ்ப் புலமையும் தமிழ்மொழியைச் சரளமாக அவர் எழுதுதற்கும் பேசுவதற்கும் கையாளும் முறையும், மொழிவீச்சும் இத்தகைய பெரிய தொடரமைப்புகளைக் கையாளக் காரணங்களாகின்றன.

தூய தமிழ்ச்சொற்களாலாய நடையைக் கையாளுவது பண்டிதமணியின் நோக்கமாக பேச்சு வழக்குச் சொற்களைக் கூட இலக்கியச் சாயலுக்கு மாற்றி விடுவதனால் இவரது நடையில் கவித்துவம் சிறக்கிறது.

"கும்பீலக! நீ சென்று எனது வரவை மாட்சிமிக்க சாருதத்தர்பால் தெரிவி" என்று பெருமைமிக்க வசந்தசேனை எனக்குக் கட்டளையிட்டிருக்கிறாள். ஆதலின், மாட்சிமிக்க சாருதத்தரது இல்லத்தை அடைகின்றேன். இதோ சாருதத்தர் இளமரப் பூங்காவில் இருக்கின்றார். அந்தப் பொல்லாத சிறுபையலும் இதோ இருக்கின்றான். ஆதலின், அருகிற் போகின்றேன். இச்சிறுமரப் பொழிலை அடைதற்குரிய வழி மூடப்பட்டிருக்கின்றதே! நிற்க. இந்தப் பொல்லாத சிறுபையலுக்குக் குறிப்புக் காட்டுகின்றேன். (என்று சிறிய பரற்கற்களை எறிகின்றான்).

இங்குப் 'பயல்' என்ற சொல் பையல் என மாற்றம் பெறுகிறது. சில இடங்களில் பேச்சுச் சொற்களை முழுச் சொல்லாக மாற்றமின்றி எழுதுகிறார்.

> நீங்கள் நில்லுங்கள். உங்கள் அப்பனுடையதா இவ்வண்டி? நீங்கள் முன்னால் ஏறுகின்றீர்களே. *(ப. 333)*

அப்பன் என்ற சொல் பேச்சுமொழிச் சாயலில் மாற்றமில்லாமல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

> பெருமானாகிய சாருதத்தரே! அடைக்கலம் அடைந்தவனாகின்றேன். ஆதலின் காத்தருளுங்கள் காத்தருளுங்கள். எது தங்கள் உள்ளத்திற்கு ஒத்ததோ அதனைச் செய்யுங்கள். மீண்டும் இத்தகைய காரியத்தைச் செய்ய மாட்டேன். *(ப. 477)*

இச்சான்றில் வேண்டுதல் கலந்த அருளுங்கள் என்ற சொல் திரும்பத் திரும்ப வருகிறது. இதனால் ஒரு எளிமை கிடைக்கிறது.

பண்டிதமணி பரந்த அறிவுடையவர். தமிழ்ப் புலமையுடையவர். பல்வேறு நூல்களுக்குப் பேருரை எழுதியவர். இலக்கியங்களும் கட்டுரைகளும் படைத்தவர். தமிழ்ப் பணி புரிந்தவர். இத்தகைய தாக்கங்களினால் இவர் மொழிபெயர்ப்பு நூல் யாக்கின்ற போதும் தூய தமிழ்நடை இயல்பாகவே இடம் பெறுகிறது. இயல்பிலேயே தமிழ்ப் பற்று மிக்கவராகவும் செய்யும் பணியையும் தமிழ்ப் பணியாகவே ஆக்கிக் கொண்டு விட்ட வாழ்க்கையை உடையவராகவும் இருந்ததனால் தமிழின்பால் தீராத ஆர்வம் நாளாக ஆக இவருள் வளர்ச்சியடைந்து அது இவரது உரைநடையில் மிளிரக் காணலாம். எனவேதான் இவரது நடையில் கொச்சைச் சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள் போன்றவற்றுக்குச் சற்றும் இடமில்லை. மொழிபெயர்ப்பு நூலாக இருப்பினும் தமிழ்ச்சாயலை முழுக்க முழுக்கப் பெற்ற நூலாக 'மண்ணியல் சிறுதேர்' விளங்குகிறது. தெரிந்தெடுத்த சொற்பயன் பாடும், தொடரமைப்புகளும் தூயதமிழ்நடையை உருவாக்கத் துணை புரிகின்றன. இவரது நடையில் அமையும் பல்வேறு விதச் சொற்றொடர்கள் பாத்திரங்களின் உணர்வைத் தெரிவிக்கப் பயன்படுகின்றன. இவரது இலக்கியத்தைப் படிப்போர் உயர்ந்த கவித்துவத்தையும் மொழித் தூய்மையையும் அனுபவித்து மகிழலாம்.

******

# கதிர்மணி விளக்கப்பேருரை

ஆ. தசரதன்

## பின்புலம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற அரிய கல்வி நிறுவனங்களைக் கருணை உள்ளங் கொண்ட பெருவணிகர்கள் சிலர் உருவாக்கிக் கட்டிக்காத்து வந்த காலக்கட்டத்தில் பண்டிதமணியார் தமிழில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இத்தமிழ்ப் பயிற்சி முதலில் இலக்கியச் சொற்பொழிவாகத்தான் அவருக்கு அமைந்தது. பின்னர் அது சைவ சமயச் சொற்பொழிவாகவும் பரிணமித்தது. இவ்விருவகைச் சொற்பொழிவுகளையும் கேட்டோரின் விருப்பத்திற்கு ஏற்பத் திருவாசகத்தின் சில பகுதிகளுக்கு அவர் உரை விளக்கம் கண்டுள்ளார். இந்த உரைநூல் மூன்று தொகுதிகளாக வெளி வந்துள்ளது. 'கதிர்மணி விளக்கப் பேருரை' என்ற தலைப்பில் அமைந்த இவ்வுரை நூல்கள் அவருடைய பெயரைப் பெற்றுச் சிறக்கின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய தமிழ்ப் பணிக்குப் பின்னர், 1947, 1950, 1953 எனும் ஆண்டுகளில் இவ்வுரை நூல்கள் அவரால் வெளியிடப் பெற்றுள்ளன. இதைப் பற்றி அப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்,

> யான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியனாகத் தொண்டாற்றிய போது இந்த உரைமலர் முகிழ்த்து மலரத் தொடங்கியது. . . . . அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வாழவேண்டுமானால், இந்த அறிவுச்சுடர் விளக்கம் எழுதுவதற்கு இடங்கொடுத்த ஒன்றே போதும்

என்கிறார். நீத்தல் விண்ணப்பம் எனும் பெயரில் அமைந்த கதிர்மணி விளக்கப் பேருரையின் அணிந்துரையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மட்டுமல்லாது, அனைத்து நண்பர்களின் தூண்டுதல்களே பண்டிதமணியார்க்குப் பல பட்டங்களையும் பாராட்டுதல்களையும் பெற்றுத் தந்தன எனில் மிகையாகாது.

திருவாசகத்திற்கு ஓர் உரை அமைய வேண்டும் என்ற எண்ணம் பண்டிதமணியாருக்கு நீண்ட நாட்களாகவே இருந்து

வந்தது என்பதைச் சோமலெ தாம் எழுதிய **பண்டிதமணி** எனும் நூலில் குறிப்பிடுகின்றார். தாம் எழுதிய **வளரும் தமிழ்** எனும் நூலின் கையெழுத்துப் படியினைப் பண்டிதமணியாரிடம் காட்டிய போது, 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கு நம்பிள்ளை, நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை ஆகியோர் வியாக்கியான உரை செய்திருப்பதைப் போல் தேவாரம் முதலிய சைவத் தமிழ் நூல்களுக்கும் வியாக்கியான உரை எழுத யாராவது முன்வருவது வரவேற்கத்தகுந்த இலக்கியப் பணி' என அவர் தம்மிடம் கூறியதாகச் சோமலெ எழுதியுள்ளார். இந்த முயற்சியைப் பண்டிதமணியாரே மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. **திருவாசகத்தின் திருச்சதகக் கதிர்மணி விளக்கப் பேருரையின்** முன்னுரையில் (பக். 3-4 முதற் பதிப்பு) பண்டிதமணியார் எழுதியிருப்பது வருமாறு:

> இத்தகைய அருமருந்தன்ன திருவாசகத்தை, யான் சிறுபருவம் தொட்டே சிறப்பு முறையில் பயின்று வந்ததோடு, பற்பல முறையாக ஆராய்ந்து கண்ட உண்மைகளை, அறிஞர் அவைக்களங்களில் சொற்பொழிவாகவும் நிகழ்த்தியதுண்டு. அஃதறிந்த தமிழன்பர்கள், என் சிறுமை உணர்ந்தும், அன்பு காரணமாக என்னை அதற்கு உரை எழுதும்படித் தூண்டி வந்தனர். கலையறிவும், அநுபவ உணர்வும் நிரம்பப் பெற்ற பெரியவர்கள் மேற்கொள்ளத்தக்க பணியை, அத்துணைத் தகுதியில்லாத சிறியேன் மேற்கொண்டதற்குக் காரணம் எனக்கு ஆற்றல் உண்டென்று நினைத்த அன்பர்களின் கட்டளையை மறுக்க இயலாமையும் என் அவாவுமேயாம்.

1947இல் வெளியிடப்பெற்ற இந்நூலுக்குத் தமிழ் அன்பரும் தொழில் அதிபருமான கருமுத்து. தியாகராசச்செட்டியார் பொருளுதவி செய்துள்ளார்.

இதைப் போன்றே, **நீத்தல் விண்ணப்பத்தின்** உரைநூல் தேவகோட்டை அரு. அருணாசலச்செட்டியாரின் நிதி உதவியால் வெளிவந்துள்ளது. அதைத் தொடர்ந்து வெளிவந்த **திருவெம்பாவை** உரைக்கு ராம.மு.லெ. இலக்குமணச் செட்டியார் நிதி உதவி அளித்துள்ளார். இவற்றை நன்றியுணர்வோடு பண்டிதமணி நினைவுகூர்ந்துள்ளார். இச்செய்ந்நன்றிப் பகுதியைப் படித்ததுமே இவர் போன்றவர்களுக்கு மேலும் மேலும் உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் செல்வந்தர்களுக்கு இயல்பாய் ஏற்படும். 'திருச்சதக உரை'யின் முன்னுரையில்,

> அறிவு, அன்பு முதலிய நற்குணங்களும், கடவுள் வழிபாடு, ஒழுக்க முதலிய நற்செயல்களும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற என் இனிய

> நண்பர், ஆ. தெற்கூர், திருவாளர், கருமுத்து. தியாகராசச் செட்டியார் அவர்கள்.... தமிழ் இலக்கியச் சுவையில் ஈடுபாடும் அதன் வளர்ச்சியிற் பேரார்வமும் உடையவர்கள்; திருவாசகத்தையும் திருக்குறளையும் தம் கண்போற் போற்றி வருபவர்கள்; சிறுபருவந்தொட்டு என்பாற் பிறழாத அன்பும் மதிப்பும் உடையவர்கள்....

எனப் பண்டிதமணி பாராட்டியுள்ளார். அடுத்ததாக வெளிவந்த 'நீத்தல் விண்ணப்ப உரை'யின் மதிப்புரையில், அருணாசலம் செட்டியாரை,

> தேவகோட்டையில் தன வணிகர்மரபில் செல்வப் பெருங்குடியில் தோன்றியவர்கள்; இளம் பருவத்திலேயே தமிழ் நூல் சைவ நூல்களிற் பயிற்சியுடையவர்கள்; சிவ வழிபாட்டில் பேரார்வமும் அடக்கமும் யாவர் மாட்டும் அன்பும் நல்லொழுக்கமும் வாய்க்கப் பெற்றவர்கள்; காய்தல் உவத்தல் அகற்றி ஒன்றை நடுநின்று ஆராய்தலும், அங்ஙனம் ஆராய்ந்து கண்ட முடிபை எத்துணை இடையூறு நேரினும் அஞ்சாது முடிக்கும் திண்மையும் உடையவர்கள்; கற்றவரிடத்து மதிப்பும் சிவதருமத்திற் பற்றும் உடையவர்கள்; நாற்பது ஆண்டுகளாக அவர்கள் தம் அரிய நட்பு எனக்குண்டு

எனப் பாராட்டியுள்ளார். 'திருவெம்பாவை' உரைநூல் வெளிவருவதற்குப் பொருளுதவி செய்த இலக்குமணச் செட்டியாரையும் நன்றி பாராட்டுவதற்கு அவர் மறக்கவில்லை. அதன் பதிப்புரையில்,

> .... கல்வி கேள்விகளில் ஆர்வமும் கடவுட் பத்தி முதலிய சைவ ஒழுக்கமும் அறிவுடையோர் குழுவில் கூடி மகிழும் பெருமையும் உடையவர்கள். எனக்கு நெடுநாட் பழக்கமுடைய நண்பர். கற்றோரை மதித்துப் பெருமைப் படுத்தும் குணமுடைய அவர்கள் செய்த இந்த நல்லுதவி என்றும் நினைவுகூரத்தக்கது

என்கிறார். பெருவணிகர்கள் வமிசத்தில் வந்த கண்ணகி, காரைக்காலம்மையார் அவ்வக் காலங்களில் கொண்டிருந்த தமிழ் நாட்டு அரசியல் மற்றும் தமிழ் ஆன்மீகத் தொடர்புகளை மீண்டும் புதுப்பித்துக் கொண்டிருத்தலைப் பண்டிதமணியார்க்கு அமைந்த பின்புலத்திலும் பார்க்க முடிகிறது.

தமிழையும் சைவத்தையும் கையில் எடுத்துக் கொண்ட பண்டிதமணியார் 'பண்டிதமணி', 'மகாமகோபாத்தியாய', 'முதுபெரும்புலவர்', 'சைவ சித்தாந்த வித்தகர்' எனப் பல பட்டங்கள் பெற்றதற்கு அவருக்கு அமைந்த பலத்த பின்புலமே காரணமாகும். இதனாலே அவரை மதிப்பிட்ட பலர் அவருடைய தமிழ் இலக்கியச் செழுமையையும் சைவத் திருமுறைகளில் தோய்வையும் பாராட்டினர். **கலைக்களஞ்சியம்** (தொகுதி 3, பக். 184) பின்வருமாறு அவரை மதிப்பிடுகிறது:

> இவர் திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை யென்னும் பகுதிகட்கு எழுதிய சைவ சித்தாந்தக் கருத்துச்செறிந்த விரிவுரை பெரும்புலவர்களால் பெரிதும் பாராட்டப் பெறுகிறது

சிவபெருமானை முன்னிலைப் படுத்தித் தமிழையும் சைவத்தையும் வளர்த்த வர்க்கத்தினர் இருபதாம் நூற்றாண்டிலும் தாம் தாம் சார்ந்த பின்புலத்தின் துணையால் மீண்டும் அவற்றை வளர்க்கும் நோக்கத்தில் கங்கணம்கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ளனர். கதிரேசன் செட்டியாரும் அதற்கு விதிவிலக்கன்று.

## திருவாசகஉரைகள்

பழந்தமிழ் நூல்களுக்கான பழைய உரைகள் உரை செய்தவர் பெயரின்றியே அறியப்பட்டுள்ளன. உரைகளில் பலவகைகள் உளதாயினும் அரும்பதவுரை, கருத்துரை, ஆராய்ச்சிக் குறிப்புரை போன்றவற்றையே பெரிதும் பலர் செய்து வந்தனர். மூலநூல்கள் எளிதில் பொருள் புரிய இயலாத நிலையிலோ அதை மேலும் சிறப்பிக்கும் எண்ணத்திலோ உரைகள் தோன்றுவது இயல்பு. இந்நிலையில், திருவாசகத்தின் பெருமையைச் சிறக்க வைக்கும் கருத்தில் பண்டிதமணியார் தாம் செய்த உரைக்குத் தம் பெயரிலேயே **கதிர்மணிவிளக்கம்** எனும் பேருரை எனப் பெயரிட்டார். இதை அவர், **திருச்சதக உரை விளக்கத்தில்** 'உரைமுறை' எனும் பகுதியில் (பக். 7) கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றார்:

> இனி ஒவ்வொரு திருப்பாட்டிற்கும் கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என்னும் நான்கு வகையாகக் கொண்டு உரைவிளக்கம் செய்யப்படும். அவற்றுள் கருத்துரைத்தலாவது, திருப்பாட்டை அடுத்து அதன் திரண்ட கருத்தையும் முன்னர்த் திருப்பாட்டோடு உள்ள இயைபையும் சுருக்கிக் கூறுதலாகும். கண்ணழித்தல் என்பது, பதப்பொருள் சொல்லுதல்; பொழிப்புத் திரட்டல் என்பது,

மூலபாடத்தின் பதங்களை விட்டு அவற்றிற்குச் சொல்லிய பொருள்களைத் திரட்டிக் காட்டுதல். இவ்விரண்டு வகையும் பதப்பொருள் கூறுமுகமாக அமையும் ஆதலின், விரிவஞ்சிப் பொழிப்புத் திரட்டுதலைத் தனியே கூறினோம் அல்லேம். அகலங்கூறலாவது, திருப்பாட்டின் பொருளைத் தூய்மை செய்தற்கு வினாவிடை உள்ளுறுத்தும் ஆற்றன் முதலிய வற்றாலும் குறிப்பாலும் சொற்களில் அமைந்து கிடக்கும் பொருள் நயங்களை விளக்கியும், இன்றியமையாத இடங்களில் மேற்கோள்காட்டியும் விளக்கிக் கூறுதலாகும். இம்மூன்றும் முறையே கருத்துரை, பதவுரை, விளக்கவுரை என உரிய இடங்களில் எடுத்தாளப்படும்.

இவ்வாறு செய்யப்பெற்ற பேருரையில், அடிக்குறிப்புப் பகுதியில் எடுத்தாண்ட தமிழ் நூல்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. பழந்தமிழ்ப் பனுவல்களும், சைவத் திருமுறைகளும், சைவசித்தாந்த சாத்திரங்களும் இவற்றுள் அடங்கும். ஆதலால், பண்டிதமணியின் பேருரை பெரும்பாலும் பழந்தமிழ் இலக்கியங்கள் மற்றும் சைவத்திருமுறைகளின் கருத்துகள் மிகுந்து, ஆங்காங்கே சைவசித்தாந்தக் கருத்துகள் கலந்து காணப்படுகிறது.

முதன்மையாகத் தோன்றிய திருவாசக உரைகள் முழுமையான முயற்சிகளாக அமையவில்லை. திருப்போரூர் சிதம்பர சுவாமியார் திருவாசகத்திற்கு உரையெழுதத் தொடங்கிப் பாதியில் நின்று விட்டதாகத் தெரிகிறது. 1897இல் பிருங்கிமா நகரம் இராமசாமி முதலியார் பதவுரை, கருத்துரை, விளக்கவுரையுடன் திருவாசகத்தைப் பதிப்பித்திருக்கிறார். அதன் பின்னர் மறைமலை அடிகளார் நான்கு அகவற்பாக்களுக்கு மட்டும் விரிவுரை செய்திருந்தார். கா.சு. பிள்ளை திருவாசகம் முழுமைக்கும் சிற்றுரை செய்திருக்கிறார். பண்டிதமணி கதிரேசனார் நான்கு அகவற் பாக்களை ஒழித்துச் செய்யத் தொடங்கிய விளக்கப் பேருரையும் 'திருச்சதகம், நீத்தல் விண்ணம், திருவெம்பாவை எனும் மூன்று பகுதிப் பாடல்களுடன் நின்று விட்டது. நான்காம் பாடலான திருவம்மானையில் முதல் மூன்று பாடல்களே அவரால் உரை செய்யப் பெற்றுள்ளன. அவை வெளியிடப் பெறவில்லை. பண்டிதமணியார் காலத்தில் தொடங்கி, அவர் மறைவுக்குப் பின்னர் முழுவதுமாக வெளிவந்த க.சு. நவநீத கிருஷ்ண பாரதியாரின் ஆராய்ச்சிப் பேருரை 1954 இல் இலங்கையில் வெளியிடப்பெற்றது. இது பொழிப்புரையும் விளக்கவுரையுமாக அமைந்தது. இதனை அடுத்து, 1954இல் வெளியிடப் பெற்ற திருவாசக அநுபூதி உரை என்னும் திருவாசக வியாக்கியான உரை சீகாழித் தாண்டவராயரால்

1834ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று அதற்கு அடுத்த ஆண்டில் அரங்கேற்றப் பெற்றது. இதன் ஏட்டுப் பிரதிகளை 1954ஆம் ஆண்டில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்தார் வெளியிட அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத்தார் அனுமதி அளித்துள்ளனர். முதல் நான்கு அகவல்களுக்கான வியாக்கியான உரை அடங்கிய முதல் தொகுதியும், ஏனைய பகுதிகளுக்கான உரை அடங்கிய இரண்டாம் தொகுதியும் வெளியிடப் பெற்றுள்ளன.

சமரச சத்திய ஞானசபையினர் 1929இல் ஈ. சுந்தரமாணிக்க யோகீஸ்வரரின் உண்மை ஞான விளக்க உரையை இரு பாகங்களாக வெளியிட்டுள்ளனர். 1963இல் புலியூர்க்கேசிகனின் தெளிவுரையும், 1971இல் ஜி. வரதராஜனின் விரிவுரையும் வெளியிடப் பெற்றுள்ளன. மறைமலை அடிகளாரின் உரையும், கா.சு. பிள்ளையின் உரையும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் மறுபதிப்புச் செய்யப் பெற்றுள்ளன. இவற்றைப் போன்றே புலியூர்க் கேசிகனாரின் உரை பல பதிப்பைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

'திருவாசகத்திற்குச் சைவப் பற்றில்லாதவர்கள் பலர் உரை எழுதியுள்ளனர்' என்று **பண்டிதமணி** எனும் நூலை எழுதிய சோமலெ குறைபட்டுக் கொள்கின்றார். சைவப்பற்றுள்ளவர்களாகக் கருதப்பெறுபவர்களாகச் சோமலெ குறிப்பிடும் மூவரில் முதலாவதாக வரும் மறைமலை அடிகள் **திருவாசகத்தின்** நான்கு அகவற்பாக்களுக்கு மட்டும் விரிவுரை செய்துள்ளார் எனக் கண்டோம். இவருக்கு முன்பே இந்நான்கு அகவற்பாக்களுக்கும் வியாக்கியான உரை செய்த சீகாழித் தாண்டவராயரின் ஏட்டுப் பிரதிகள் அடிகள் பார்வைக்குக் கிடைத்திருக்குமா என்பது ஐயமே. அடிகள் செய்த விரிவுரையின் முதல் பதிப்பின் விவரம் தெரியவில்லை. ஆனால் அதைத் திருவரங்கனார் என்பவர் வெளியிட்டதாகத் தெரிகிறது. 1948ஆம் ஆண்டு திருசங்கர் கம்பெனியால் இரண்டாம் பதிப்பு வெளிப்பட்டது. அதன் பின்னர்ப் பல பதிப்புகளைச் சைவ சித்தாந்தக் கழகமே வெளியிட்டு வருகிறது. 1932இல் கா.சு. பிள்ளை சைவ சித்தாந்த சமாஜம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கித் **திருவாசகத்திற்குச்** சிற்றுரை கண்டுள்ளதாகத் தெரிகிறது. ஆயின் இவ்வுரை நூல் 1949ஆம் ஆண்டில் சென்னை இரத்தின நாயகர் சன்ஸ் அவர்களால் வெளியிடப் பட்டிருக்கின்றது. பண்டிதமணிக்குப் பின்பு வேறு பலரும் **திருவாசகத்திற்கு** வெவ்வேறு விதமாக உரைகண்டு வருகின்றனர். பண்டிதமணியார் தாம் செய்யவிருந்த **திருவாசக** உரை 'வியாக்கியான உரை'யாக அமைய வேண்டுமென்ற கருத்துடையவராக இருந்தார்

எனத் தெரிகிறது. இதன் காரணமாக அவர் வடமொழிப் புலமையும் பெற்று, வடமொழிப் பண்டிதர்களின் துணையுடன் ஆகமக் கருத்துகளை அறிந்து தம் உரையில் பெய்துள்ளார்.

திருவாசகப் பதிப்பில் அமைந்துள்ள பாடல்களின் தொகுப்பு முறைப்படி பண்டிதமணியார் தம் உரையைத் தொடங்கவில்லை. மறைமலை அடிகள் செய்த நான்கு அகவற்பாக்களுக்கான விரிவுரை அவர் காலத்திலேயே வெளிவந்து விட்டதால் அவற்றை விடுத்துத் திருச்சதகத்திலிருந்து உரை செய்யத் தொடங்கினார். அவர் தொட்டதை ஏன் மீண்டும் தொட வேண்டுமென்று நினைத்தாரா? அல்லது முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்த்தாரா? எனத் தெரியவில்லை. மாறாக, முதன் முதலில், மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் கல்லால மரத்தின் கீழ்க் கண்ட இறைவனின் நிலை கண்டு மெய்தான் அரும்பி, விதிர் விதிர்த்த நிலையில் பாடிய பாக்களிலிருந்து உரை செய்ய வேண்டு மென்ற வரலாற்று நிலையிலே அவர் திருச்சதகத்தை உரைசெய்ய எடுத்துக் கொண்டதாகக் கருதலாம். மேலும், திருவாசகத்தின் உண்மை திருச்சதகம் நுதலிய பொருள் ஆதலாலும் முதலில் இப்பகுதியை உரை செய்ய எடுத்துக் கொண்டிருக்கலாம். 1947இல் புதுக்கோட்டை தனி அரசுப் பகுதியில் "கதிர்மணி விளக்கம் எனும் பேருரை" என்ற பெயருடன் திருவாசகத் திருச்சதக உரை அச்சிடப்பட்டு ரிப்பன் பிரசுரமாக வெளிவந்தது. அக்காலக்கட்டத்திலேயே இவர் 'மகாமகோபாத்தியாய, முதுபெரும்புலவர், பண்டிதமணி' எனும் பட்டங்களைப் பெற்றிருந்தார்.

இப்பேருரை வெளிவந்த உடன் பலருடைய பாராட்டுதல் களையும் பண்டிதமணியார் பெற்றார். அவரவர் தமக்குத் தெரிந்திருந்த தமிழ் ஞானத்தோடு பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. அனைத்துப் பாராட்டுரைகளும் தொகுக்கப் பெற்றுத் தனி நூலாக வெளியிடப்பட்டிருப்பதும் கருதத்தக்கது. இதில் கவிமணியாரின் சில பாடல்களும் அடங்கும். திரு.வி.க.வின் பாராட்டுரை வருமாறு:

> இற்றை ஞான்று இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சிதம்பரசுவாமிகள், சிவஞான முனிவர் முதலியோர் ஓர் உருக்கொண்டு, கதிரேசச் செட்டியாராகத் தோன்றினர் என்று கூறலாம். 'கதிர்மணி விளக்கம்' ஒரு தமிழ்க் கலங்கரை விளக்காய்ப் புலவர்க்குத் துணைபுரியும் பண்பு வாய்ந்தது; பெயருக்கேற்ற பொருண்மை யுடையது

இப்பாராட்டுரையிலிருந்து பண்டைத் தமிழ் நூல்கள் மற்றும் உரைகளின் பயிற்சி பண்டிதமணியார்க்கு அமைந்திருந்தது தெளிவாகிறது. ம. பாலசுப்பிரமணிய முதலியார் என்பார் எழுதியிருந்த பாராட்டுரை வருமாறு:

> . . . . சைவசித்தாந்த சாத்திரக் கருத்துகளுக்கு இது ஒரு பெருங்களஞ்சியமாகும். இவ்வுரையைப் பன்முறை பயில்வோருக்கு இக்கருத்துக்கள் எளிதில் விளங்குவதோடு இவற்றின் நுட்பமும் சிறப்பும் பயனும் நன்கு புலப்படும்.

பதவுரை, கருத்துரை, விளக்கவுரை கண்ட பண்டிதமணியாரின் உரையைச் சைவசித்தாந்த சாத்திரக்கருத்துகள் செறிந்த உரை எனச் சிலர் கருதியும் எழுதியும் வந்தனர். **திருவாய்மொழிக்கு** அமைந்த ஈடு உரைகள் போல், ஒரு பாடலுக்கும் அடுத்த பாடலுக்கும் உள்ள தொடர்பு ஒரு சங்கிலித் தொடர்போல் பொருத்தமாக அமைந்திருத்தலை வெளிப்படுத்திக் காட்டும் பண்டிதமணியாரின் உரை, ஒரு பகுதிக்கும் அடுத்த பகுதிக்கும் உள்ள தொடர்பையும் எடுத்துக்காட்டத் தவறுவதில்லை. இதைப் பற்றி அவரே கூறும் கருத்து வருமாறு:

> இதற்கு முன் திருச்சதகத்திற்கு ஒரு பேருரை எழுதி வெளியிட்டேன். அவ்வுரையை ஊன்றிப் படித்துணர்ந்த அன்பர்கள் பலர் மதிப்புரை உதவி என்னை மேலும் தொடர்ந்து உரையெழுதி வரும்படி வற்புறுத்தினர். சிவநேயச் செல்வர்களாகிய அன்பர்கள் தம் ஆணை கடத்தற்கரியதாகலின், அன்னார் பணித்தபடி, அடுத்த *நீத்தல் விண்ணப்பத்திற்கு* முன்னர் மேற்கொண்ட முறைப்படியே கதிர்மணி விளக்கம் என்னும் பேருரை எழுதி முடித்தேன்

என 1950இல் தாமே வெளியிட்ட **நீத்தல் விண்ணப்பத்தில்** குறிப்பிடுகின்றார். இதே முறையில் இவர் எழுதிய **திருவெம்பாவை** (1953) உரையும் அமைந்துள்ளது. கருமுத்து. தியாகராசச் செட்டியாருக்கு இந்த நூலை இவர் உரிமையாக்கியுள்ளார். **திருவெம்பாவை கதிர்மணி விளக்கப்** பேருரைக்கு வாழ்த்துரை நல்கிய குன்றக்குடி அருணாசலதேசிகர், 'மெய்கண்ட சாத்திரங்களின் அடிப்படையிலே நின்று மாணிக்கவாசகரிடத்தும் அவர்தம் திருநூலிடத்தும் அளவுகடந்த பத்தி நிறைந்த உள்ளத்துடன்' உரையை எழுதியதாகக் குறிப்பிடுகின்றார். **திருவெம்பாவையின்** வரலாற்றையும் தைந்நீராடல் மார்கழிநீராடல் பற்றிய செய்திகளையும்

உரைமுகத்தே பண்டிதமணி தெளிவாக விளக்கியுள்ளதாகத் தம் முகவுரையில் வெள்ளைவாரணனார் எழுதியுள்ளார். மேலும் அவர்,

> திருச்சதகத்திற் பொதுவாகக் கூறப்பட்ட பத்தி வைராக்கிய விசித்திரங்களுள் வைராக்கியத்தின் சிறப்பியல்பினை நீத்தல் விண்ணப்பத்திலும் பத்தியின் விளைவிற்குத் துணைபுரியும் உமையம்மையின் பேருபகாரச் செயலை இத்திருவெம்பாவையிலும் அடிகள் விளக்கியருள்கின்றார். இவ்வியல்பினைப் புலப்படுத்தி நம் பண்டிதமணியவர்கள் இத்திருவெம்பாவை யுரையினைத் தொடங்குகின்றார்கள். இச்சிறப்பினை யுற்றுநோக்குவோர் பரிமேலழகரது உரைத்திறம் இவர்கள் பால் அமைந்திருத்தலை நன்குணர்வர்

என்கிறார் (பக். xi). இவ்வாறு பண்டிதமணியாரைப் பற்றிய பாராட்டு முறைத் திறனாய்வுக் கருத்துகளே பெரும்பான்மை வெளிப் பட்டுள்ளன.

## திருச்சதகப் பேருரை

திருவாசகத்தின் திருச்சதகப் பாக்கள் திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரால் அருளப் பெற்றவை. அவை வடமொழிப் பொருளில் 'பத்தி வைராக்கிய விசித்திரம்' எனப் பெயர் பெற்றுள்ளன. இறைவனின் வியக்கத்தக்க பல்வேறு இயல்புகளே இங்கு 'விசித்திரம்' எனப்படுகின்றன. 'வைராக்கியம்' என்றால் 'பற்று அறுதி' ஆகும். பல்வேறு பாவகைகளில் பாடப்பெற்றவை இவை. மெய்யுணர்தல், அறிவுறுத்தல், சுட்டறுத்தல், ஆத்துமசுத்தி, கைம்மாறு கொடுத்தல், அநுபோக சுத்தி, காருணியத் திரங்கல், ஆனந்தத்தழுந்தல், ஆனந்த பரவசம், ஆனந்தாதீதம் எனும் பத்துப் பொருள்களைக் கொண்டு, பொருளுக்குப் பத்துப் பாடல்கள் வீதம் மொத்தம் நூறு பாடல்களைக் கொண்டுள்ள சதகப் பகுதி ஆகும். சிவனின் பழமை, அண்டம், அணு, உயிர்கள் பிறப்பு, இயல்பு, இறப்பு, ஞான ஆசிரியனின் உபதேசம், பற்று அறுத்தல் போன்ற செய்திகளைக் கூறுபவை இவை.

> இத் திருவாசகத் திருப்பாட்டுக்கள், தெய்வநலங் கனிந்த சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைந்தவை; இனிமை எளிமை ஆழமுடைமை யென்னுங் குணங்கள் தம்பால் அமையப் பெற்றவை; மெய்யன்புடன் ஓதுவார் கேட்பார் உணர்வார் எல்லோரையும் மிக்க பேரின்பத்தில் திளைத்துப் பரவசப்படுத்தும் இயல்பின; அநுபவ உண்மைகளைத்

> தெளிவுண்டாம்படி விளக்குவன. இன்னும் திருவாசகத்தின் அருமை பெருமைகள் அளப்பரியனவாம்

எனப் பண்டிதமணியார் 'திருச்சதக உரைத் தொடக்கம்' எனும் பகுதியில் கூறுகின்றார். இதை அடுத்துத் திருச்சதகத்திற்கு 450 பக்கங்களில் உரைமுறையும், பேருரையும் காணப்பட்டுள்ளன. பாட்டு முதற்குறிப்பு முதலில் இடம் பெறுகின்றது. 'பத்தி வைராக்கிய விசித்திரம்' எனும் வடமொழித் தொடருக்கு விளக்கம் அளிக்கும் பண்டிதமணியார் திருச்சதகப் பாக்களின் பெருமைகளை உரைத் தொடக்கம் என்ற பகுதியில் கீழ்க்காணுமாறு விரிக்கின்றார்.

> திருச்சதகம் என்பது தெய்வத்தன்மை வாய்ந்த நூறு திருப்பாட்டுக்களைத் தன் அகத்துக் கொண்ட ஒரு பகுதி என்னும் பொருளதாம். சதம் என்னும் வடசொற்கு நூறு என்பது பொருள். அந்நூறு எண்களையுடைய திருப்பாட்டுக்களைத் தன்னகத்துக் கொண்டது என்னும் பொருளில், ஓர் இடைச்சொற்புணர்ந்து, சதகம் என்றாயிற்று. ஒரு பாட்டின் ஈற்றில் உள்ள சொற்றொடர், சொல், எழுத்து என்னும் இவற்றுள் ஒன்றை அடுத்த பாட்டின் முதலாகக் கொண்டு பாடுதல் அந்தாதித் தொடர் எனப்படும். இவ்வந்தாதித் தொடராகவே இந்நூறு திருப்பாட்டுக்களும் அருளிச் செய்யப்பட்டன. "மெய்தான் அரும்பி" என முதல் திருப்பாட்டின் முதலடி தொடங்கப்பட்டு, "மெய்யர் மெய்யனே" என நூறாம் திருப்பாட்டின் இறுதி முடிக்கப்பட்டமை அறிக.

திருச்சதகப் பாக்களைப் பதிகம் பதிகமாக - பத்துப்பத்துப் பாக்களாகப் பகுத்துக் கொண்டு, பாட்டு நுதலிய பொருள், ஒவ்வொரு பாட்டுக்கும் அடுத்த பாடலுக்கும் உள்ள தொடர்பு, பதிகம் நுதலிய பொருள், ஒரு பதிகத்திற்கும் அடுத்த பதிகத்திற்கும் உள்ள தொடர்பு, சதகம் நுதலிய பொருள் எனப் பேருரை அமைந்துள்ளது.

'திருவாசக உண்மை' அல்லது 'பத்தி வைராக்கிய விசித்திரம்' எனும் திருச்சதகப்பாக்கள் கருத்துரை, பதவுரை, விளக்கவுரை 'எனப் பண்டிதமணியால் விளக்கம் பெற்றுள்ளன. விளக்கவுரைப் பகுதியே மிகச் சிறந்த பகுதி. இதில்; விளக்கமும், மேற்கோள் விளக்கமும், உலகியல் விளக்கமும் அமைந்துள்ளன. ஒன்றற்கொன்று இயைத்துக் காட்டுதல் இப்பகுதியில் அமைந்துள்ளது. பழந்தமிழ் நூல்களிலிருந்தும், சைவத் திருமுறைகள் மற்றும் சாத்திரங்களிலிருந்தும் ஆதாரப் பகுதிகள் காட்டியும், இவை வரும் நூல்களை அடிக்குறிப்புகளில் பட்டியலிட்டும் உள்ளார். சான்று வருமாறு:

> இத் திருச்சதகத்தின் முதல் திருப்பாட்டால் அடிகள் தம் இயல்பு கூறினாராயினும், அடிகளின் அன்பு வடிவத்தை நம்மனோர் நெஞ்சக்கிழியின் ஓவியமாகப் பொறித்து நினைவுகூர்தற்கு இத்திருப்பாட்டு மிகவும் பொருந்திய தென்பது அறிந்து இன்புறத்தக்கது. வடமொழியார் இத்தகைய திருப்பாட்டுக் களைத் தியான சுலோகம் என்ப. அடிகளின் மனம் மொழி மெய்கள் இறைவயப்பட்ட நிலையைக் குறிக்கும் இத்திருப்பாடற் கருத்தே இத் திருச்சதகத்தின் இறுதித் திருப்பாட்டிலும் தெளிவாக்கப்பட்டிருத்தல் அறியத்தக்கது.

இத்தகைய அமைப்பில் விளக்க உரை நல்கிச் செல்லும் பண்டிதமணியார் ஆங்காங்கே, 'இலக்கணக்குறிப்புகள்' காட்டு கின்றார். இறுதியில் நூலையும், தலைப்பையும், பதிகத்தையும், பாட்டையும் இயைத்துக் காட்டுகின்றார். 'கொள்ளேன்' எனத் தொடங்கும் திருச்சதக இரண்டாம் பாடலின் விளக்கவுரையில், 'கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர், கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று' எனும் புறப்பாட்டு அடிகளை (204:3-4) மேற்கோள் காட்டுகின்றார். இதுபோன்ற பகுதிகள் இந்த விளக்கவுரையில் ஏராளம் உள்ளன. புராணக் கருத்துகளை விரித்துரைத்தல் மிகுந்து காணப்படுகிறது. சிவனை மூவருள் ஒருவராகக் கருதுவது பொருந்தாது எனும் நான்காம் பாடலின் விளக்கவுரையில் இதனைச் 'சிவஞானமாபாடியத்'தானும் உணர்க என்றும், 'மூவராய் நின்றதோரார்' என்று சிவஞானசித்தி சுபக்கமும் கூறுவதாகக் குறிக்கின்றார்.

'தவமே புரிந்திலன்' எனத் தொடங்கும் ஐந்தாம் பாடலின் விளக்கவுரையில், 'தவம்' என்பதற்கு,

> தவம் ஈண்டுக்கிரியையையும் யோகத்தையும் குறிக்கும். அகத்தும் புறத்தும் வழிபடுதலாகிய கிரியையும், மூச்சுக் காற்றை அடக்கி, மனத்தை அசைவற நிறுத்தி, உயிர் பரத்துடன் ஒன்றுதல் என்னும் அகவழிபாடாகிய யோகமும் தட்ப வெப்பங்கள் முதலியவற்றால் உடற்கு உறும் துன்பத்தைப் பொறுத்துச் செய்யத்தக்கனவாதலின், தவம் என்று கூறப்பட்டன. சிவஞான போதம் எட்டாஞ்சூத்திர வுரையில், தவம் என்பது சரியை கிரியா யோகங்களை உணர்த்தும் என்ப. 'ஈண்டுத் தவம் எனப்பட்டன பிறவல்ல வென்பார், சரியை கிரியா யோகங்களை எனக் கிளந்துரைத்தார் என்பது சிவஞான முனிவர் உரை. சரியை முதலிய மூன்றனையும் தவம் என்னுஞ் சொல் உணர்த்துமாயினும், ஈண்டுத் 'தண்மல ரிட்டிறைஞ்சேன்' எனச்

சரியை வேறாகக் கூறப்பட்டமையால், தவம் என்பது கிரியையையும் யோகத்தையும் உணர்த்துவதாகும். மேலும் "சரியை கிரியா யோகங்களை" என்னும் மெய்கண்டார் திருவாக்கிற்கு உரைகண்ட சிவஞான முனிவர் (சிவஞான போதச்சிற்றுரை சூ.8) "கிரியா யோகங்கள் என்னும் உம்மைத் தொகை வடநூன்முடிபு; கிரியா யோகம் இரண்டற்கும் தீக்கை ஒன்றென்பது தோன்ற, அவ்விரண்டனையும், தொகுத்தோதிச் சரியையைத் தமிழுக்குரிய வீற்றான் வேறு வைத்தார்" என்று கூறினார். இதனால் விசேடதீக்கை ஒன்றே கிரியை யோகங்களை மேற்கோடற்குரிய தகுதியையளிக்கும் என்பது புலனாம். இந்நயம் பற்றித் தவம் என்னுஞ் சொல்லால் கிரியையையும் யோகத்தையும் கோடல் பொருந்தும் என்பதுணர்க. தவமே என்புழி, ஏகாரம், தேற்றப் பொருட்டு (பக்கம் 24−25).

இனி, இப்பாடலில் ஒன்றற்கொன்றை இயைத்துக் கூறும் பகுதி வருமாறு:

இறைவனை அடைதற்குச் சைவாகமங்களிற் கூறப்பட்ட நெறி நான்காகும். அவை, சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. இவை ஒன்றற் கொன்று சாதனமும் சாத்தியமுமாக, இறுதியாகிய ஞானத்தால் வீடடைதல் கூடும். "விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும், அரும்பு மலர் காய் கனிபோல் ஆகும்" என்பர் தாயுமானவர். ஞானம் வீடு பயக்கும் உணர்வாதலின், வீட்டிற்கு வாயிலாகிய அதனைப் பெறுதல் இன்றியமையாததாகும். அது பெறுதற்கு அரிதாயிற் றென்பார், "சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்" எனவும், அதற்குச் சாதனங்களாகவுள்ள யோக நெறி, கிரியை நெறியாகிய இவற்றையும் அடைந்திலேன் என்பார், "தவமே புரிந்திலேன்" எனவும், அவ் வெல்லாவற்றிற்கும் முதற்படியாகவுள்ள சரியையிலேனும் தலைப்பட்டேனோவெனின், அதுவும் இன்றென்பார், "தண்மலரிட்டு முட்டாதிறைஞ்சேன்" எனவும் கூறினர். சிறந்த இந் நால்வகை நெறியினும், தலைப் படாமையால், இப்பிறப்புப் பயனற்ற தென்பார், "அவமே பிறந்த" எனவும், இவ் அவப்பிறப்பிற்குக் காரணம், கடத்தற்கரிய என் தீவினை என்பார், "அரு வினையேன்" எனவும் கூறினர். இதுகாறும் பிறப்பறுத்தற்குரிய நெறிகைவரப் பெற்றிலேன்; ஆதலால் மேலும் பிறப்புண்டாதல் ஒருதலை; இனிக் கிடைக்கும் பிறப்பாவது நின் திருவடியடைதற்குரிய நெறிநிற்றற்கே யன்றி வேறுபடாவாறு அருளல் வேண்டும் என்பார், "நின் திருவடிக்கு

> ஆம் பவமே அருளு" எனத் தேற்றப் பொருள் தோன்றக் கூறி வேண்டினர். ஈண்டு ஏகாரம் தேற்றப் பொருளது. கண்டாய் என்பது முன்னிலை அசை.

இவ்விளக்கப் பேருரையில் எடுத்தாளப் பெற்ற கருத்துகள் சைவத்திருமுறை நூற்கருத்துகளாகவும் சைவாகமக் கருத்துகளாகவும், சைவ சித்தாந்த நூற் கருத்துகளாகவும், அமைவதால் இக் கதிர்மணி விளக்கப்பேருரை முழுக்கமுழுக்க சைவ சிந்ததாந்தப் பேருரை எனக் கருதத்தக்கது அன்று எனலாம். திருச்சதகத்தின் ஒன்பதாம் பாடல் (பக்.42) உரையின் இறுதியில், "சைவ சிந்தாந்தத்தில்; "ஆண்டான் அடிமைத் திறம் சிறந்து விளங்குதலும், அடிகள் அம் முறையைத் தம் திருவாக்கால் அடிக்கடிப் பாராட்டிக் கூறுதலும் ஈண்டு நினைக்கத் தக்கன" எனப் பண்டிதமணி குறிப்பிடுகின்றார். இது போன்றவற்றால் முழுக்க முழுக்க இவ்வுரை சைவ சித்தாந்தப் பேருரை ஆகாது.

திருச்சதகக் கதிர்மணி விளக்கப்பேருரையில், பதிகங்களின் தலைப்புகள் தனித்தனி விளக்கங்களைப் பெற்றுள்ளன. மெய்யுணர்தல், அறிவுறுத்தல், சுட்டறுத்தல், ஆத்துமசுத்தி, கைம்மாறு கொடுத்தல், அநுபோகசுத்தி, காருணியத் திரங்கல், ஆனந்தத் தழுந்தல், ஆனந்த பரவசம், ஆனந்தாதீதம் எனும் பத்துப் பதிகத் தலைப்புகளும் பெயர்க் காரணத்துடன், தம்முள் தொடர்பு கொண்டிருத்தலும் ஆராயப்படுகின்றன. இப்பதிகத் தலைப்புகளில் ஒரு பகுதி பழந்தமிழ் மற்றும் நீதி நூல்களில் வரும் அதிகாரங்களின் தலைப்புகளாகவும் பொருள்களாகவும் இருத்தல் காண்க. சான்றாக, 'அறிவுறுத்தல்' எனும் பதிகத் தலைப்பில்,

> ஓர் இல்லறத்தான் தான்மேற்கொண்ட அறத்திற்குத் துணைநின்று உதவி புரிய வேண்டிய தன் மனைவி, உரிய உதவியைச் செய்யாமையோடு மாறாகவும் நடப்பாளாயின், அவளைக் குறிப்பால் அறிவுறுத்து முகமாகத் தக்கார் ஒருவரை முன்னிலைப்படுத்துத் தான் பெற வேண்டிய பேறுகளை இழந்திருப்பதற்கு இரங்கிக் கூறுதலும், அவ் விரக்கக் குறிப்புணர்ந்தும், அவள் நன்னிலைப் பட்டிலள் ஆயின், அவளை முன்னிலைப்படுத்து இடித்துக் கூறுதலும் உலகியலிற் கண்டனவாதலின், அம்முறையில் அடிகள் திருவருட் பேற்றிற்குத் துணை நின்று உதவி புரிய வேண்டிய தம் மனம், அவ் வுதவியைச் செய்யாமையோடு தடையாகவும் சேறலைக் குறித்து வருந்தி, அம் மனம் உணருமாறு ஆண்டவனை முன்னிலைப்படுத்தி, அப்பேற்றின்

> இன்றியமையாமையையும், அது பெறுதற்குரிய சாதனங்களைப் பெறாமை பற்றியும் இப்பதிகத்தின் முதல் எட்டுத் திருப்பாட்டுக்களில் இரங்கிக் கூறி, அக் குறிப்புணர்ந்தும் நன்னிலைப்படாத அம் மனத்தை, பின்னர் முன்னிலைப் படுத்தி ஒன்பது பத்தாம் திருப்பாட்டுக்களில் இடித்துரைத்துள்ளார்

என்கிறார். இத்தகு சிறப்பில் வெளிவந்த திருச்சதகப் பேருரை நூலிற்கு 1950 ஆம் ஆண்டில் சென்னையில் அமைந்திருந்த தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் சிறந்த நூலுக்கான பரிசு அளிக்கப்பட்டது.

## நீத்தல் விண்ணப்பப் பேருரை

திருவாசகத்தின் நீத்தல் விண்ணப்பத்திற்கான பண்டிதமணி யாரின் பேருரை 1950 ஆம் ஆண்டில் 'கதிர்மணி விளக்கம் பகுதி 2' என்று அவரால் வெளியிடப்பெற்றது. மாணிக்கவாசகர் உத்தரகோசமங்கையில் அருளிய ஐம்பது பாடல்களின் பொருளே 'நீத்தல் விண்ணப்பம்' ஆகும். இதன் வடமொழிப் பெயர் "பிரபஞ்ச வைராக்கியம்'. முழுவதும் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த இப்பகுதியின் பதிப்புரையில்,

> ..... புதிய புதிய நுண் பொருள்களைப் புலப்படுப்பதும் ஆகிய திருவாசகத் திருப்பாடல்களுக்கு உரைகண்டார் பலராவர். அவ்வுரைகளைக் கொண்டு நூலின் உண்மைப் பொருளைப் பெரும்பாலும் உள்ளவாறு அறிதற்கியலாமையால், "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்று அடிகள் ஆணையிட்டருளியபடி, அவனருளே கண்ணாகக் கொண்டும், அடிகள் திருவுருவத்தை இடையறாது நினைவுகூர்ந்தும், கூடியவரை பொருள்காண முயன்றேன்

என்கிறார் பண்டிதமணியார். அது ஓரளவிற்கு நிறைவேறியுள்ளது என்றும் கூறுகின்றார்.

நீத்தல் விண்ணப்பத்தின் பேருரை நூலின் முகவுரையில் (பக்.9-10) ஆர்.கே. சண்முகம் செட்டியார் அதைப் பின்வருமாறு மதிப்பிடுகின்றார்.

> இந்த அருமையான நூலிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களைச் சாமான்யத் தமிழன் ஒரு துணையில்லாமல் தெரிந்து கொள்ளுவது கடினம். பண்டிதமணி அவர்கள் அத்துணைவராய்த் தோன்றியிருக்கிறார். . . இறைவன் பெருமையைப் பொருள்

> தெரிந்து பாடவும்,கேட்கவும் வல்லவர்கள் தான் பேரின்பம் அடைவார்கள். . .நீத்தல் விண்ணப்பத்தின் பொருளை நன்றாய் அறிந்து எல்லோரும் பேரின்பம் அடையவேண்டுமென்று பண்டிதமணி அழகான இந்த உரையை நமக்குத் தந்துள்ளார். உரை எளிய நடையில் எழுதப் பட்டிருக்கின்றது. சொல்லின் பொருளையும், சொல் நயத்தையும் விளக்கியிருக்கின்றார். கருத்துரை பாட்டைத் தெளிவுபடுத்துகின்றது. பதவுரை சொல்லின் பொருளை எடுத்துக் காட்டுகின்றது. விளக்கவுரை சொல்லின் நயத்தையும், பொருளின் நுட்பத்தையும் விளக்கிக் காட்டுகின்றது.
>
> இதுதான் உரையாசிரியர்கள் கையாள வேண்டிய சரியான முறை. இம் முறையில் தமிழ் இலக்கிய நூல்களுக்கெல்லாம் உரைகள் வெளிவந்தால்தான் தமிழ் மறுமலர்ச்சியின் பயனைத் தமிழ் மக்களடையலாம்.

இவ்வுரை நூலுக்கு அணிந்துரை நல்கிய தெ.பொ.மீ. (பக்.12),

> திருவாசகத்தில் இலக்கியச் சுவை ததும்பும் பகுதி ஒன்று உண்டு என்றால் அது நீத்தல் விண்ணப்பமே ஆகும். தமிழ்ச்சுவை யறிந்த அறிஞர் இப்பகுதிக்கு எழுதிய உரை மிக மிக இனிக்கவே செய்கின்றது

என்கிறார். மேலும் அவர் (பக்.13),

> நாலாயிரப் பிரபந்தத்திற்கு இவ்வாறு பெரியோர் உரை எழுதவில்லையா? ஒவ்வொரு சொல்லாகச் சுவைத்து அதில் ஆழ்ந்து பாட்டின் அனுபவத்தில் குதித்துத் திளைக்க வழிகாட்டிய ஈட்டின் ஆசிரியரைத் தமிழுலகம் மறக்கப் போமோ? அத்தகைய முறையில் நம் பண்டிதமணியவர்களும் இன்று திருவாசகத்திற்குக் கதிருரை ஒன்று எழுதிவருவது தமிழின நல்ல காலமே ஆம்.
>
> . . . . சீவன் முத்தரது அனுபவம் மாற்ற மனங் கடந்தது எனக் கண்டோம். பண்டிதமணியவர்கள் மணிவாசகர் அனுபவம் சைவசித்தாந்த அனுபவம் என விளக்குகின்றார். பிறர் பிறவகையாக விளக்குதல் கூடும். விளக்குதலும் வேண்டும். அதுவன்றோ அதன் பெருமை.

ஐம்பது பாக்களாலான நீத்தல் விண்ணப்பம் என்ற பகுதியில் அடங்கும் பாடல்களை மாணிக்கவாசகர் இறைவன்பால் தம்மைக்

கைவிடலாகாது என விண்ணப்பித்துக் கொள்வதற்காகப் பாடினார் என்பர். இது உத்தரகோசமங்கை எனும் திருத்தலத்தில் நடந்த வரலாறு என்கின்றனர். 'உத்தரகோச மங்கைக்கரசே' எனப் பாடல்கள் பலவற்றில் வருதலே இதற்குச் சான்றாம். இதற்குப் பிரபஞ்ச வைராக்கியம் எனும் வடமொழிப் பெயரும் உண்டு. 'பற்றுறுதி' எனும் பொருள் பெற்றது இப்பகுதி. பண்டிதமணியார் இப்பதிகவரலாறு பற்றிக் கூறும்போது, (பக்.3)

> **ஆண்டவன் உபதேசித்தவுடனே அடிகள் வீட்டின்பத்தில் தலைப்பட்டிருப்பராயின், அவர்கள் அநுபவித்த சிவாநுபவ உண்மைகளைத் தன்னுள் அடக்கித் திகழும் திருவாசகத் தேனை இவ்வுலகம் எங்ஙனம் பருகி மாறிலா மகிழ்ச்சியின் மலரக்கூடும்?**

என்கிறார். நீத்தல் விண்ணப்பத்தின் ஒவ்வொரு பாடல் உரையின் இறுதியிலும் பிரபஞ்ச வைராக்கியம் எனும் பொருள் புலப்படுத்தப் பட்டுள்ளது. திருச்சதகத்திலும், நீத்தல் விண்ணபத்திலும் வரும் புராணக் கதைகளான தக்கன் வேள்வி, தாருக முனிவர் வேள்வி அடிமுடி காணாது அரியும் அயனும் வந்தது, நஞ்சுண்டகதை, திரிபுரசங்காரக் கதை, கயாசுரனைக் கொன்ற கதை, சத்தியும் சிவனுமாக விளங்கிய கதை போன்றவை பண்டிதமணியாரால் நன்கு விளக்கப்பெற்றுள்ளன. இவ் விளக்கப் பேருரையில் பழந்தமிழ் நூல்களான **தொல்காப்பியம், அகநானூறு, திருக்குறள், பத்துப்பாட்டு, திருக்கோவையார், சிலப்பதிகாரம், தேவாரப் பாக்கள், பெரியபுராணம்,** ஏனைய திருமுறை நூல்கள், **கந்தபுராணம்** போன்றவை மிகுதியாக மேற்கோள் காட்டப் பெற்றுள்ளன. குறைந்த அளவில் சைவசித்தாந்த சாத்திரங்கள் மேற்கோள் நூல்களாக அமைகின்றன. இப்பிரபஞ்சத்தில் இருப்பனவற்றுள் மகளிர் தொடர்பான இன்ப நுகர்வுக் கருத்துகள் இடம்பெறும் பாடல்களில் பழந்தமிழ் நூல்கள் மேற்கோள்களாக எடுத்தாளப் பட்டுள்ளன. சான்றாக, 'உழைதரு நோக்கியர்' எனவரும் தொடருக்கு, "இருநோக்கு இவளுண்கணுள்ளது ஒரு நோக்கு நோய் நோக்கு, ஒன்று அந்நோய்க்கு மருந்து", எனும் 1091 ஆம் குறள் எடுத்தாளப்பட்டும், அதற்கொத்த சீவக சிந்தாமணி ஆசிரியர் கருத்தும் கூறப்படுகின்றன. இறைவன் காட்சி, இவ்வுலக நிலையா வாழ்க்கை, மங்கையர் தரும் இன்ப நுகர்வு வெறுப்பு போன்ற கருத்துகள் நிறைந்த இப்பகுதி தெவிட்டக்கூடியதாம்.

### திருவெம்பாவைப் பேருரை

1953 ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற இப் பேருரை விளக்க நூற்பாடல்கள் திருவண்ணாமலையில், மாணிக்கவாசகரால்

பாடப்பெற்றவை என்பது வரலாறு. இதன் வாழ்த்துரைப் பகுதியில் அருணாசலதேசிகர்,

> திருவாசகத்துள் திருவெம்பாவை இன்பப்பெருக்கை இனிதூட்டும் பாடல்களைக் கொண்ட பகுதி. பாச இருள் நீக்கி, நீங்காத பேரருளைத் தந்து தலையளிசெய்யும் சிவனது பேரருளை வியந்த பகுதி. "எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க" என்ற உறுதிமொழியைக் கொள்க என்று உயிர்களுக்கு உணர்த்தும் திருப்பாடல் திருவெம்பாவையில் அமைந்துள்ளது

என்கிறார் (பக்.vii). சக்தியின் பெருமை பேசுவதாகக் கூறப்படும் இப்பகுதிகள் இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளிப் பக்குவமுள்ள உயிர்களுக்குச் செய்யும் தீக்கை முறைகளையும் குறிப்பன எனச் சிலரால் கருதப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் தம் வாழ்வில் ஒரு பகுதியாகக் கடைப்பிடித்து ஒழுகக் கூடிய பாவை நோன்புப் பாடல்களாக இவை அமைந்துள்ளன எனலாம்.

மழைவளம் குறித்தும், சிறந்த கணவனை அடைதல் குறித்தும் கன்னிப் பெண்கள் சக்தியை வேண்டிப் பாடிய பாடல்கள் இவை. ஆயினும் சைவ சித்தாந்த விளக்கமாக இப்பகுதிப் பாக்களுக்குச் 'சத்தியை வியந்தது' எனும் தலைப்பு அமைந்துள்ளது. பாவை நோன்புக்குரிய ஐந்து முதல் பன்னீராண்டு அகவை உடைய எழு பருவத்து மகளிரே இவர்கள். இப்பருவ மகளிரில் மூத்த பருவமகளிர் தொடங்கி இளையபருவ மகளிர் வரை நீராடத் தோழியரால் எழுப்பப்படுவதாகவும் இன்னும் பலவாறாகவும் பலர் உரை கண்டிருக்கின்றனர். பருவத் தொடர்பு, பாடல்கள் ஒன்றற் கொன்றின் தொடர்பு, பொருட் தொடர்பு போன்ற பல சிறப்புகள் மிளிர்ந்து பண்டிதமணியாரின் பேருரை அமைந்துள்ளது.

'எம்பாவாய்' எனும் மகுடம் பெற்ற இருபது பாடல்கள் இப்பகுதியில் அமைந்துள்ளன. மார்கழித் திங்களில் திருவண்ணாமலையில் பாடப்பெற்ற இப்பாடல்களில்,

> மணஞ் செயப்படாத பெண்கள் பலர் திருவாதிரைக்கு முன் பத்து நாட்டொடங்கி அதிகாலையாகிய வைகறைப் பொழுதில் துயிலுணர்ந்தெழுந்து, ஒருத்தியும் பலருமாக இல்லங்கடோறும் சென்று தம்தோழிகளையும் துயிலுணர்த்தி யெழுப்பியதையும், அவ்வெல்லோரும் ஒருங்கு சேர்ந்து சிவபெருமான் திருப்புகழை வாயாரப் பாடிக்கொண்டு நீர்நிலைக்குச் சென்று நீராடியதையும் உலகன்னையாகிய பார்வதி தேவியின் திருவுருவைத் தூய ஈர நுண்மணலாற் சமைத்து வழிபட்டுப் பொதுவுஞ் சிறப்புமாகிய

> பயன் வேண்டியதையும் நேரிற்கண்டு, அப்பெண்கள் புகன்றதாகப் பாடியருளியது இத்திருவெம்பாவை. . .

எனப் பண்டிதமணியார் கூறுகின்றார். இதற்குச் சான்றாக, திருவாதவூரடிகள் புராணத்தில், திருவம்பலச் சருக்கத்தின் 40ஆம் செய்யுள் அமைகின்றது. அதுவருமாறு:

> மாதர்கொண் மாத ரெல்லாம்
> மார்கழித் திங்கள் தன்னில்
> ஆதிரை முன்னீ ரைந்தே
> யாகிய தினங்க ளெல்லாம்
> மேதகு மனைக டோறும்
> அழைத்திருள் விடிவ தான
> போதிவர் தம்மிற் கூடிப்
> புனற்றடம் ஆடல் செய்வார்

இச் செய்யுளால் திருவெம்பாவையர் ஆடலும் பாடலும் செய்வர் எனத் தெரிகிறது. இதற்குத் 'திருவெம்பாவை' எனப் பெயர் என்றும் அடுத்த செய்யுள் கூறுகின்றது. மகளிரின் வாழ்வியலின் ஓர் அங்கமான இவ் ஆடலும் பாடலும் மாணிக்கவாசகர் வாக்கால் அழியா இடம் பெற்றுள்ளன. இவ்வாறு திருவெம்பாவைப் பாடல்களின் வரலாறும் வாழ்வியலும் பண்டிதமணியால் விளக்கப் பெறுகின்றன. கௌரி நோன்பாகத் திருப்பாவைப் பாடல்களும் சத்தி நோன்பாகத் திருவெம்பாவைப் பாடல்களும் அமைகின்றன. இதைப் பண்டிதமணி,

> பண்டைக் காலத்துத் தமிழ் நாட்டில் கன்னிப் பெண்கள் தைந்நீராடலைப் பற்றிக் கலித்தொகை ஐங்குறுநூறு நற்றிணை பரிபாடல் முதலிய சங்கச் செய்யுட்களில் விளக்கமாகக் காணலாம். மார்கழித் திங்கள் திருவாதிரையில் தொடங்கும் நீராடல் பூர்ணிமாந்த முறைப்படி தைத்திங்களிலும் தொடர்ந்து நடைபெறுமாதலின், மார்கழி நீராடலும் தைந் நீராடலும் ஒன்றென்ப. ஆயினும், திருவாதவூரடிகள் புராணத்துக் கூறப்பட்டபடி மார்கழி நீராடல் திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன் தொடங்கித் திருவாதிரையில் முடிவு பெறுமென்பதும், தைந் நீராடல் மார்கழித் திருவாதிரையில் தொடங்கி நடைபெறு மென்பதும் இங்கே கண்ட வேறுபாடாகும். நூற்பிரமாண முள்ளனவும் இல்லனவுமாய் மக்கள் வழக்க வொழுக்கங்களிற் காணப்படும் இன்னோரன்ன நிகழ்ச்சிகள், இங்ஙனம் காலாந் தரத்திற் சிறிது சிறிது

> வேறுபாடெய்தல் இயல்பே. இதற்கு மற்றொரு சான்றும் ஈண்டுக் கருதத் தக்கது. பிங்கலந்தையில் ஐந்து முதல் ஒன்பது ஆண்டு வரையுள்ள சிறு கன்னிப் பெண்களே பனிநீர் தோய்தற்கும் பாவையாடற்கும் உரியர் என்று கூறப்பட்டுள்ளது. சங்க காலத்துச் சான்றோர் பாடல்களிலும் இவ்விதி தழுவப் பட்டிருத்தல் அறியலாம்.

எனத் திருவெம்பாவை வரலாறு எனும் பகுதியில் பண்டிதமணியார் (பக்.4-5) ஆய்வு செய்துள்ளார். இவ்வாறு பொது நன்மைக்காகவும் சிறப்பு நன்மைக்காகவும் பெண்டிர் ஆடிப்பாடித் துதி செய்த இப்பாடல்களில் உள்ளுறைப் பொருளாகச் சத்தியை வியந்தது எனும் பொருளில் குறிக்கப்பட்டுள்ளது. அதைப் பற்றி அவர் கூறுவதாவது:

> ஆன்ம நாயகனாகிய இறைவனை யடைதற்குரிய பக்குவ முதிர்ந்த உயிர்களையே கன்னிப் பெண்களாகவும், ஆணவ மலவிருளிற் பிணிப்புண்டிருத்தலையே உறங்கிக் கிடத்தலாகவும், மலவாற்றலொழியப்பெறும் நிலையே துயில் நீத்தெழும் நிலையாகவும், மலபரிபாகமுடையவுயிர்கள் அஃதில்லாத வுயிர்களை யுணர்த்தி அன்பு நெறிப்படுத்து இறையருளிற் றோய்வித்தற்கு அழைத்தலையே நீராட அழைத்ததாகவும் அமைத்துக் கொண்டு இஃது அருளிச் செய்யப்பட்டதென்க.

திருச்சதகம் எனும் முற்பகுதிப் பாடல்களில் பருவப் பெண்களின் மயல்களிலிருந்து மயக்கறுத்து விடுபட வேண்டும் என்று பாடிய மாணிக்கவாசகர் இத் திருவெம்பாவைப் பாடல்களில் அப்பெண்களையே பாத்திரங்களாகக் கொண்டுள்ளார். இவ்வாறாகப் பாடல்கள் முன்னுக்குப்பின்னாகத் தொகுக்கப் பட்டுள்ளதை அறிய முடிகின்றது. பாண்டிய நாட்டில், தம் இளமைக் காலத்தில் கண்டறிந்த மகளிரின் இவ் வாழ்வியற் பாக்களை மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் அவ்வாறான மகளிரின் நோன்பைக் கண்ட உடனேயே ஓர்ந்து பாடியுள்ளார். இதைப்போன்றே மகளிரின் வாழ்வியலோடு ஒன்றியுள்ள அம்மானை, ஊசல், சுண்ணம், சுழங்கு போன்ற ஆடல் பாடல்களையும் தொழிற்பாடல்களையும் அவர் இறைவழிபாட்டுடன் இணைத்துப் பாடல்களாக்கிப் பக்தியை வளர்த்துள்ளதாகவே தெரிகின்றது. அவ்வாறான மகளிர் வாழ்வியற் பாக்களில் சைவ சித்தாந்தக் கருத்துகளைப் புகுத்தி, அதைத் திக்குமுக்காடச் செய்திட இவருக்குத் தூண்டுதல் இருந்ததாகவே தெரிகிறது. இதற்கு முந்திய இரு உரை நூல்களிலும் சைவசிந்தாந்த சாத்திர நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டியிருந்ததை முன்பே கண்டுள்ளோம். ஆனால், குறிப்பிட்டுக் கூறும் அளவில் அவற்றில்

இக் கருத்துகளை அவர் திணிக்கவில்லை. திருவெம்பாவையிலும், அதைத் தொடர்ந்து எழுதத் தொடங்கிய திருவம்மானையிலும், அதன் பின்னர் அவர் இருந்திருந்தால் இப்படியே திணிப்பைச் செய்திருப்பாரோ என எண்ணத் தோன்றுகிறது.

மிக அருமையாகத் திட்டமிடப்பெற்று, அதற்காகத் தமிழ் மற்றும் வடமொழிப் பாண்டித்தியம் பெற்று, தமிழ்ப் பழமைப் பாரம்பரியத்து நூல்கருத்துகளையும், தமிழ்க் காப்பிய, புராண நூல்கருத்துகளையும் சிற்சில இடங்களில் சைவ சிந்தாந்த சாத்திரக் கருத்துகளையும் எடுத்தாண்டுச் சிறந்த உரை நூல்களைப் படைத்து வந்த பண்டிதமணியார், தமிழக மகளிர், குறிப்பாகச் சைவ சமயப் பற்றுள்ளம் கொண்ட சிறுமி முதல் பருவமடைந்த நங்கையர் பழகும் ஆடல் பாடல்களை மையமாக வைத்து அவர்தம் கலைகளையும், தமிழையும், சைவத்தையும் ஒருங்கிணைத்துப் பாடிப் பக்தியையும் தமிழையும் வளர்த்த மாணிக்கவாசகரின் பாடல்களில் சைவ சித்தாந்தத்தைத் திணித்ததன் காரணமாக அவ்வுரை சில சித்தாந்திகளுக்கு வேண்டுமானால் சிறந்த உரையாக இருக்கலாம்; ஆனால் அது உலகியலிலிருந்து விலகிவிட்டதாகவே தெரிகிறது.

******

# மொழிபெயர்ப்புப் பணி

*இரா. மாலதி*

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்'

என்ற பாரதியின் அவாவிற்குச் செயல் வடிவம் காட்டியவர் பண்டிதமணி. மொழிபெயர்ப்பால் தமிழுக்கு அணிசேர்த்த அவரது பேராற்றலைத் தமிழகம் நன்குணரும். அவரின் வடமொழிப் புலமையைக் கண்டு பல வடநூல் பெரும் புலவர்களும், வடமொழிக் கழகத்தாரும் மதித்துப் போற்றினர். அவர் தம் வடமொழிப் புலமையைத் தமிழினை வளப்படுத்தவே பயன்படுத்தினார்.

## இருமொழிப் புலமை

"செந்தமிழும் ஆரியமும் முற்றவுணர் நுண்மதியான்" என்று அரசஞ்சண்முகனரால் பாராட்டப்பட்ட ஒரு தமிழ்ப் பெரும் புலவர் தமிழ்நாட்டிலே பண்டிதமணி ஒருவர்தான்.[1] தரமான சிறந்த நாடகங்களிலும், காப்பியங்களிலும் அதிக ஈடுபாடு கொண்ட பண்டிதமணி வடமொழிப் பயிற்சியின் இன்றியமையாமையை உணர்ந்து முழுமையான பயிற்சியை மேற்கொண்டார். அதன் பயனாகப் பண்டிதமணி தம்சொற்பொழிவுகளில் காளிதாசர் போன்ற வடமொழிப் புலவர்களின் செய்யுள் நலங்களையெல்லாம் தமிழ்ப் பாடல்களுடன் வைத்துச் சீர்தூக்கிக் கேட்டார் வியக்கும் படி செய்து வந்தார். இரு மொழியின் பெருமையையும் ஆழத்தையும் கேட்டு மகிழ்வதற்காக ஆங்கிலத்திலும் வடமொழியிலும் சிறந்து விளங்கிய புலவர்களும் இவரது பொழிவைக் கேட்க மிக விரும்பி வருவர். இம் மொழிப்புலமையே அவரை மொழிபெயர்ப்பாளர் என்ற தகுதியை அடையச் செய்தது. ஒரு மொழிபெயர்ப்பாளர் தாய் மொழிப்பற்று மிக்கவராகவும் பிறமொழிகளை விரும்பும் பண்பு உடையவராகவும், வேற்றுமொழிகளை ஆர்வத்துடன் முறையாகக் கற்கும் திறம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வனைத்துப் பண்புகளும் அவரிடம் அமைந்திருந்ததால் அவருடைய மொழிபெயர்ப்பு நூல்கள், பல அறிஞர்களும் போற்றும் வகையில் அமைந்துள்ளன.

வ.வே.சு.ஐயர், வ.உ.சிதம்பரம்பிள்ளை, விபுலானந்த அடிகள், மறைமலைஅடிகள், கா. சுப்பிரமணியம் பிள்ளை, சோமசுந்தர பாரதியார் போன்ற ஆங்கிலத்தில் பெரும் புலமை பெற்ற

அறிஞர்களைப் போன்ற புகழும், அவ்வறிஞர்கள் மதிக்கத்தக்க அறிவும் பெற்றிருந்த பெருமை ஆங்கில மொழியறிவு பெறாதிருந்தும் பண்டிதமணிக்கு உண்டு. உ.வே. சாமிநாதையர் பண்டிதமணியைப் பற்றி

> "வடமொழி வாணருந் தென்மொழி வாணரு
> ஆங்கிலப் பயிற்சியி லோங்கிய நிபுணரும்
> வேட்டு பலமுறை கேட்டுச் சிரகர
> கம்பிதஞ் செய்திடக் கவின்பிர சங்கம்
> புரிதரு திறனினன்"[2]

எனப் புகழ்ந்து பேசியுள்ளார். இவருடைய புலமை காரணமாக இயற்பெயரையும் கடந்து பண்டிதமணி என்ற பட்டமே அனைவர் மனத்தையும் நிறைத்தது. "இப்பெரும் புலவன் மேற்கொண்ட மொழிபெயர்ப்புக் கலையின் வடிவத்தைப் பண்டிதமணியம் எனலாம் என்று வ.சுப. மாணிக்கம் கூறியுள்ளார்" (சுக்கிர நீதி ப. iv).

## பண்டிதமணிக்குக் கிடைத்த ஊக்கங்கள்

வடமொழியினின்றுத் தமிழ்மொழிக்குச் சில அரிய நூல்களை மொழிபெயர்ப்பது இன்றியமையாதது என்ற கருத்து நிலவிய நேரத்தில் பலரது தூண்டுதல் பண்டிதமணிக்குக் கிடைத்தது. அவற்றுள் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபைக்கு முதலிடம் உண்டு. "இம்மொழிபெயர்ப்புத் துறையில் யான் தலைப்பட்டுப் பணி செய்தற்கு முக்கிய காரணம் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையாரின் தூண்டுதலேயாகும்" (சு.நீ. ப.9) எனப் பண்டிதமணி கூறியுள்ளார். "என்னை இப் புகழ்நிலைக்கு உருவாக்கியது சபையே" என்பது பண்டிதமணியின் நன்றிச் சொல்லாக (சு.நீ. ப.vii) அமைந்துள்ளது. இச்சபை பண்டிதமணியின் மொழிபெயர்ப்பிற்கு உதவி செய்யும் பொருட்டு வடமொழியிற் சிறந்த புலவர்களைப் பணிக்கு அமர்த்தியது. பண்டிதமணிபால் உண்மையான அன்பு கொண்ட திரு. சாமிநாதன் செட்டியார் பண்டிதமணியின் தமிழ்த்தொண்டு கண்டு இம்மொழிபெயர்ப்புத் துறையில் மேன்மேலும் ஊக்கியின்புறுத்தினார். வ.பழ.சா. அண்ணாமலைச் செட்டியார் பண்டிதமணியின் செயலை மனமுவந்துப் பாராட்டிச் சிறிதும் காலம் தாழ்த்தாமல் வேண்டிய உதவிகளைச் செய்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் வடமொழியில் உள்ள சில அரிய நூல்களைத் தமிழ்நாட்டவரும் படித்துப் பயன் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்மொழி வாயிலாக மொழிபெயர்த்து வெளியிடத் துணிந்தனர். அதற்குப் பண்டிதமணியின் பணியை நாடினர். பண்டிதமணியும் அப்பணியை ஆற்றத் துணிந்தார். இவருக்கு மொழிபெயர்ப்புப்பணியில்

உதவியவர்களில் குணத்திலும், படிப்பிலும், உழைப்பிலும், குன்றென உயர்ந்த க. வெள்ளைவாரணமும் ஒருவர் ஆவார். இங்ஙனம் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பண்டிதமணிக்கு ஊக்கம் கொடுத்து அவரது மொழிபெயர்ப்பிற்குத் தூண்டுகோலாகப் பலர் அமைந்தனர்.

## ஆழ்ந்த தமிழ்ப்பற்று

மொழிபெயர்ப்பிற்குரிய தகுதிகள், வாய்ப்புகள் பல பண்டிதமணியிடம் இருந்த போதும் தமிழ் மொழியில் இந்நூல் இல்லை என்ற சொல் இல்லாதபடி செய்வதையே முக்கியமாகக் கொண்டிருந்தார். அவருடைய தமிழ்ப்பற்றுக் கொண்ட மனமே அவருக்கு முக்கியத் தூண்டுகோலாக அமைந்தமையைக் காணமுடிகிறது.

"வேற்று நாட்டு மொழிகளில் உள்ள இலக்கியச் சிறப்பு எங்ஙனம் மதிக்கப்பட்டதென்பதும் நம்நாட்டு மொழியில் உள்ள இலக்கியங்கள் எங்ஙனம் போற்றப்பட வேண்டுமென்பதும் பிறமொழிப் பயிற்சியாலேயே இயலும்"[3] என்று, ஒரு குறுகிய உள்வட்டத்திற்குள்ளாகவே தமிழர்கள் தங்களைத் தாங்களே போற்றிக் கொண்டிராமல் வெளிவந்து தமிழை மேலும் உயர்த்தமுற்பட வேண்டும் என்பதைப் பிறமொழிப் பயிற்சி கொண்டு உணர்த்த முற்படுகிறார் பண்டிதமணி.

பண்டிதமணியின் இருமொழிப்புலமை மொழிபெயர்ப்பிற்கு உறுதியாக அமைந்திருப்பினும் பலரின் தூண்டுதல்களும், உதவிகளும், ஊக்கங்களும் அவருக்குக் கொழுக்கொம்பாக இருந்திருப்பினும் அவரது வற்றாத தமிழ்ப்பற்றே அனைத்திற்கும் வேராக அமைந்திருந்தது என்பதை உணர முடிகிறது. பிறமொழிப் பயிற்சியே தமிழுக்காக, என்றெண்ணும் போது பிற காரணங்கள் பின் தங்கியே அமைந்து விடுகின்றன. இத்தகைய தமிழ்ப்பற்றின் விளைவால் தோன்றிய மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழுக்குப் பெருமை சேர்ப்பவையாய்த் திகழ்கின்றன. இருமொழிப் புலமையின் விளைவாய்த் தோன்றிய நூல்களானவை பின்வருமாறு:

1. *சுக்கிர நீதி (1926)*
2. *கௌடலீயம் (1955)*
3. *மண்ணியல் சிறுதேர் (1933)*
4. *சுலோசனை (1922)*
5. *உதயண சரிதம் (1924)*
6. *மாலதீ மாதவம் (கைப்படி)*
7. *பிரதாபருத்திரீயம் (கைப்படி)*

ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், பண்டிதமணி உருவப்படத் திறப்பு விழாவில் ஆற்றிய தலைமை யுரையில் "பிரதாபருத்திரீயம், மாலதீ மாதவம், சாஹித்திய தருப்பணம் முதலிய அரிய நூல்களும் பண்டிதமணியவர்கள் முயற்சியால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவை விரைவில் அச்சிடப்பட்டுப் பலருக்கும் பயன் அளிக்குமென்று எதிர்பார்க்கலாம்."[4] என்ற செய்தி பெறப்பட்டுள்ளது. "சாஹித்திய தருப்பணம்" என்ற மொழிபெயர்ப்பு நூல் பற்றிய குறிப்பு இக்கட்டுரைக்குக் கையாளப்பட்ட பார்வை நூல்களில் எந்த ஒரு நூலிலும் குறிப்பிடப்படாதது குறிப்பிடத்தக்கதாகும். (ஆகவே சாஹித்திய தருப்பணம் உறுதிசெய்து கொள்ளப் படவேண்டியதொன்றாகும்).

## மொழிபெயர்ப்பு – ஒரு விளக்கம்

'ஒரு மொழியில் இருக்கின்ற செய்திகளை அல்லது கருத்துகளை வேறொரு மொழியில் பொருள் வேறுபாடு ஏற்படாதவாறு மூலத்திலுள்ள சுவையும், தன்மையும், சற்றளவும் குறையாமல் மூலத்தில் உள்ளது போன்று அமைப்பது மொழிபெயர்ப்பு[5]. அவ்வாறு பெயர்க்கும் தகுதியுடையோரை மொழிபெயர்ப்பாளர் என்பர். அவ்வகையில் பண்டிதமணி தென்மொழியை ஒத்த வடமொழிப் புலமை கொண்டிருந்த தன்மையே ஒப்பற்ற தகுதியாக அமைந்தது.

## மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றிய விளக்கம்

ஒரு நூலைப் படைப்பதை விட மொழிபெயர்ப்பது கடினமான செயல். மொழிபெயர்ப்பின் நோக்கமே புதிதாக ஒரு கருத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அதைப் புரிந்துகொண்டு பயனடையச் செய்ய வேண்டும் என்பதே. அவ்வாறு பயன் கருதி மேற்கொள்ளப்படும் பணியில் தவறு நிகழாமல் காக்க வேண்டியது மொழிபெயர்ப்பாளர் கடமையாகும். மூலநூலில் உள்ள கற்பனை, பொருள் சிதையாமல் மூல நூலாசிரியரின் எண்ணங்கள் மாறாமல் அளிப்பது மிகக் கடினமான செயலாகும். "மொழி பெயர்ப்பே ஒரு முறையில் கடினமான இலக்கிய வேலை. அது முதல் நூல் எழுதுவதைக் காட்டிலும் அதிகமான தொல்லை கொடுப்பது. சீமை ஓட்டைப் பிரித்து விட்டு கீற்று வைக்கும் வேலை போன்றது. ஒரு கட்டுக் கோப்பை ஏற்றுவதில் வெற்றி கொள்ள முடியாது. அடிக்கு அடி நிர்ப்பந்தம்; எல்லைக் கோட்டைத் தாண்டினால் மொழிபெயர்ப்பாவதில்லை. வியாக்கியானம் தூண்டாமல் வார்த்தைக்கு வார்த்தை போட்டால் கருத்து விளங்குவதில்லை. நடையும் சரளமாவதில்லை என்பது கு.ப. ராவின் கருத்து."[6] இவர்

கருத்தில் உள்ள கடினங்களைப் பண்டிதமணி தம் சீரிய பணியின் வாயிலாக வென்று காட்டிப் பெருமை அடைந்தார்.

'ஔசநசம்' எனும் வெள்ளி அல்லது சுக்கிரனால் இயற்றப்பட்ட நீதி நூலே சுக்கிரநீதியாகப் பண்டிதமணியால் பெயர்க்கப்பட்டது. "பொருணூல் தனியே தமிழில் இல்லாத இக்குறையை நிரப்ப எண்ணிய பொழுது வடமொழிக்கண்ணுள்ள பொருணூல்கள் நினைவிற் றோன்றின" (சு.நீ. ப. 2) என்று தமிழின் வளர்ச்சியினைப் பற்றி இடையறாது சிந்தித்துக் கொண்டே இருந்து அதற்கு வழியும் கண்ட ஆசிரியரின் பண்பு போற்றுதற்குரியதாகும். இந்நூல் ஐம்பத்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு மறுபதிப்புப் பெறும் பேறு கொடைச்செல்வர் சிவலிங்கனாரின் வழி கிடைத்தது. திருக்குறள் பற்றிய விளக்கங்களையும், பரிமேலழகர் உரையையும், பண்டைத் தமிழக அரசியலையும் அறிய முயல்வார்க்கு வழித்துணை நூல் சுக்கிரநீதியாகும். ஏனெனில் திருக்குறள் முதலிய நீதி நூல்களில் பொருட்பகுதி கூறப்பட்டிருப்பினும் அந்நூல்கள் பொருளுக்கு முக்கியத்துவம் அளித்துச் சிறப்பாக எடுத்துக்கூறும் தனிநூலாக அமைக்கப்படவில்லை. இக்குறையைப் போக்கவே பண்டிதமணி மேற்கொண்ட முயற்சியை அவரே கூறியுள்ளமை மேலே காட்டப்பட்டுள்ளது.

ஔசநசம் விரிந்து பரந்த நூலாதலின் அதன் சுருக்கமாகத் தொகுக்கப்பட்டது சுக்கிரநீதியாகும். கருத்து வகையில் 'ஔசநசத்தின்' சாரமாக இஃது அமைந்துள்ளது. ஆகவே இதற்குச் சுக்கிரநீதிசாரம் என்ற பெயரும் கூறப்படுகிறது. திருக்குறள் போன்ற தமிழ் நூல்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சுருக்கமாகக் கூறப் பெற்றுள்ள நீதிகளை, உண்மைகளைச் சுக்கிரநீதி பல மேற்கோள்களுடன் விரிவாகத் தெரிவிக்கிறது. கிரேக்க நாட்டில் பிளேட்டோ எனும் அறிஞர் எழுதிய அரசியல் சரித்திர நூல் பேரிலக்கியமாகக் கருதப்படுகிறது. அதனுடன் ஒத்த சிறப்புடையது இந்நூலாகும்.

சுக்கிரநீதி பெரும்பாலும் அரசியலைப் பற்றியும் ஓரளவு வருணாச்சிரமத்தைப் பற்றியும் கூறுகிறது. சந்திரகுப்தன், அசோகன் ஆகிய பேரரசர்களின் காலத்தில் நிலவிய அரசியல் முறையின் பெருமையைத் தெரிவிக்கிறது. செம்மையான அரசு எவ்வாறு இயங்க வேண்டுமென்பதையும் நிலத்தின் அளவு வகைளும் கூறப்பட்டுள்ளன.

'கௌடலீயம் பொருணூல்' என்னும் இம்மொழிபெயர்ப்பு நூலுக்கு முதனூலாக அமைந்தது 'கௌடலீய அர்த்த சாஸ்திரம்' என்ற வடமொழி நூலாகும். இந்நூலின் மொழிபெயர்ப்புப் பணியினை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் விருப்பப்படி

பண்டிதமணி முன் வந்து ஏற்றார். வித்துவான் சோமசுந்தரம், எஸ். இராசகோபாலசாஸ்திரி எனுமிருவரையும் உதவியாளர்களாகக் கொண்டு 1942ஆம் ஆண்டுத் தொடங்கினார். 1944 ஜூலை மாதத்தில் எஸ். இராசகோபாலசாஸ்திரி விலகிக் கொண்டமையால் வடமொழி உதவியாளராக இராமானுஜாச்சாரி நியமிக்கப்பட்டார். சோமசுந்தரமும் சொந்த அலுவல் கருதி விலகினார். இந்நிலையில் இராமானுஜாச்சாரியின் துணையை மட்டும் கொண்டு கௌடலீயத்தின் முதற்பகுதியையும் இரண்டாம் பகுதியில் சில அத்தியாயங்களையும் பண்டிதமணி தெளிவும் இனிமையும் அமைந்த தமிழ் நடையில் மொழிபெயர்த்து உதவினார்.

வடநாட்டு மக்களிடையே தோன்றிய பொருள் நூல்களின் கருத்தை உணர்ந்து கொள்வதன் வழி அக்காலத்தில் வடநாட்டில் அமைந்த ஆட்சிமுறையினையும், சமூக அமைப்பினையும் ஒருவாறு உய்த்துணருவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற நோக்கத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் கொண்டமையால் இம்மொழிபெயர்ப்பிற்குப் பண்டிதமணியைத் தெரிவு செய்து அவரிடம் ஒப்படைத்தனர்.

ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன் வடமொழியில் ஆக்கப்பட்ட மிருச்சகடிகம் பண்டிதமணியால் 1933ஆம் ஆண்டு மண்ணியல் சிறுதேராக மொழிபெயர்க்கப்பட்டது. ‘மிருச்சகடிகம்’ என்பதில் ‘மிருத்’ மண்ணையும், ‘சகடிகா’ சிறுதேரையும் குறிப்பதாகும். இந்நாடகத்தில் இப்பொருள் பேசப்பட்டமையால் இந்நூல் மண்ணியல் சிறுதேர் என்று பெயர் பெற்றது. மூலநூலின் ஆசிரியன் சூத்திரகன் பற்றிய பாடல்கள் முன்னுரையில் காணப்படுகின்றன. மண்ணியல் சிறுதேர் ஆசிரியப்பாவில் அமைந்தது.

“ஸஹ்ருதயா’ எனும் வடமொழிப் பத்திரிகையில் ஸ்ரீகிருஷ்ணமாச்சாரியாரால் வசன வடிவில் எழுதப்பட்டு வெளிவந்த சரிதம் சுலோசனை ஆகும். இதன் முதற்பதிப்பு (1922) வெளிவந்த ஆண்டிலிருந்து பத்து வருடங்களுக்கு முன்னர்த் திங்கள் தோறும் பிரசுரிக்கப்பட்டு வந்ததாகும். உதயண சரிதமும் மேற்கூறிய பத்திரிகையில் ஸ்ரீ வே. அனந்தாச்சாரியரால் இனிமைமிக்க வடமொழி வசன வடிவில் எழுதப்பட்டு வெளிவந்ததாகும் என அறியப்படுகிறது. தமிழில் ‘சுலோசனை’யின் வெளிப்பாடே உதயண சரிதம் தோன்றுவதற்கும் காரணமாயிற்று. பாண்டவ குலத்திலே சகச்சிரானிகன் எனும் வேந்தனுக்கும் மிருகாவதிக்கும் தோன்றிய உதயணனது வரலாற்றை உரைப்பதே இந்நூலாகும். சுலோசனை இராமாயணக் காப்பியத்தையும், உதயணசரிதம் பெருங்கதையையும் தழுவி அமைந்த காப்பியக் கதைகளாக அமைந்துள்ளன.

## நூல்களின் அமைப்பு

### சுக்கிரநீதி

பொருள் நூல்களில் ஒன்றான சுக்கிரநீதி ஐந்து அத்தியாயங்களை உடையதாய் அமைந்துள்ளது. முதல் மூன்று அத்தியாயங்கள் அரசியற்காரிய நிரூபணம், இளவரசன் முதலியோர் இலக்கணங்களுங் காரியங்களும், அரசனுக்கும் குடிகளுக்கும் உரிய பொது நீதிகள் ஆகிய தலைப்புகளைக் கொண்டு விளங்குகின்றன. இம்மூன்று தலைப்புகளும் முறையே 35, 20, 12 என உட்தலைப்புகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. நான்காம் அத்தியாயம் ஏழு பிரகரணங்களாக முறையே நண்பர் முதலியோர் இலக்கணங்கள், கோச நிரூபணம், வித்தியாகலா நிரூபணம், உலக தரும நிரூபணம், இராச தருமம், அரணியல், படையியல் என்பனவாகப் பிரிக்கப் பட்டுள்ளன. ஐந்தாம் அத்தியாயம் அகிலநீதி என்ற தலைப்பில் காணப்படுகிறது.

### கௌடலீயம்

பொருள் நூல்களில் மற்றொன்றான 'கௌடலீயம்' அதிகரணம், பிரகரணம், அத்தியாயம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. 180 சூத்திரங்கள் உள்ளன. சூத்திரங்களைப் பாடிய (பாஷ்ய) முறையில் விரித்து விளக்கும் ஒவ்வொரு சூத்திரப் பொருளே ஒவ்வொரு பிரகரணப் பொருளாக அமைந்துள்ளது.

ஒரு பிரகரணத்தின் பகுதியையோ அல்லது பல பிரகரணங்களின் தொகுதியையோ விரிவாக விளக்கிக் கூறும் பகுதியை அத்தியாயம் என வழங்குகின்றார் முதனூலாசிரியர். நூற்றெண்பது சூத்திரங்களை விளக்கும் பிரகரணங்கள் நூற்றைம்பது அத்தியாயங்களாக அமைந்துள்ளன.

பிரகரணம் எனப்படும் ஒரு சூத்திரத்தின் பாடியமாகவுள்ள பொருள் பல கூறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பின், அப்பொருளை அக்கூறுபாடுகளுக்கேற்பப் பல அத்தியாயங்களால் விளக்கிக் கூறுகிறார். பல பிரகரணங்களில் கூறப்படும் பொருள்கள் தம்முள் நெருங்கிய தொடர்புடையவாயின் அப்பொருள்களை ஒரே அத்தியாயத்திலும் கூறிச் செல்லும் நிலையை அறிய முடிகிறது. இவ்வகையில் நூற்றெண்பது சூத்திரங்களுக்குப் பாடியமாக அமைந்துள்ள நூற்றைம்பது அத்தியாயங்களை உட்பிரிவாக உடைய பதினைந்து அதிகரணங்களாகிய பெரும் பிரிவினைக் கொண்டது இப்பொருணூல். முதனூலில் காணப்படும் முறை அப்படியே மொழிபெயர்ப்பு நூலிலும் காணப்படுகிறது.

ஒன்று முதல் ஐந்து வரையிலுள்ள அதிகரணங்கள் ஒரு பகுதியாகவும், ஆறு முதல் பதின்மூன்று வரையிலுள்ள எட்டு அதிகரணங்கள் ஒரு பகுதியாகவும், பதினான்காம் அதிகரணம் ஒரு தனிப் பகுதியாகவும், பதினைந்தாம் அதிகரணம் ஒரு தனிப் பகுதியாகவும் அமைந்துள்ளதன் வாயிலாக மொத்த 15 அதிகரணங்களும் நான்கு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் கூறு 'பயிற்சி பகர்தல்' என்ற தலைப்பில் 18 பிரகணங்களை விரித்துரைக்கும் 20 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதல் அத்தியாயம் அதிகரணப் பிரகரணங்கள் பெயர்க் குறிப்பாக அமைந்துள்ளதால் அதைச் சேர்த்து 21 அத்தியாயங்களுடன் முதலதிகரணம் முற்றுப் பெற்றுள்ளதைக் காணலாம்.

'தொழில் தலைவர் செயன் முறை' என்ற இரண்டாவது அதிகரணம் 38 பிரகரணங்களைக் கூறும் 36 அத்தியாயங்களால் அமைந்துள்ளது.

'அறநிலையாட்சி' என்ற அதிகரணம் மூன்றாவதாக அமைந்துள்ளது. 19 பிரகரணங்களைக் கொண்ட 20 அத்தியாயங்களால் இவ்வதிகரணம் அமைந்துள்ளது. இம்மூன்று அதிகரணங்கள் பண்டிதமணியால் மொழிபெயர்க்கப்பட்டவை. மேற்கண்டவாறு 'கௌடலீயத்தின்' அமைப்பைக் காண முடிகிறது.

### மண்ணியல் சிறுதேர்

'மண்ணியல் சிறுதேர்' பாட்டிடை வைத்த குறிப்பு வழித்தாய உரைநடையாகும். (தொல்.பொருள். சூ. 486) இதன் மூல நூல் வடமொழி நாடக வகையுள் ஒன்றான பிரகரண முறையில் செய்யப்பட்டதாகும். 382 சுலோகங்களைத் தன்னகத்தே கொண்டு 10 அங்கங்களைக் கொண்டதாகும். பண்டிதமணியால் 382 சுலோகங்கள் 371 செய்யுட்களாகப் பெயர்த்தியற்றப்பட்டன. இந்நூலின் முதல் அங்கத்தில் முன்னுரையும், அணிகலன் அடைக்கலம் என்ற தலைப்பும் இடம் பெற்றுள்ளன. இரண்டிலிருந்து பத்து வரை உள்ள அங்கங்கள் முறையே 'சூதர்நிலை', 'கன்னமிடல்', 'சருவிலகன் பேறு', 'புயன்மறைப்பு', 'வண்டிமாற்றம்', 'ஆரியகனைக்கோடல்', 'வசந்தசேனை துன்பமாலை', 'வழக்காராய்ச்சி', 'தொகுத்துரைத்தல்' என்றவாறு அமைந்துள்ளமையைக் காணலாம். தலைசிறந்த நாடகங்களில் ஒன்று என்ற சிறப்பைப் பெற்ற இந்நூலைத் தமிழில் பெயர்த்துள்ள பெருமை போற்றற்பாலது.

### கதைகள்

வசன உரைநடை நூல்களான சுலோசனையும் உதயண சரிதமும் கதை கூறும் அமைப்பில் அமைந்துள்ளமையால் ஒரே

வகைக்குள் சேர்க்கப்பட்டு இக்கட்டுரையில் பேசப்படுகின்றன. ஆரம்பம் முதல் முடிவுவரை உரைநடையாக அமைந்துள்ள சுலோசனை கதையை முடிவில் கதைக்கு ஏற்ற வெண்பாவோடு முடித்துள்ளார். உதயண சரிதம் 12 வகுப்புகளை உடைத்தாய்க் காணப்படுகிறது. முதல் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை முறையே உதயணன் பிறப்பு, உதயணன் அரசியற்றிருவெய்தல், வாசவதத்தை பிறப்பு, சிறைப்படல், சிறைவீடல், வாசவதத்தை திருமணம், மந்திராலோசனை, பதுமாவதி பரிணயம், மகதராசன் சந்தி, அரியணையடைதல், திக்குவிசயம், நரவாகனதத்தன் பிறப்பு என்றவாறு மேற்கூறப்பட்ட தலைப்புகளைக் கொண்டு அமைந்துள்ளன. இங்ஙனமாகப் பண்டிதமணி தமிழர்க்கு அழகிய உரைநடையில் இயற்றி அளித்த நூல்களின் சிறப்புப் பலரும் போற்றும் வண்ணம் அமைந்துள்ளது.

## மொழிபெயர்ப்பு முறைமை

பண்டிதமணியின் மொழிபெயர்ப்பு நூல்களுள் கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட ஐந்து நூல்களும் அந்தந்த மூலநூல்களுக்கு ஏற்றவாறு பொருள் மாறுபாடின்றி மொழிபெயர்க்கப் பட்டுள்ளமையை அறிய முடிகிறது. அவரது மொழிபெயர்ப்புத் திறமையையும் முறைமையையும் சோமசுந்தரபாரதியார் "முதனூற் கண்டதனை முகந்து கொண்டு தமிழ் மொழியிற் குறையாது கொடுப்பதுடன், அசையேனும் கூடாமல் அளந்தெடுத்துதவுமிவர் சொற்செட்டும் பொருணிறைவும் வரன்முறை வணிகர் வளத்தழகை வலியுறுத்தி நிற்கும். பொருந்துமிடந்தோறும் இந்நூல்நீதிகளுக்கு இயையும் நெருக்கமுடைய தமிழ்ப் பொருணூல் முதுமொழிகளையும் இறவாக் குறளடிகளையும் தொடுத்திணைத்தெடுத்துக் காட்டிச் செல்லும் செவ்வி மிகப் பாராட்டற்பாற்று" (சு.நீ. ப. 35) என்று வியந்து பாராட்டுவதன் வழிப் பண்டிதமணியின் மொழிபெயர்த்தளிக்கும் திறன் அறியப்படுகிறது.

## நேர்மொழிபெயர்ப்பு

பொருணூல்களில் பண்டிதமணி மூலத்தில் உள்ளவற்றை உள்ளவாறே பொருள் மாறுபடாதவாறு கருத்தைச் சுருக்காது விரிக்காது அப்படியே மொழிபெயர்த் துள்ளமையைக் காணமுடிகிறது. 'நீதி நூன்மாட்சி' என்ற தலைப்பில் பண்டிதமணி "சுக்கிராச்சாரியார் எல்லா வுலகங்களுக்கும் தலைவரும் படைத்தல் காத்தல் அழித்தலைச் செய்பவரும் ஆகிய கடவுளை வணங்கி வழிபட்டு, தம்மையடைந்து முறைப்படி வணங்கி வாழ்த்தி வழிபட்டுக் கேட்ட அசுரர்களுக்கு, நீதிகளின் சாரத்தைக் கூறுகின்றார்" என முதனூலாசிரியர் தம்மை, படர்க்கையில் பாவித்துத் தொடங்கியது

போன்று முதல் சுலோகத்தின் முழுமையான பொருளை அப்படியே சுக்கிரநீதியில் மொழிபெயர்த்துள்ளதைச் சான்றாக்கலாம்.

இங்ஙனமே கௌடலீயப் பொருணூலில் முதல் அத்தியாயத்தில் மூலநூலில் அமைந்த சுலோகங்கள் தமிழில் சுலோகப் பொருளாக அமைந்துள்ளமை, "நிலத்தைக் கொள்ளுதல், அதனைக் காத்தல் என்னும் இவை குறித்து முன்னையாசிரியர்களால் எத்துணைப் பொருள் நூல்கள் கூறப்பட்டனவோ அவற்றைப் பெரும்பாலும் திரட்டி இப்பொருள் நூல் ஒன்று செய்யப்படுகின்றது" (கௌடலீயம் ப. 1) என்பதன் வாயிலாக அறியப்படுகிறது.

'பயிற்சி பகர்தல்' எனும் முதல் அதிகரணத் தொடக்கமாக மூலநூலில் உள்ள சூத்திரங்கள் தமிழில் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்ட முறையை,

"1. வித்தை விளம்பல் 2. பெரியோரிணக்கம் 3. பொறியடக்கம் 4. அமைச்சரை அமைத்தல் . . . . . . . ." என்று கௌடலீயத்தில் காணமுடிகிறது.

## உரைநடையில் அமைக்கப்பட்ட நூல்கள்

"செய்யுள் நடையாகவே நூல்கள் இயற்றும் ஆற்றலிருந்தும் வசனநடையாக இச்சரிதத்தை இவர்கள் இயற்றியதற்குக் காரணம் எல்லோரிடத்துமுள்ள அன்பின் மிகுதி என்றே சொல்ல வேண்டும்" என்ற உ.வே. சாமிநாதையரின் கூற்று வாயிலாக ஆசிரியர் தமிழ் மக்கள் அனைவரும் இலக்கிய இன்பம் அடைதல் வேண்டும் என்ற விருப்பம் கொண்ட நிலையை அறிய முடிகிறது. உ.வே.சா. கூறிய வசன நூல்களான சுலோசனையும் உதயணசரிதமும் பண்டிதமணியின் அழகிய உரைநடைக்குச் சான்றாக விளங்குகின்றன. அவருக்கே உரிய தனித்தமிழ் நடை வெளிபட்டு நிற்கிறது. உயரிய சொற்சேர்க்கை, நீண்ட தொடர் உவமை, உருவகம், வர்ணனை இவை ஆசிரியரால் கையாளப்பட்டுள்ளன. பல சொற்கள் தொடர்ந்து நின்று புணர்ச்சிநடை கையாளப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்பு விளக்கம்

ஆசிரியர் மூலநூலின் மொழிபெயர்ப்பை அப்படியே கூறித் தம்முடைய விளக்கத்தை நூலில் அது இடம்பெறும் பக்கத்தின் கீழ்ப்பகுதியில் கூறிச் சென்றுள்ளார். தம் மொழிபெயர்ப்பு நூல்கள் அனைத்திலும் இம்முறையைக் கையாண்டுள்ளார் என்பது தெரிகிறது. ஒரு பக்கத்தில் மூலத்தின் பெயர்ப்பு மேற்பகுதியிலும் ஆசிரியரின் விளக்கவுரை கீழ்ப்பகுதியிலும் கையாளப்பட்டுள்ளன.

"புலன்களாகிய பெருங்காட்டில் ஓடித் திரிவனவும், அடக்க வொண்ணாதனவுமாகிய பொறிகளென்னும் யானைகளை அறிவென்னும் தோட்டியால் அடக்கி வயப்படுத்துதல் வேண்டும். கூஅ" (ப. கச) என்ற சுக்கிரநீதியின் பொருளுக்கு ஆசிரியரின் விளக்கம் விளக்கவுரைப்பகுதியில் கீழ்க்கண்டவாறு காட்டப்பட்டுள்ளது.

> **"கூஅ. இச்சுலோகத்தின் கருத்து 'உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான், வரனென்னும் வைப்பிற்கோர் வித்து என்னுந் திருக்குறளை நினைவுறுத்துகின்றது' (ப. கச)**

"நிலத்தை . . . . . இவை குறித்து [3]முன்னையாசிரியர்களால் எத்துணைப் பொருள் கூறப்பட்டனவோ அவற்றைப் [4]பெரும்பாலும்......" (கௌடலீயம் ப. 1) என்ற மொழிபெயர்ப்பிற்குச் சுலோகப் பொருளின் மேல் குறிக்கப் பட்டிருக்கும் எண் குறியீடுகளுக்கு உரை விளக்கம் கீழே தரப்பட்டிருப்பதை,

> "3. முன்னையாசிரியர்கள் - வெள்ளி, வியாழன் முதலியோர்.
>
> 4. பெரும்பாலும் என்றமையால் சிறுபான்மை சிற்சில இடங்களில் இவ்வாசிரியர் தங்கொள்கைகளையும் வெளிப்படுத்தி யுள்ளார் என்பது புலனாகும்" என்று அமைத்துள்ளதன் வாயிலாக அறியலாம்.

இங்ஙனமாகவே மண்ணியல் சிறுதேரிலும் படிப்போருக்கு வினா எழுதலைத் தவிர்ப்பதற்காகவே ஆசிரியர் ஒவ்வொரு வாக்கியத்திலும் சொல்லிலும் அக்கறை காட்டியுள்ளார் என்பதை,

> "வசந்தசேனை - ஏடி! மதனிகே! மாட்சிமிக்க சாருதத்தரது இவ்ஓவிய வுருவம் நன்கு [4]ஒத்திருக்கின்றதா?" என்ற பெயர்ப்பிற்கு அச்சொல்லின் விளக்கமாக

"4. அவர் உருவத்தை ஒத்திருக்கின்றதா என்பது கருத்து" என்பதன் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் இவ்விளக்கவுரைப் பகுதியில் பிற நூல்களை ஒப்பிட்டும் நினைவுகூர்ந்தும் தம் கருத்துகளை வெளியிட்டுள்ளார். சொற்களுக்கு மேலும் விரிவுப்பொருள் வேண்டுவோர்க்கு வழிகாட்டும் விதமாய்ப் பிற நூல்களில் 'காண்க' என்று கைகாட்டியுள்ளார்.

"உத்தாரம் - எடுகூறு - பாகநிருணயம். இதன் விரிவை மனுதரும சாத்திரம் ஈ -ஆம் அத்தியாயத்தில் காண்க" (சு.நீ. ப. கஉ) என்று எடுத்துக்காட்டுவதன் மூலம் அவரின் அளவிடற்கரிய இலக்கிய

அறிவுப் பரப்பைக் காணமுடிகிறது. இதே போன்று மூல நூலின் தலைப்புகளின் பெயர்க்காரணம் குறிப்புரையாக அமைந்துள்ளமையையும் புலப்படுத்துகிறார்.

> "14ஆம் அதிகரணம்
>
> *மறைவுச் செயல்" என்ற குறியீடு அமைந்த தலைப்பிற்கு விளக்கவுரையாக
>
> "*மறைவுச் செயல் பகைவரை அழித்தற்குரிய மந்திரம், மருந்து இவைகளை மறைவாக உபயோகித்தலைக் கூறுவது'' (கௌ. ப. 20)

என்பதன் வாயிலாக ஆசிரியர் ஒவ்வொரு சொல்லின் இன்றியமையாமையை உணர்ந்து படிப்பவரின் முழுமையான பயனை அறிந்து மொழிபெயர்த்துள்ளதை அறிய முடிகிறது.

மேலும் புராண, இலக்கிய மேற்கோள்களும், உரையாசிரியர்களின் உரைகளும், தொடர்புடைய காப்பியச் செய்திகளும் அடிக்குறிப்புரையாகத் தரப்பட்டுள்ளன. பல நூல்களைக் கையாண்டுள்ளமை ஆசிரியரின் ஒப்புநோக்குந் திறனையும் ஆழமான தமிழறிவையும் குறைவிலாது வெளிக் காட்டுவதாய் அமைந்துள்ளது. வடநூல் செய்திகளையும் தமிழ் நூல் செய்திகளோடு ஒப்புமைப் படுத்திக் காட்டும் பாங்கினைக் கௌடலீயத்தில் (கௌ. ப. 25) காணலாம்.

## வெண்பா யாத்தல்

நூலின் இறுதியில் நூலின் சாரத்தை வெண்பாவாகக் கொடுப்பது பண்டிதமணியின் தனித்தன்மையாகும். இத்தன்மை நூலுக்கே அழகு சேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

'உதயணசரிதத்'தில் ஒவ்வொரு வகுப்பு முடிவிலும் வெண்பா அமைத்துள்ளமை மிகச் சிறப்பாகும். 1983ஆம் ஆண்டு வெளிவந்த 'உதயணசரிதமும் சுலோசனையும்' எனும் நூற்றாண்டு விழா வெளியீட்டு நூலில் உதயண சரிதம் 15 வகுப்புகள் கொண்டதாய் அமைந்துள்ளது. அவற்றுள் 13ம் வகுப்பு (கலிங்கசேனையின் வரலாறு) 15ஆம் வகுப்பு (திருமஞ்சனம் பெறுதல்) ஆகியவற்றின் முடிவில் இரண்டு வெண்பாக்கள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. இறுதி வகுப்பின் இரண்டாவதாக அமைந்த வெண்பாவாக,

> **அன்பருளத்தி னகலாப் பரனருளால்**
> **இன்ப மிருமையினு மெய்தலா – மென்பதே**

வற்சநாட் டேந்தன் மகனிவர் தம்வாழ்க்கை திகழ்
பொற் சரிதங் காட்டும் பொருள்

என்ற பாடல் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். பண்டிதமணியின் மொழிபெயர்ப்புத் திறத்தை "கவிமணி எனவும் விளங்குகின்றார்"[7] என்று விபுலானந்த அடிகளும் "ஆரியத்தின் நிலை கண்டோன்; ஆரிய தமிழின் கடலானோன்"[8] என்று கவிமணியும் "கதிரேசனார் காவியமானார்; காவியம் அவராயிற்று"[10] என்று திரு.வி.க.வும் கூறுவதன் வாயிலாகப் பண்டிதமணி மொழிபெயர்த்துத் தமிழர்க்கும், தமிழுக்கும் அளித்துள்ள பாண்மையும் முறைமையும் அறிஞர்களால் வரவேற்கப்பட்டுப் போற்றுதற்கு உரியதாயிற்று என்று அறிய முடிகிறது.

## மதிப்பீடுகள்

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பண்டிதமணியால் மொழிபெயர்க்கப்பட்ட நூலுக்குப் பலர் தங்கள் கருத்துகளைக் கூறியுள்ளனர். பண்டிதமணியின் மொழிபெயர்ப்புத்திறன், நூலின் இன்றியமையாமை, நூலின் சாரம் இவை பற்றிப் பற்பலத் தமிழறிஞர்கள், வடமொழி அறிஞர்கள் தங்கள் கருத்துகளை விமர்சனமாகவும், மதிப்பீடாகவும் தந்துள்ளனர்.

கோ. சுப்பிரமணிய பிள்ளையாகிய அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர், "நம் பண்டிதமணி யவர்கள் சுக்கிர நீதி வடமொழி நூலையும் மிருச்சகடிகம் எனும் பெயருடைய வடமொழி நாடகத்தையும் செவ்விய தமிழ் நடையில் சுவை பெற மொழிபெயர்த்து வெளியிட்ட மொழிபெயர்ப்பினைக் கற்று மகிழ்ந்த தமிழ் மக்கள் அவர்களால் மொழிபெயர்க்கப் பெற்ற கௌடலீயமாகிய பொருள் நூலையும் விரும்பிப் பயில்வார்கள் என்பதிற் சிறிதும் ஐயமில்லை" (கௌ. ப.viii) என்று கூறியுள்ளதன் வாயிலாகப் பண்டிதமணியின் மக்கள் பயன் கருதும் எண்ணமும் அவரின் மொழிபெயர்ப்பு என்றும் வெற்றியே பெறும் என்ற நம்பிக்கையும் வெளிப்பட்டுள்ளன.

"அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' எனும் கருத்தை நன்றாய் விளக்க எண்ணிச் சூத்திரகன் மிருச்சகடிகத்தைப் படைத்தார். அதை நானிலத் தமிழர்க்கு நன்றாய் விளக்க வேண்டும் என்று பண்டிதமணி மண்ணியல் சிறுதேராய்ப் படைத்தார்"[10] என்று மீ. இராசேந்திரன் தம் வணக்கவுரையில் கூறுவதன் வாயிலாகப் பண்டிதமணியின் மக்கள் சமுதாயத்தின் வாழ்வுப் பொருள் சிறக்க அவர் எடுத்த முயற்சி வெளிப்படுகிறது.

சுலோசனை பற்றிச் சோமசுந்தர பாரதியார் "தங்கள் 'சுலோசனை' மொழிபெயர்ப்பு நூலைப் பெற்றேன். கதை கவினிது; கற்பறிவுறுத்துங் கருத்துகள் செவ்விய; நடை அரிதிலினியது. பண்டிதரன்றிப் பலர்கறிது. படித்தறிபவர்க்கினிதே. கதைச் சுவை குன்றாது. உயரிய நடையில் ஒழுகும் திட்பமும் தூய்மை யோடினிமையும் மலிய வடமொழியிலுள்ள தொன்றைத் தமிழ் வ்சனப்படுத்தியாளுந் திறமை வியக்குமாறமைந்து" என்ற மதிப்பீட்டுக் கடிதத்தின் வாயிலாகப் பண்டிதமணியின் மொழிபெயர்ப்பு நடையும் முறையும் தெரிய வருகின்றன.

"வடமொழியில் மிக விரிவாகப் பரந்து கிடக்கும் சரிதத்தை யாவரும் எளிதிலுணரும் படி சுருக்கமாகத் தெள்ளிய இனிய நன்னடையிற் பலவகையான சுவைகளை அங்கங்கே அமைத்துப் பழைய தமிழ்ச் செய்யுட்களிலும் பண்டை உரைகளிலும் காணப்படும் இனிய வாக்கியங்களை உரிய இடங்களிற் சேர்த்துத் தமிழர்க்கு ஒரு நல் விருந்தாக இவர்கள் இயற்றியிருத்தல் மிகப் பாராட்டற்பாலது. இதில் இடையிடையே வாய்த்த இடங்களில் உலகத்தாரை நோக்கிப் புலப்படுத்தும் நீதி வாக்கியங்களும் ஒவ்வொரு பகுதியின் இறுதிக் கதையின் சாரத்தைச் 'சுருக்கி'த் தெரிவித்திருக்கும் வெண்பாக்களும், உரிய இடங்களில் சிவபெருமானுடைய திருவருளின் பெருமையைப் புலப்படுத்திய பகுதிகளும் அறிந்து இன்புறற்பாலன" (உதயணசரிதம் - 1924) என்று உ.வே. சாமிநாதையரின் கடிதச் செய்தி உதயணசரிதத்தின் மொழிபெயர்ப்புத்திறத்தை ஆய்ந்து கூறப்பட்ட உண்மையான மதிப்பீடாக அமைந்துள்ளது.

இவர்கள் தவிர த.வே. உமாமகேசுவரம், ரா. ராகவையங்கார், ஜெ. ஸ்ரீசந்திரன் போன்றோர் நன்முறையில் தங்கள் மதிப்பீடுகளை அளித்துள்ளனர்.

இவ்வாறாகப் பல புலமையாளர்களும் தங்கள் கருத்துகளை கூறுவதிலிருந்து பண்டிதமணியின் மொழிபெயர்ப்புப் பணி ஒப்பற்ற சிறப்பினை உடையதாகும் என்பது ஒருபுறமிருப்பினும் பிறரது எண்ணங்களை விரும்பிக்கேட்டு ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும், கேட்டு அறிந்து திருத்திக் கொள்ளும் தகைமையும் கொண்ட சான்றளாராகத் திகழ்ந்துள்ளார் என்பதும் புலனாகிறது.

## பண்டிதமணியின் கொள்கைகள்

மொழிபெயர்ப்புப் பணியில் தம் கொள்கைகளாக மூலநூல் கருத்துகள் சிதைவுறாமல் தமிழில் செய்ய வேண்டும் என்பதையும், தூய உயர்நடைத்தமிழில் ஆக்கியளிக்க வேண்டும் என்பதையும் கொண்டிருந்தார் என்று அறிய முடிகிறது.

பிழைபட்ட மூலத்தை அப்படியே தரவேண்டுமென்று எண்ணாமல் பிறநூல்களின் உதவியாலும், முன் பின் ஆராய்ச்சிகளாலும் செப்பம் செய்து கொண்டு மொழிபெயர்க்க வேண்டும் என்ற கொள்கை உடையவர் என்பதை அவரின் கூற்று (சு.நீ. ப. 9) வாயிலாகவே உணர முடிகின்றது. மொழிபெயர்க்கப்படும் நூல் முதனூல் நயத்தை இழந்து விடாமலிருக்க வேண்டும் என்பதே அவரது உள் நோக்கமாகும். பிறமொழிப் படைப்புகளின் மீதும், படைப்பாளர்கள் மீதும் மதிப்பு வைத்தல் வேண்டும் என்ற கொள்கையுடையவராகக் காணப்படுகிறார்.

காப்பியங்களும், பொருணூல்களும் மனித வாழ்க்கைக்கு அறச்சாரங்களைக் கூறுவதாய் உள்ளதால் அவை மக்களுக்கு இன்றியமையாதவையாகும் என்ற நல்லெண்ணம் கொண்டவராகக் காணப்படுகிறார். விளக்கவுரை என்ற பகுதியை அமைத்துப் பல நீதி இலக்கியக் கருத்துகளையும், தமது எண்ணங்களையும் கூறி மூலநூலுக்குப் பெருமை சேர்த்துள்ளதை அறிய முடிகிறது. அதோடு மட்டுமன்றி மக்களுக்குத் தம் இலக்கியத்தின் வழித் தொண்டு செய்ய வேண்டும் என்ற கொள்கை உடையவர் என்பதும் அறியப்படுகிறது.

## முடிவுரை

அரசியல் பற்றிய சுக்கிரநீதியும் அரசியல் நெறிநின்று பொருளீட்டும் முறைகளைக் கூறும் கௌடலீயமும் பொருணூல்களாக அமைந்து தமிழுக்கு நிறைவு தந்துள்ளன. தமிழில் நாடக நூல்கள் குறைவு என்ற நிலையில் மறைமலையடிகள் சாகுந்தலத்தை வழங்கியதைப் போன்று வடமொழியில் காலத்தால் முந்திய பேரிலக்கியமாக விளங்கும் மிருச்சகடிகத்தை 'மண்ணியல் சிறுதேராக்கி'த் தமிழர்களுக்குப் பண்டிதமணி வழங்கியுள்ளார். சுலோசனையும் உதயண சரிதமும் வடமொழிக் காப்பியம் தழுவிய கதைகளாகக் காணப்படுகின்றன.

இம்மொழிபெயர்ப்பு நூல்கள் பண்டிதமணியால் மொழிபெயர்க்கப் பட்டமைக்கு அவருடைய இருமொழிப் புலமையும் அவருக்குக் கிடைத்த ஊக்கங்களும் அதற்கும் மேற்பட்ட தமிழ்ப்பற்றும் பின்புலமாக அமைந்தன என்பது அறியப்பட்டது. அவரின் மொழிபெயர்ப்புப் பணியினால் அவர் பெற்ற மதிப்புகளும் அறியப்பட்டன. இங்ஙனமாகப் பண்டிதமணியின் மொழிபெயர்ப்பின் வழிப் பல செய்திகள் பெறப்படினும் ஒவ்வொரு நூலும் தனித்தனியே ஆய்வுக்குட்படுத்தப் பெறும் பரப்புடையனவாகும். அதன் வழி மேற்கொண்டு பல கருத்துகளையும் பண்டிதமணியின் இருமொழிப் புலமையின் ஆழத்தையும், சிறப்பாக அறிய இயலும் என்பதில் ஐயமில்லை.

## அடிக்குறிப்புகள்

1. பண்டிதமணி, விசு. திருநாவுக்கரசு, தமிழன்னை நிலையம், புதுக்கோட்டை, 1944, ப. 58.
2. பண்டிதமணி, சோமலெ, ஒளிப்பதிப்பகம் மதுரை , இ.ப. 1971, ப. 42.
3. மேற்படி.
4. பண்டிதமணியவர்களின் உருவப்படத்திறப்பு விழா சாது அச்சுக் கூடம், சென்னை, 1940, ப. 10.
5. மொழிபெயர்ப்பியல், சண்முகவேலாயுதம், உ.த.நி., சென்னை, 1983, ப. viii
6. மேற்படி, ப. 4.
7. பண்டிதமணி - விசு. திருநாவுக்கரசு ப. 42.
8. மண்ணியல் சிறுதேர் - ஒரு மதிப்பீடு, ப. 15.
9. மேற்படி.
10. மண்ணியல் சிறுதேர் - ஒரு மதிப்பீடு, மீ. இராசேந்திரன், முருகன் புத்தக நிலையம், மதுரை, 1968, ப. vii.

## முதன்மை நூல்கள்


1. உதயணசரிதம், மு. கதிரேசச்செட்டியார், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை, 1924.
2. கௌடலீயம் (முதற் பகுதி) மொ.பெ. பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1979.
3. சுக்கிரநீதி, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை, இ.ப. 1979.
4. சுலோசனை, மு. கதிரேசச் செட்டியார், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை, 1924.
5. மண்ணியல் சிறுதேர், மொ.பெ. பண்டிதமணி கதிரேசச்செட்டியார், அன்னை நிலையம், சென்னை, இ.ப. 1967.


*****

# சுக்கிரநீதி

*அ. ஆனந்த நடராசன்*

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் தமிழில் மொழிபெயர்த்த சுக்கிரநீதி என்ற நூல் 1926இல் சன்மார்க்க சபையினரால் வெளியிடப்பெற்றது. பண்டிதமணியின் மொழிபெயர்ப்பு நூல்களுள் தலையாயதும், பெரும் பயனுடையதும் சுக்கிரநீதியே ஆகும். "பொருள் நூல் தனியே தமிழில் இல்லாத இக்குறையை நிரப்ப எண்ணியே இம்மொழி பெயர்ப்பை மேற்கொண்டனம்"[1] என்று பண்டிதமணி கூறியுள்ளார்.

"தமிழில் அயலொலி கலவாமை, அயற்பெயர்களைத் தமிழுருவாக்கம், புதுச்சொல்லாக்கம், மொழிபெயர்ப்பெனத் தோன்றாத தன்னிறைவு, இடரிலா நடை, தூய தமிழ் நடை, மூலத் தெளிவுக்குறிப்பு, ஒப்பீடு என்ற பெயர்ப்பு வனப்பெல்லாம் தழுவியதே பண்டிதமணியம் என்பது. திருக்குறளையும், பரிமேலழகர் உரையையும், பண்டைத் தமிழக அரசியலையும் அறிய முயல்வார்க்கு வழித்துணை நூல் சுக்கிரநீதி, இந்நூலின் அடிக்குறிப்புக்கள் விளக்கம் மிக்கவை. பண்டிதமணியின் புதிய தமிழ்த் தொண்டுக்கு இந்நூலாக்கம் ஒரு பெருங்கரி"[2] என்று வ.சுப. மாணிக்கனார் கூறுவார்.

"உரைநடையில் மொழி பெயர்ப்பு வடிவில் உள்ள நூல்கள் அனைத்திற்கும் இதுவே தலைமணி நூலாக விளங்குகின்றது"[3] என்ற பாராட்டுவர் தமிழ்ப் பெரியார் கா.சு.பிள்ளை.

தமிழ் மொழியை அணிசெய்து நிற்கும் நூல்கள் முதனூல், வழிநூல் என இருதிறத்துள் அடங்கும். வழிநூல் தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்த்ததர்ப்படயாத்தல் என நான்கு வகைப்படும். மொழி பெயர்த்ததர்ப்படயாத்தல் என்பது வேற்று மொழியிலுள்ள பொருளை அது கிடந்தவற்றானே தமிழ் நூலாகச் செய்வதாம். மொழி பெயர்த்தல் என்றதனால் பொருள் பிறழாது செய்ய வேண்டும் என்பது பெறப்படும். மொழி பெயர்க்கப்படும் நூல் பெயர்த்துரைக்கப்படும் மொழிக்கண்ணுள்ள குறையை நிரப்புவதாக இருத்தல் வேண்டும். அதுவே அதன் பயனாகும். இப்பணியை முழுமையாகச் செய்த பெருமை பண்டிதமணியின் சுக்கரநீதிக்கு உண்டு.

"சுக்கிரர் அசுரகுரு ஆதலின் அசுரர்களின் வழக்க ஒழுக்கங்களை உற்றுணர்ந்து அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தக்க முறையில் இவ்வாசிரியர் நூல் ஆக்கியுள்ளார். கட்காமஞ்சூது முதலியவற்றை அறவே நீக்க வேண்டுமென்று கூறினாலும் ஒரோவிடங்களில் அவற்றை அளவோடு மேற்கொள்வதால் விளையும் நன்மைகள் இன்னவென்றும் கூறுகிறார். அங்ஙனம் கூறுதற்குக் காரணம் கள்ளுண்டலில் வேட்கை மிக்க அசுரர்கள் உளங்கொள்ளும் வகையில் உபதேசிக்க வேண்டுமென்னும் எண்ணமேயாம். சிறிதளவு உண்ணப்படும் கள் மதிநுட்பத்தையும், தூய அறிவையும், அஞ்சாமையையும், மனவுறுதியையும் தருவதாகும் (அத்.1,6,116) என்று கூறுவர். எச்செயல் பலராலும் பாராட்டப் பெறுகின்றதோ அது அறமாகும். எச்செயல் யாவராலும் பழிக்கப்படுகின்றதோ அது மறமாகும். ஆராய்ந்து துணிதற்குரிய அறத்தின் இயல்பை எவரும் அறிதற்கு ஆற்றலுடையவரல்லர் (அத்.5,6,35) என்று இவ்வாசிரியர் கூறுமாற்றான் அறியலாம். விலக்கற் பாலன ஒரு காரணம் பற்றி விதியாகக் கூறப்பெறினும் அங்ஙனம் கூறும் ஆசிரியரின் உட்கோளையுணர்ந்தே விதிவிலக்குகளைத் துணிதல் வேண்டும்"[4] என்று பண்டிதமணி கூறியுள்ளார்.

இம்முறையில் மூலநூலாசிரியன் உட்கோளை நுண்ணிதின் உணர்ந்து மூல நூலாசிரியர் விலக்க வேண்டியவற்றை விதியாகக் கூறியுள்ளாரே என்று நமக்கு எழும் ஐயத்திற்கு விடை கூறியுள்ள திறம் பண்டிதமணியின் அறிவு நுட்பத்தைப் புலப்படுத்துகிறது. மேலும் அறிவுடையார்க்கு எல்லாச் செயல்களிலும் உலகமே ஆசிரியனாம். ஆதலின் பகுத்துணரும் அறிஞன் உலகியல் உணர்தற்பொருட்டு அவ்வுலகத்தையே பின்பற்றல் வேண்டும். (அத்.1,6,32) என்ற சுக்கிரர் கருத்து இங்கு நினைத்தற்குரியது.

"திருக்குறள் கருத்துக்களும் பரிமேலழகர் உரைக் கருத்துக்களும் இதன் கண் பலவிடத்துங்காணலாம். இந்நூற்கருத்துக்கள் திருக்குறள் ஆசிரியர்க்குத் துணையாக உள்ளன என்று பரிமேலழகர் கூறுவர். காலம் பற்றி முன்னாகப் பின்னாகத் தோன்றினாலும் திருக்குறள் முதலிய தமிழ் நூல்களின் சுருக்கமாகக் காணப்படும் பொருள்களை விளக்கமாக வுணர்ந்து கோடற்கும் அவற்றிற் காணப்படாத புதிய பொருள்களைக் கண்டு மேற்கோடற்கும் இது தக்க கருவியாகும்"[5] "இத்தகைய சிறந்த பொருணூலாகிய சுக்கிர நீதியைத் தமிழில் மொழி பெயர்க்க எண்ணி மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபைத் தலைவர் திருவாளர் வ.பழ.சா. அண்ணாமலைச் செட்டியார் அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் இச்செயலை மனமுவந்து உடன்பட்டுச்

சிறிதுங்காலந்தாழ்க்காமல் வடமொழியிற் சாகித்திய சிரோமணி வகுப்பில் தேர்ச்சி பெற்ற திண்ணியம் பிரம்ம ஸ்ரீ டி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகளை எனக்கு உதவியாக இருந்து வரும்படி செய்தனர். சன்மார்க்க சபை வெளியீடுகளில் ஒன்றாக இஃது என்றும் நின்று விளங்கும் வண்ணம் மொழிபெயர்த்தியற்றலானேன். இதனை மொழிபெயர்க்குங்கால் முதனூற் பிரதியாகப் பெற்றது பண்டிதகுலபதி ஜீவானந்த வித்தியாசாகரர் பி.ஏ., அவர்கள் உரையோடு கல்கற்றா நகரத்தில் அச்சிடப்பட்டதாகும். அது மூலத்திற் சிலவும் உரையிற் பலவும் ஆகிய பிழைகளையுடையதாகும். கூடியவரை முன்பின் ஆராய்ச்சிகளாலும், பிற நூல்களின் உதவியாலும் பிழைபட்ட பகுதிகளைச் செப்பஞ்செய்து கொண்டு மொழிபெயர்க்கலானேன். மூலத்தில் விளக்கமாக இல்லாதவர்களுக்குச் சுலோக எண்ணிட்டுக் கீழே குறிப்பு எழுதி விளக்கியிருக்கின்றேன். மொழிபெயர்ப்பிலுள்ள சில சங்கேதச் சொற்களும், குறியீடுகளும், அரும்பதங்களும் வடமொழிக்கண் எவ்வாறுள்ளன என்று படிப்போர் அறிந்துகொள்ளுதற்கு உபயோகப்படும் வண்ணம் இறுதியில் அரும்பத முதலியவற்றின் அகராதியை எழுதிச் சேர்த்திருக்கிறேன். அவ்வகராதி வடசொற் களாகவே வடவெழுத்து வரிசையாகக் காட்டப்பட்டது அச்சொல்லுருவந் தெரிதற் பொருட்டேயாகும்"[6] என்று பண்டிதமணி கூறியுள்ளார்.

மூலநூலில் உள்ள பிழைகளைத் திருத்த வேண்டுமென்றால் வேறு பதிப்புக்களைப் பார்த்திருக்க வேண்டும். பிறர் எழுதிய பொருணூல்களை நுணுகிப் படித்திருக்க வேண்டும். வடமொழியில் நல்ல பயிற்சி இருக்க வேண்டும். மூல நூலாசிரியரின் உட்கிடக்கை தெரிந்திருக்கவேண்டும். விளக்கமில்லாததை விளக்க வேண்டு மென்றால் அது தொடர்பான வடமொழி நூல்களைப் படித்திருக்க வேண்டும். இதற்கு நல்ல வடமொழிப்புலமை இருக்கவேண்டும். பிறநூற்கருத்துகளைப் பொருத்தமாகக் கூற வேண்டுமென்றால் பல நூற்புலமையும் நல்ல நினைவாற்றலும் மிகுதியான ஆர்வமும் இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் சிந்திக்கும்போது பண்டிதமணிக்கு மொழிபெயர்ப்பாளருக்கு வேண்டிய எல்லாம் இயல்பாய் இருக்கின்றன. இன்னும் கூறப் போனால் அதற்கு மிகுதியாகவே தகுதியும், திறமையும் இருக்கின்றன என்று துணிந்து கூறலாம்.

"இத்தகைய நன்னூலைப் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் ஆரியத்தினின்றும் தமிழிற் மொழி பெயர்த்துதவியுள்ளார்கள். எம்மனோர்க்கு இவர்கள் உரைநடை

மொழிபெயர்ப்பாகத் தோன்றவில்லை. பிற மொழிகளினின்றும் பெயர்த்தெழுதப்படும் நூனடை பெரும்பாலும் ஒழுக்கும் திட்பமும் ஒருங்கு பெறுவதருமை. வழிந்தொழுகும் அருவியன்ன இயலொழுக்குத் தாய் மொழியில் தன்னிதய வெளிப்பாட்டிற் கியைவதல்லால் பிறபுலவருள்ளத்தைப் பிறிது மொழிகளின்றும் பெயர்த்தெடுத்தெழுவோர்க்கு அமைவது அரிதாம். பண்டிதமணி தமிழிற்றந்துள்ள சுக்கிரநீதி தமிழ் நூலன்றி மொழிபெயர்ப்பு நூலாதலை அவர் விதந்தோது முகத்தாலன்றி முன்னறியார் இதனடையில் அறியகில்லார். செட்டியார் அவர்களின் நுண்ணறிவும், விரிந்த கல்வியும் இந்நூல் முழுவதும் சலியாச் சான்றுபெற்று நிலவுதலுடன், தங்குலநலனும் குறையாவளமுமுதவ வளருமிவர் புலமைச் செல்வத்தின் செவ்வியையும் இதில் நிரம்பக் காண்கிறோம்"[7] எனச் ச. சோமசுந்தர பாரதியார் கூறுவர்.

இந்நூல் மொழிபெயர்ப்பு நூலாகவே தெரியவில்லை என்றும், மூல நூற்கருத்துகளைக் கூட்டாமலும், குறைக்காமலும் கொடுத்திருக்கிறார் என்றும் பாராட்டுவது பொருத்தமுடைத்து. மூலநூற்கருத்துகளை நன்கு உளத்தில் வாங்கிக் கொண்டு நல்ல தமிழ் நடையில் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கூறியிருப்பது படித்து மகிழ்தற்குரியது. இந்நூல் பொதுக்கொள்கைகளைக் கூறும் திருக்குறள் முதலிய பெரு நூலாராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும் பாங்கைச் சிற்சில இடங்களில் அடிக்குறிப்பில் பண்டிதமணி சுட்டியிருப்பது சுக்கிரநீதியோடு பிறநீதி நூற்களை ஒப்பிட்டு ஆய்வதற்கு உதவியாக, வழிகாட்டியாக இருக்கிறது. இந்நூலின் மூலம் எத்துணை நயமுடையதோ அத்துணை நயமுடையது இந்த மொழிபெயர்ப்பு என்று மகிழ்ந்து கூறலாம்.

"ஆசிரியர் சிவஞான சுவாமிகளின் மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழிலே ஏற்பட்ட காலத்திற்குப்பின் இந்த சுக்கிரநீதி மொழி பெயர்ப்பே மிகவும் போற்றத்தக்கதாக அமைந்துள்ளது. இதற்குக் காரணம் இதனுடைய ஆசிரியராகிய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் இணையற்ற தென்மொழி வடமொழித் தேர்ச்சியாம். இக்காலத்தில் இவரைப் போல இரு மொழியிலும் நுண்மாணுழைபுலமுள்ள கலைஞரைக் காண்டல் அரிது. தமிழில் இன்னும் மொழிபெயர்ப்பு செய்யக் கருதுபவர்கள் இவ்வாசிரியரையே தங்கட்குத் தக்கதோர் வழிகாட்டியாகக் கருதற்பாலர்"[8] என்று பேராசிரியர் கா.சு. பிள்ளை கூறுவர்.

சமஸ்கிருத சுலோகத்தை மொழிபெயர்க்கும் போது அச்சுலோகத்தின் பொருளைச் சிறிதும் மாற்றாமல் உள்ளவாறே

எழுதுவார். ஐயந்தோன்றிய இடத்தில், விளக்கம் தேவைப்பட்ட இடத்தில் சுலோகக் கருத்தில் எதையும் சேர்க்காமல் அடிக்குறிப்பில் சான்றோடு விளக்கம் தருவார். இது இவர் மொழிபெயர்ப்பில் கடைப்பிடித்த நன்னெறியாகும். இம்முறை மிகவும் பாராட்டுதற் குரியது. எடுத்துக்காட்டாக, கணவன் மனைவி, தாய் தந்தை, தமையன் தம்பி, தலைவன் ஏவலாளன், தங்கை தமைக்கை, நண்பர், ஆசிரியன் மாணக்கன் ஆகிய இவர்களுக்குள் மனவேற்றுமை உண்டாம் வண்ணம் செய்யலாகாது (மூன்றாம் அத்.சு.102) எனும் இச்சுலோகத்திற்குப் பண்டிதமணி விளக்கம் கூறும்போது,

“தாய் தந்தையர்க்கு மனவேற்றுமை செய்யலாகாது என்பது புதல்வரை நோக்கிக் கூறியதாகும். அது பிறனொருவன் செயலாயின் கணவன் மனைவி என்பதனுள் அடங்கும். ஆனால் பிறவெல்லாம் மற்றொருவன் செயலாகக்கூற இவ்வொன்றை மாத்திரம் புதல்வன் செயலாகக் கூறுதல் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆதலின் தாய் தந்தை என்பதில் புதல்வனைக் குறித்துக் கூறியதாகக் கொண்டு தாய் தந்தையர்க்கும் மகனுக்கும் மனவேற்றுமையுண்டாக்கலாகாது என்பது கருத்தாகக் கொள்ளுதல் பொருத்தமாகத் தோன்றுகின்றது” என்று கூறுவது மிக நுட்பமாக, பொருத்தமாக மொழிபெயர்க்கும் அவர்களுடைய திறனைக் காட்டுகின்றது.

உண்டி கொள்ளுங்காலும், கடன் கொடுத்தல் முதலிய வாணிகச்செயல்களிலும் நாணையொழித்த மனிதன் நலமுடையனாவான். பொருளைக் கொடுத்தல் நட்புரிமையை உண்டாக்கும். அது கொடாமை பகைமையை உண்டாக்கும். (மூன்றாம் அத்.சு.192)

இச்சுலோகத்திற்கு அடிக்குறிப்பில் பண்டிதமணி எழுதுகிறார்: “முதனூலிலுள்ள வியவஹாரம் என்ற சொல் கடன் கொடுத்தல் முதலிய வாணிகச் செயல் என்று மொழிபெயர்க்கப் பட்டது; உண்டியோடு உடன் எண்ணப்பட்டமையால் சிற்றின்ப நுகர்ச்சி எனவும் பொருள் கொள்ளலாம்'' என்று கூறுகிறார். உண்டியோடு கடன் கொடுத்தல் முதலிய வாணிகச் செயல்களைச் சேர்ப்பது காட்டிலும் உண்டியோடு தொடர்புடைய சிற்றின்ப நுகர்ச்சியைக் கூறலாம் என்று கூறியிருப்பது உலகியல் பற்றிய இவருடைய பல்துறை அறிவைக் காட்டுகிறது.

ஒரு மனிதனுடைய மனைவியர் இருவர் ஓரிடத்தில் கூடி இரார். பொலி எருதுகள் இரண்டு ஓரிடத்தில் கூடி இரா. அங்ஙனமாயின் பெண்கள் பலர் தம்முடன் கூடி வாழ்தலும், எருதுகள் தம்முட் கூடியிருத்தலும் எங்ஙனம் கூடும்? (மூன்றாம் அத்.சு.197).

இச்சுலோகத்தின் அடிக்குறிப்பில் இச்சுலோகப் பொருள் இதன் முன்னுள்ள சுலோகப் பொருட்கு ஏதுவாய் நின்று அப்பொருளை வலியுறுத்தல் காண்க. இச்சுலோகத்தின் பிற்பாதிக்குப் பசுக்கள் பல ஓரிடத்திற் கூடி வாழும்; மனிதர் இருவர்அங்ஙனம் வாழ ஒருப்படார் என்று பொருள் கோடலும் பொருந்தும் என்று பண்டிதமணி கூறுகிறார். சுலோகத்திற்கு நேர்பொருள் கூறுவதோடு இடத்திற்கேற்பப் பல்நூற்பயிற்சி பல்துறை அறிவு காரணமாக அச்சொற்களின் அடிப்படையிலேயே வேறு பொருள் கூறியிருப்பது இவருடைய மொழிபெயர்ப்பிற்குப் பொலிவு சேர்க்கிறது. திருக்குறளில் சில குறட்பாக்களுக்குப் பொருள் கூறும்போது அதிகாரத் தலைப்பு, முன் பின்னுள்ள குறள் இவற்றை வைத்துத் தான் பொருள் கூற முடியும் என்பது இங்கு ஒப்புநோக்கி நினைக்கத்தகும்.

ஒருவன் கடவுளர்க்கும், பசுக்களுக்கும், அந்தணர்களுக்குந் தலைவனாயிருக்குந்தன்மையை விரும்பலாகாது. அங்ஙனம் விரும்புவானாயின், அஃது அவன் குலமுழுதுங்கெடுத்து மிக்க துன்பம் விளைவிப்பதாகும் (மூன்றாம் அத்.சு.223).

இச்சுலோகத்தைப் படிப்பவர்க்கு ஐயம் ஏற்படும் இடமறிந்து அடிக்குறிப்பில் விளக்கியுள்ளார்.

பசுக்களுக்குத் தலைவனாயிருக்குந் தன்மையை விரும்பாலாகா தென்றது, பசுவின் உடம்பு முழுதிலும் தேவர்கள் வாழ்கின்றனரென்று முதுநூல் கூறுகின்றமையால், அப்பசுவை வைத்திருப்போன் அதனை வேண்டுவன உதவிக்காத்து, அதன் பயனைப் பெறவேண்டுமேயன்றித் தனக்கு அடிமைப் பட்டதாகக்கருதித் தான் நினைத்தவாறெல்லாம் வருத்தலாகா தென்பது பற்றியாம் என்று கூறி விளக்கியிருப்பது பிறர் உள்ளங் கொள்ளும் வகையில் கூறும் அவர்களுடைய திறனைக் காட்டும்.

நல்லோர்க்குச் செய்யும் உதவி சிறிதெனினும் என்றும் பெரியதாகும். தீயோன் தனக்குப் பிறர் செய்த உதவி பெரிதெனினும் அதனைக் கடுகளவினுஞ் சிறியதாக எண்ணுவான் (மூன்றாம் அத்.சு.307).

அடிக்குறிப்பில் இச்சுலோகத்தின் முற்பகுதி தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாகக் கொள்வர் பயன்றெரிவார்

என்னுந் திருக்குறட்கருத்தை ஒத்திருத்தல் காண்க என்று பண்டிதமணி கூறியுள்ளார். திருக்குறட்கருத்தை முழுதும் கூறுகின்ற சில சுக்கிரநீதி சுலோகங்களுக்குத் திருக்குறளை எடுத்துக்கூறும் பாங்கு அவருடைய திருக்குறள் பயிற்சியைக் காட்டும்.

வேள்வியின் பொருட்டுப் பொருளும், இம்மை இன்பம், மறுமை இன்பம், வாழ்நாள் வளர்ச்சியாகிய இவற்றின் பொருட்டு வேள்வியும் உண்டாயினவாம். பகைவரின்மை, படை, பொருளாகிய இம்மூன்றும் அரசியல் வளர்ச்சிக்கு உரியனவாம் (அத்.4.பி.2.சு.16).

இச்சுலோகத்தின் அடிக்குறிப்பில் "ஒருவன் பொருள் படைத்தல் வேள்வி முதலிய நற்கருமங்கள்நிமித்தமா மென்பது கருத்து. வேள்வி-ஐம்பெரு வேள்வி முதலியன. இவற்றை வடநூலார் பஞ்சமகாயாகம் என்பர். அவை பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் என்பனவாம். அவற்றுள், பிரமயாகம் - வேதம் ஓதல், வேதயாகம் - ஓமம் வளர்த்தல், மானுடயாகம் - விருந்தோம்பல், பிதிர்யாகம் - நீர்க்கடனாற்றல், பூதயாகம் - பலியிடுதல் என்று வடநூலிலிருந்து யாகம் பற்றிய விளக்கம் தருகிறார். மொழிபெயர்ப்போடு உரிய இடத்தில் வடமொழி நூலிலிருந்து விளக்கம் தருவது மொழி பெயர்ப்பு நன்றாக அமைய என்ன என்ன செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் எண்ணி எண்ணிப் பண்டிதமணியார் செய்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

அம்மணிகள் சருக்கராபம், சிபிடம், தளாபம், வருத்துலம் என நான்கு வகைப்படும். அம்மணிகளினின்றுந் தோன்றும் நிறவொளிகள் வெண்மையும், செம்மையும், பொன்மையும், கருமையுமாம் (அத்.4.பிர.2.சு.50).

அடிக்குறிப்பில் "இச்சுலோகத்தின் பிற்பாதியில் பொதுவாக மணிகளின் நிறவொளிகள் கூறப்பட்டமையால் முற்பாதியிலுள்ள சருக்கராப முதலிய நான்கும் அம்மணிகளின் வடிவங்களைக் குறிப்பனவாகக் கொள்ள வேண்டும். இவற்றுள் சருக்கராபம் என்பது சுக்கான் கல்லை உபமானமாக வுடையது என்று பொருள்படும். ஆதலின் அது பருமையுஞ் சிறுமையுங்கலந்த நேரிதலில்லாத வடிவத்தையுடையதாகும். சிபிடம் என்பது அவலையுணர்த்தும். ஆதலின் அஃது அவலையொப்பத் தகட்டு வடிவினையுடையதாகும். தளாபம் என்பதில் தளம் நீண்ட பொருளையுணர்த்துமாகலின் அதனை உபமானமாகவுடையது தளாபமாகும். ஆகவே அது நீட்சியான வடிவத்தையுடையதாகும். வருத்துலம் என்பது உருண்டை வடிவத்தையுணர்த்தும். இவற்றுள் முன்னதனை நோக்கப் பின்னது

சிறந்ததாக முறையே மதிக்கப்படும் என்று 57-ஆம் சுலோகத்திற் கூறுதலும் இவ்வவகங்களின் இழிவு சிறப்புக்களை நோக்கியாம் என்பது புலப்படும்" என்று பண்டிதமணியார் கூறுகிறார். மணிகள் நான்கு வகைப்படும் என்றும் அவற்றின் ஒளி என்ன என்று மட்டும் மூலநூல் கூறப் பண்டிதமணியார் சொல்லின் பொருளைக் கூறி அப்பொருளுக்கேற்ப அவ்வடிவம் இருக்கும் பாங்கைக் கூறி மிக நுட்பமாக விளக்கியிருக்குந்திறத்தால் அவருடைய வடமொழிப் புலமை உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்குகிறது.

*ஒரே வழக்கில் சான்று முதலிய சாதனங்காட்டும் பொறுப்பு வாதி பிரதிவாதிகளாகிய இருவர்க்கும் இன்று; இவ்விருவருள் ஒருவனே காட்டற்பாலன் (அத்.சபிர5.சு.160).*

அடிக்குறிப்பில் இச்சுலோகத்திற்கு "இவ்வாறன்றி ஒரே வழக்கில் வாதி பிரதிவாதிகள் இருவரும் காட்டும் சான்று முதலிய சாதனங்களெல்லாம் உண்மையாக மாட்டா; இவ்விருவருள் ஒருவர் காட்டும் சாதனங்களே உண்மையாகும்" என்று இக்காலவியல்புக் கேற்றவாறு உண்மை என்னும் சொல்லை வருவித்துப் பண்டிதமணியார் பொருள் கூறுதலும் பொருந்தும். இதனால் இவருடைய உலகியல் அறிவும், நீதித்துறை அறிவும் புலப்படுகின்றன.

*அவ்வுபாயங்களாவன : சோதனாப் பிரதிகாலமும், உத்திலேசமும், சபதமுமாம், இம்மூன்றினாலும் முறையே உண்மையைத் துணிதல் வேண்டும் (அத்.4.பிர5.சு.229).*

அடிக்குறிப்பில் "உத்திலேசத்தை அடுத்து வருஞ் சூத்திரத்திற் காண்க. இலிகிதம் முதலிய சாதனங்களில்லாத வழக்கில் இம்மூன்று உபாயங்களாலும் உண்மை ஆராய்தல் வேண்டும் என்பது கருத்து. இவற்றுள் சோதனாப் பயிற்சி காலமாவது விசாரணை நிமித்தம் காலத்தை மாற்றியமைத்தல், அன்றி, உண்மை அறிதற்பொருட்டு ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் பன்முறை கூறும்படி ஒருவனை வினாதலுமாம். உத்திலேசமாவது : சமாதான முதலிய உபாயங்களால் அறநெறி பிறழாது ஒருவனை உண்மை கூறச் செய்தல். சபதமாவது: தெய்வத்தை முன்னிட்டுச் சூளுறச் செய்தல்" என்று கூறியுள்ளார். மூலநூலில் பெயர்கள் மட்டுமே உள. அவற்றிற்கு உரிய விளக்கம் கூறியிருப்பது இவரின் பல்நூற்புலமையை மெய்ப்பிக்கும்.

*கருடமென்னும் அளவினவாகிய அரிசிகளை ஐயமுறாமல் மென்றுவிடல் வேண்டும் (இஃது அரிசியாலாராயப்படுவது) (அத்.4.பிர5.சு.247).*

அடிக்குறிப்பில் "ஒருவன் அரிசியைப் பற்றித் தெய்வீக சாதனஞ் செய்ய நேர்ந்துழி, நீதிபதி அவன் வழிபடும் தெய்வம் அல்லது சூரியன் இவர்கட்குத் திருமஞ்சனஞ் செய்த நீரை ஒரு மட்பாண்டத்திற்பெய்து ஒருகருட அளவு எடையுள்ள வெண்மை நிறம் வாய்ந்த அரிசியை அந்நீரில் முதனாள் ஊற வைத்துப் பூசித்தல் வேண்டும். முதனாள் உணவொழித்திருந்த அவன் பிற்றை நாட்காலையில் நீராடிச் சூரியதேவனது ஆலயத்தில் கிழக்கு முகமாக விருந்து அவ்வரிசிகளை மென்று பூர்ச்சம் அல்லது அரசிலையில் உமிழ்தல் வேண்டும். மெல்லுங்கால் அவனுக்கு உடல்நடுக்கமும் வாயில் இரத்தமும் தோன்றி உமிழ் நீரிலும் இரத்தங்காணப் படுமாயின், அவன் குற்றஞ் செய்தவனாவான். உமிழ்நீர் அரிசியின் நிறம் போல் வெண்மையாகக் காணப்படின் குற்றமில்லாதவனாவான். இதுவும் வாசஸ்பத்தியத்திற் கண்டது" என்று மூலநூல் செய்தியை விளக்க வேறு பல நூற்களைப் படித்து விளக்கி இருப்பது பண்டித மணியாரின் நல்ல ஆர்வத்தையும் உழைப்பையும் புலப்படுத்தும்.

குதிரையின் சிரோமணி தொடங்கி வாயின் அடிப்பாகம் வரையுள்ள அதன் நீளம், அக்குதிரையின் முகத்தளவின் மூன்றிலொரு கூறு கூடிய நான்கு மடங்கு மிகுதியாகும் (அத்.4.பிர.7.சு.46).

அடிக்குறிப்பில் "சிரோமணி குதிரையின் தலையிலுள்ள ஒரு குறி. முப்பத்தாறாங்குல நீளம் முகமுள்ள குதிரைக்கு அதன் முகத்தின் அளவை நான்கு மடங்காகப் பெருக்க 144 அங்குலமாகும். அவற்றோடு அதன் முகத்தளவின் மூன்றிலொரு கூறாகிய அங்குலம் 12-ஐயும் சேர்க்க அங்குலம் 156 ஆகும். இவ்வளவு அக்குதிரையின் நீள அளவென்று அறிதல் வேண்டும். இவ்வாறே மற்றைக்குதிரைகளுக்கும் முகத்தின் அளவைக்கொண்ட நீள அளவைக் கணக்கிட்டுக் கொள்க" என்று குதிரையின் இலக்கணத்தைக் குதிரைபற்றிக் கூறும் நூல்களைப் படித்துக் கணக்கு விபரம் கூறியிருப்பது ஆசிரியரின் கணக்கறிவைப் புலப்படுத்தும்.

பின்னர் அக்குதிரையின் உடம்பை நன்றாகப் பிசைந்து பிடித்துப் புழுதியிடையே புரளச் செய்தல் வேண்டும். அதன்பின் நீராட்டி உணவு கொடுத்து நீரருத்தி நன்கு பாதுகாத்தல் வேண்டும் (அத்.4. பி7, சு140).

அடிக்குறிப்பில் "ஸ்நாந பானா வகா ஹைஸ்ச்ச என்று மூலத்தில் உள்ளது. இப்பாடத்திலுள்ள ஸ்நாந அவகாஹ என்னும் சொற்கள் ஒரு பொருளனவாதலாலும் உணவு கூறப்பட்டமையாலும் ஆகார ஸ்நாந பான ஹைச்ச என்று பாடங்கொண்டு பொருளுரைக்கப்பட்டது" என்று பண்டிதமணியார் கூறுகின்றார்.

ஸ்நானம், குளித்தல், அவகாஹ, உட்புகுதல் (அதாவது தண்ணீரில் புகுதல் என்று பொருள் படும்) இரண்டு சொற்களும் ஒரே பொருளாக இருத்தலால் அவகாஹ என்ற சொல்லை மிகையென்று தள்ளிவிட்டுப் பானம் கை என்றால் குடித்தல் என்று பொருள் படுதலால் அதோடு தொடர்புடைய உணவையும் சேர்ப்பது நல்லது, பொருத்தமுடையது என்று கருதி ஆகாரம் என்ற சொல்லைச் சேர்த்து ஆகார ஸ்நாத பான ஹைஸ்ச்ச என்று பாடங் கொண்டேன் என்று கூறுவது பொருத்தமுடைத்து. உடல் களைக்க வேலை செய்த குதிரைக்குப் பானம் மட்டும் கொடுத்தால் போதாது. உணவு கொடுத்தால்தான் அதனுடைய களைப்பும், பசியும் தீரும். இவ்வாறு செய்வது தான் குதிரைக்கு நல்லது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து மூலபாடத்தைச் சிறிது மாற்றியுள்ளார். மாற்றிருப்பது மூல ஆசிரியர்க்குப் பெருமை சேர்ப்பதால் மிகவும் கவனமாக மூலபாடத்தில் இந்த ஒரு இடத்தில் மட்டும் மாற்றியிருக்கிறார் என்பதைப் பார்க்கும் போது பெருமையாக மகிழ்ச்சியாக இருக்கிறது. வடமொழிப்பயிற்சியும் நூற்பயிற்சியும் நன்கு வாய்க்கப் பெற்றதால்தான் இவ்வாறு மாற்ற முடிந்தது என்பதை உணர வேண்டும். புதுப்பாடம் கொண்டு மூல நூலாசிரியர்க்கு இணையாக விளங்கும் பாங்கு போற்றுதற்குரியது.

குதிரையின் நடை தாரை, ஆற்கந்திரம், இரேசிதம், புலுதம், தௌரீதகம், வற்கிதம் என ஆறுவகைப்படும். இவ்வறுவகை நடைகளுக்கும் இலக்கணங்கள் தனித்தனியே உள்ளன (அத்.4, பிரா7, சு144).

அடிக்குறிப்பில் "இங்கு ஆறு வகைப்படும் என்று கூறப்பட்ட குதிரை நடைகளை 2-ஆம் அத்தியாயம் 134-135 ஆம் சுலோகங்களில் பதினோரு வகைப்படுத்துக் கூறினார். அம்மிகுதி இவற்றுள் அடங்கும் போலும்" என்று பண்டிதமணியார் கூறியிருக்கின்றார். இரண்டாம் அத்தியாயத்தில் கூறியுள்ளதற்கு மாறாக மூல ஆசிரியர் நான்காம் அத்தியாயத்தில் கூறியுள்ளார் என்று மூல ஆசிரியரைக் குறைகூறாமல், மாறுபட்டதற்கு எங்கும் விளக்கம் இல்லாததால் உரையாசிரியரைப் போல மூல ஆசிரியர்க்கு அரண் செய்வதோடு பதினோரு வகை ஆறு வகையில் அடக்கிக் கூற வாய்ப்புண்டு என்பதை நுண்ணிதின் உணர்ந்து அம்மிகுதி இவற்றுள் அடங்கும் போலும் என்று கூறியிருப்பது மொழிபெயர்ப்பாசிரியரின் உயர்ந்த பண்பையும், அறிவுநுட்பத்தையும் புலப்படுத்துகின்றது.

உயிர்க்குக் கேடு வருங்கால் ஆற்றலில்லாத ஒருவன் மாறுபட்ட செயல்களைச் செய்தற்கு எப்பொழுதும் முயல்வான்.

ஆற்றல் வாய்ந்த ஒருவன் அங்ஙனம் மாறுபட்ட செயல்களைச் செய்தற்கு முயல்வானல்லன் (அத்.4, பிர.7, சு.181).

அடிக்குறிப்பில் "உயிர்க்குக் கேடு வருங்கால் என்பதனை ஆற்றல் வாய்ந்த ஒருவற்குங் கூட்டிக்கொள்க. மாறுபட்ட செயல்கள் யுத்ததருமத்திற்கு விரோதமானவை" என மொழிபெயர்ப்பாசிரியர் கூறுகிறார். உயிர்க்குக் கேடு வருங்கால் என்ற வரியை ஆற்றல் வாய்ந்த ஒருவற்கு என்ற வரிக்கு முன் மொழிபெயர்ப்பில் சேர்த்துப் பொருள் கூறாமல் அடிக்குறிப்பில் கூறியிருப்பது இவர்கள் மூலபாடத்தை மாற்றாத பெருந்தகைமையுடையவர் என்பதையும், கருத்து விடுபடாமல், கருத்துமாறுபடாமல் சுலோகத்திற்குப் பொருள் கூறும் திறமுடையவர் என்பதையும் நமக்கு உணர்த்துகிறது.

சந்தி, விக்கிரகம், யானம், ஆதனம், சமாச்சிரயம், துவைதீபாவம் என்னும் இவற்றை மந்திரத்திற்குரிய அறுவகைக் குணங்களாக அறிதல் வேண்டும் (அத்.4, பிர.7, சு.234).

அடிக்குறிப்பில் "இவற்றை முறையே நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், கூட்டல், பிரித்தல் என்று கூறுவர் பரிமேலழகர் (திருக்குறள் 485, உரை)" என்று பண்டிதமணியார் கூறுகின்றார். மூலநூல் மட்டுமன்றி உரையாசிரியர் கருத்தையும் நுணுகி உணர்ந்து சுக்கிரநீதியின் சுலோகக் கருத்தோடு உவமித்துக் காட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

இம்முறையில் பண்டிதமணி சுக்கிரநீதி என்ற நூலை யாவரும் போற்றும் வண்ணம் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## சான்றெண் விளக்கம்

1. பண்டிதமணி கதிரேசன் செட்டியார் முகவுரை பண்டிதமணி, ப.2.
2. வ.சுப. மாணிக்கம், விழாப் பதிப்பு, ப.6.
3. கா. சுப்பிரமணியபிள்ளை, ஆராய்ச்சி மதிப்புரை, சுக்கிரநீதி, ப.28.
4. பண்டிதமணி, முகவுரை, சுக்கிரநீதி, பக்.3-4.
5. மேலது, ப.5.
6. மேலது, பக்.7-8.
7. ச. சோமசுந்தர பாரதியார், ஆராய்ச்சி மதிப்புரை, சுக்கிரநீதி, ப.35.
8. கா. சுப்பிரமணிய பிள்ளை, ஆராய்ச்சி மதிப்புரை, சுக்கிரநீதி, ப.28.

******

# மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்)

மு. வளர்மதி

"செங்கதிரோன் ஒளிவிரவாத் தேயமிலை
யஃதேபோற் சிறந்த கல்வி
யெங்கதிரே சப்பெரியோய் நின்றலைமை
பெறாதசபை யாண்டு மில்லை"[1]

என அறிஞர்கள் அவையில் பெரும் பாராட்டைப் பெற்றவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார். "தமிழகம் எத்தனையோ அறிஞர்களையும், அரசியல் மேதைகளையும், கலைஞர்களையும், கவிஞர்களையும், தொழில்துறை வல்லுநர்களையும் ஈன்றெடுத் திருக்கிறது. பெருமைக்குரிய இச்சிந்தனைச் செல்வர்களெல்லாம் தமிழகத்தின் வரலாற்றிலே பொன் எழுத்துகளால் பொறிக்கப் பெற வேண்டியவர்கள். இந்த வரிசையிலே முதன்மையாக வைத்து எண்ணத்தக்கவர் நமது மகா மகோபாத்தியாயர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களே[2] என அறிஞர் சோமலெ 'பண்டிதமணி' எனும் வாழ்க்கை வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வடமொழி, வேதம், தமிழில் வடமொழிக் கலப்பு முதலியவற்றைப் போற்றிப் பேசி வந்த பண்டிதமணி, "தனித்தமிழை எதிர்ப்பது தமிழ்க் கொலை செய்வதாகும். தமிழின் எதிரிகளே தனித்தமிழை எதிர்ப்பவர். புலவரல்லாதாரே கலப்புத் தமிழை ஏற்பர்"[3] என்ற மறைமலையடிகளின் தீவிரமான கருத்தின் உண்மை அறிந்த பின், தாம் முன்பு கொண்டிருந்த கொள்கைகளை மாற்றிக் கொண்டு அடிகளின் கொள்கைகளை ஏற்கலானார். இதனால் பண்டிதமணிக்கும் மறைமலையடிகளாருக்கும் கருத்தொற்றுமையும், நட்பும் பெரிதும் வளர்ந்து நீடித்தது.

'மண்ணியல் சிறுதேர்' எனும் ('மிருச்சகடிகம்') வடமொழி நாடக மொழிபெயர்ப்பு நூலின் மூலம் பண்டிதமணியின் மொழித்திறனையும் மொழிபெயர்ப்புத் திறனையும் இக்கட்டுரை பேசுகிறது.

## மிருச்சகடிகம்

சமஸ்கிருத மொழியில் புகழ் பெற்ற மகாகவிகளான பாசமகாகவிக்குப் பிந்தியவரும் காளிதாசருக்குக் காலத்தால்

முந்தியவருமாகக் குறிப்பிடப்படும் 'சூத்திரகர்' இயற்றிய 'மிருச்சகடிகம்' என்ற புகழ்பெற்ற நாடகம் ஒரு புரட்சிகர நாடகமாகக் கருதப்படுகின்றது. இதில் சிருங்காரம் எனும் உவகைச் சுவையே மேலோங்கி நிற்பதாக அறிஞர்களால் கணிக்கப் பட்டுள்ளது. இந்நாடகம் தமிழில் **'மிருச்சகடி நாடகம்'** (1887, எஸ்.எம். நடேச சாஸ்திரி), **மிருச்சகடிகம்** (1907, மோ.க. சடகோபாலாச்சாரியார்), **மிருச்சகடிகம்** (1909, எஸ்.ஏ. பாலகிருஷ்ண ஐயர்), **வஸந்த கோகிலம்** (1919, வடுவூர் கி. துரைசாமி ஐயங்கார்), **மண்ணியல் சிறுதேர்** (1933, மு. கதிரேசச் செட்டியார்) **'இன்பப் புரட்சி'** (1957, எச். வைத்தியநாதன், பி. ஹனுமந்தராவ்), **பொன்னூர்தி** (1981, நலங்கிள்ளி) என 7 முறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியன் சுமார் 1700 ஆண்டுகளுக்கு முன்பு அவந்தி நாட்டை (உச்சயினி) ஆண்டு வந்த அரசன் சூத்திரகன். "சூத்திரகனுடைய காலத்தையும், பிராசின கிரந்த மிந்த நூல்' என்று வடமொழி வல்லுநர் வழங்குதலையும், ஊகித்துணருங்கால், ஆரிய பாஷையிலுதித்து நடைபெறும் மற்றையெல்லா நாடகங்கட்கும் இது முந்தியதென்று தெற்றென விளங்குகின்றது. அக்காலத்து அரசாங்க அமைதியையும், நீதிமுறைமையையும், நீதியதிபர், சேனாபதி, காவலாளர் முதலாயினோர் தன்மையையும், அரசன் ஆராய்ச்சி யின்றித் தீர்ப்பளித்தலையும், மாந்தர்களிருப்பையும், அற்பர் தீச்செயலையும் குணாகுணச் சிறப்பினையும் மற்றும் பலவற்றையும், எளிதிற் கூறுதலை யோசிக்குமிடத்து, இந்நூலாசிரியர் உலக நடையையும் ஒருங்கே உணர்ந்து, அவைகளை யுலகத்திற்குக் காட்ட இந்நூலியற்றியுள்ளா ரென்றறிகிறோம்"[4] என இந்நூலின் சிறப்பு குறித்துக் குறிப்பிடப்படுகிறது. மேலும் அக்காலத்தில் நிலவிய பண்பாடு, அரசியல், நீதிமுறை, மற்றும் பார்ப்பனர், கணிகையர், கள்வர், அரசர், பிற மக்கட் பிரிவினரின் நடவடிக்கைகள் முதலியவற்றையும், பழங்கால வடமொழி நாடகத்தின் அமைப்பு, முறை, தன்மை ஆகியனவும் அறிந்து கொள்ள இந்நூல் ஒரு கருவியாக அமைந்துள்ளது எனலாம்.

## மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்) கதைச்சுருக்கம்

உச்சயினி நகரத்தில் அந்தணர் குலத்தில் தோன்றிய **சாருதத்தன்** என்பவன், பிறப்பால் அந்தணன் ஆயினும் வணிகத் தொழிலில் ஈடுபட்டு வந்தான். அவன் **தூதை** எனும் பெண்ணை மணந்தான். **உரோகசேனன்** எனும் ஒரு புதல்வன் பிறந்தான். சாருதத்தன் தான் திரட்டிய செல்வத்தை வறியார்க்கும் புலவர்க்கும், இசையாளருக்கும் ஈந்து இளமையிலேயே வறியவன் ஆனான்.

இந்நிலையில் அந்நகரில் கணிகையர் குலத்தில் தோன்றிய வசந்தசேனை என்பாளைச் சாருதத்தன் சந்தித்தபோது இருவரும் ஒருவரை யொருவர் அவரவர் குணநலன் கருதி காதல் கொண்டனர். இந்நிலையில் சகாரன் என்பான் வசந்தசேனையை அடைய விரும்பி தொடர்ந்து பல இடையூறுகளும், சூழ்ச்சிகளும் செய்து வந்தான். வசந்தசேனை ஒருமுறை தன்னைப் பின்தொடர்ந்து ஆபத்து விளைவித்த கள்வர்களுக்குப் பயந்து எதிர்பாராமல் சாருதத்தன் இல்லத்தில் புகுந்து தனது விலையுயர்ந்த இரத்தினமாலையை அவனது பாதுகாப்பில் கொடுத்து விட்டுச் சென்றாள். மைத்திரேயன் எனும் பார்ப்பான் தன் காதலியை மணமுடிக்க வேண்டி அந்த இரத்தினமாலையைக் களவாடிச் சென்றான். இதனால் வருத்தமுற்றான் சாருதத்தன். அவன் பழிக்கு ஆளாகாதவாறு அவன் மனைவி தூதை தன்னுடைய இரத்தினமாலையை வசந்தசேனையிடம் கொடுத்து விட்டு வரக் கோரினாள். அதை வசந்தசேனையிடம் கொடுத்து விட்டுச் சாருதத்தன் திரும்பும்போது தன் நண்பன் **ஆரியகன்**, பாலகன் என்னும் அரசனால் சிறைப்படுத்தப்பட்டதை அறிந்து அவனைச் சிறையிலிருந்து விடுவிக்கச் செல்கிறான். இந்நிலையில் வசந்தசேனையின் இரத்தினமாலையைக் களவாடிய மைத்ரேயன் தன் செயலுக்கு வருந்தி அந்த இரத்தினமாலையை வசந்தசேனையிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுச் செல்கிறான்.

நடந்த நிகழ்ச்சியை அறிந்த வசந்தசேனை, சாருதத்தன் இல்லத்திற்குச் சென்று களவிலிழந்த தன் நகைகளை அவனிடம் காட்டிவிட்டு, தூதை கொடுத்தனுப்பிய இரத்தினமாலையைத் தூதையிடம் கொடுக்க அவள் அதை வாங்க மறுக்கின்றாள். அவ்வேளையில் "யான் விளையாடுதற்கு இம்மண் வண்டி வேண்டா பொன் வண்டி வேண்டும்'' என்று சாருதத்தன் புதல்வன் உரோகசேனன் அழுது கொண்டிருப்பதைப் பார்த்து வசந்தசேனை மனம் நெகிழ்ந்து தன் பொன் நகைகளைக் கழற்றி அக்குழந்தைக்குக் கொடுத்துப் "பொன்வண்டி செய்து கொள்ளுக' என்று கூறி விட்டு சாருதத்தனின் வண்டியில் ஏறிச் செல்வதாக நினைத்து, சாருதத்தன் வீட்டு வாயிலில் ஒதுங்கி நின்ற சூழ்ச்சிக்காரன் சகாரன் வண்டியில் ஏறிச் செல்கிறாள். சகாரன் தன்னைக் காணவே வசந்தசேனை வந்ததாகக் கருதி அவளிடம் காதல் மொழி பேசிக் காலில் விழுந்தான். வசந்தசேனை சினந்து, அவனைக் காலால் உதைத்துத் தள்ளுகிறாள். தன் வேலையாட்கள் சேடன், விடன் ஆகியோரிடம் அவளை அடித்துக் கொல்லுமாறு கூறுகிறான். அவர்கள் அவ்வாறு செய்யத் துணியாத நிலையில் சகாரன் தன் பலங்கொண்ட மட்டும் அவளை அடித்து வீழ்த்தி அவள் மீது காய்ந்த சருகுகளைப் போட்டு மூடிவிட்டு,

"சாருதத்தன் வசந்தசேனையை வதைத்தனன்" என நீதிமன்றத்தில் கூற, வசந்தசேனையின் மீது இரக்கங் கொண்ட சகாரனின் வேலையாளான விடன் என்பான், சாருதத்தனால் வசந்தசேனை கொல்லப்படவில்லை; சகாரனால் வதைக்கப்பட்டாள் என நீதித்தலைவரிடமும் சாருதத்தனிடமும் எடுத்துச் சொல்லச் சாருதத்தன் விடுவிக்கப் படுகிறான். இதற்குள் தன் கணவன் மீது அவதூறாகப் பழி சுமத்திக் கொலைத் தண்டனை விதிக்கப் பெற்று விட்டதைக் கேள்வியுற்றுச் சாருதத்தனின் மனைவி தூதை தீப்புக முயலுகிறாள். இதைக் கேள்வியுற்று விடுதலையான சாருதத்தன் தன் மனைவியையும், குழந்தையையும் கண்டு, தான் கொலை செய்யவில்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டதைக் கூறுகிறான். தூதை தீப்புகுவதைக் கைவிடுகிறாள். தன் கணவன் கொலைகாரன் அல்லன் என்பதை அறிந்து தூதை மகிழ்கிறாள். அரசன் ஆரியகனால் தனக்குத் தானஞ் செய்யப்பட்ட அரசையும் மறுத்து, தூதை, குழந்தை உரோகசேனன், வசந்தசேனை, மைத்ரேயன் அவன் காதலி மதனிகை இவர்களுடன் களிப்புற்று வீட்டையடைந்து வாழ்ந்து வந்தான்.

விறுவிறுப்பான பல நிகழ்ச்சிகள் அடங்கிய இக்கதை தமிழ் மொழிபெயர்ப்பிலும் அக்காலத்தில் அறிஞர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வடமொழியில் 382 சுலோகங்களால் இயற்றப்பட்ட இந்நாடகம் தமிழில் செய்யுள் (371) மற்றும் உரைநடை கலந்த வடிவில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

## மொழிபெயர்த்ததன் நோக்கம்

ஒவ்வொரு மொழிபெயர்ப்பு நூலும் ஏதாவதொரு அடிப்படைக் காரணத்தைக் கொண்டு தேர்வு செய்யப்படுகிறது. மொழிபெயர்ப்பாளர் தான் படித்தது, தனக்குப் பிடித்தது, தன் கொள்கைகளுக்கு உட்பட்டது, பெரும்பான்மை மக்களால் பாராட்டப்படுவது, படிக்கப்படுவது, புகழ் பெற்றது என்ற வகையில் ஏதாவதொரு காரணத்திற்காக மொழிபெயர்ப்பதற்குரிய நூல்களைத் தேர்வு செய்கின்றனர். "எந்த ஒரு மொழிபெயர்ப்பாளரும் எந்த ஒரு அயல்மொழி நூலையும் காரணமில்லாமல் மொழிபெயர்க்கத் தேர்ந்தெடுப்பதில்லை. ஒன்று மொழிபெயர்ப்பளார் தனக்கும் தான் தேர்ந்தெடுத்திருக்கும் நூலுக்குமுள்ள கருத்து ஒற்றுமையால் கவரப்பட்டிருக்கலாம் அல்லது மொழிபெயர்ப்பு அந்தக்கால மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் என நினைத்திருக்கலாம். இவ்வாறு ஒரு மொழிபெயர்ப்பு வேற்றுமொழி நூல்களுக்கும் தாய்மொழி நூல்களுக்குமிடையே ஒரு சிறந்த இடைத்தொடர்பாகப் பணிபுரிகிறது. எப்போது அதன் மாறுபட்ட வடிவத்தில் அதன்

உள்ளீட்டோடு (Content) உள்நாட்டு இலக்கிய மரபால் ஒரு மொழிபெயர்ப்பு ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அப்போது அது தாக்கம் பற்றிய ஆய்வுப் பொருளாகிறது''[5] எனும் வை. சச்சிதானந்தத்தின் கூற்று மொழிபெயர்ப்பு நூல் தேர்வு என்பது சிந்தனைக்குரியதாகக் காட்டுகிறது. பண்டிதமணியின் நூல் தேர்வும் இத்தகைய நோக்கமுடையது என்பதைத் தெளிவாக்கியுள்ளார்.

"நம் அமிழ்தனைய தமிழ்மொழி, இயல், இசை, நாடகம் என முத்திறப்படுத்தப்பட்டு நிகழ்ந்த முறையை நோக்குவோமாயின், இதன் கண் அவ்விலக்கணங்கள் பண்டைக்காலத்தில் எத்துணை விரிவாக அமைந்திருந்தனவென்பது புலனாகும். இற்றைஞான்று நம் தீந்தமிழில் நாடகப் பகுதிகள் ஒரு சிலவன்றி முழுதுங் காண்டற்கில்லை. ஒரு மொழியில் ஒரு காலத்தில் ஒரு பகுதி விரிவாக அமைந்து பிறிதொரு காலத்தில் அப்பகுதி எக்காரணத்தாலோ குறைந்து விடுமாயின், அக்குறையை நிறைவிக்க வேண்டுவது அம்மொழிப்பற்று உடையார்க்குரிய கடமையாகுமன்றோ! இக்குறிக்கோளைக் கடைப்பிடித்தே தமிழில் நாடகக் கலையின் வளர்ச்சி கருதி வடமொழியிலுள்ளதொரு பெரிய நாடகத்தைத் தமிழாக்க முற்பட்டேன். மொழிபெயர்த்ததர்ப்பட யாத்தலையும் தமிழ் நூல் வகையு ளொன்றாக வைத்துத் தொல்காப்பியனார் அறுதியிட்டுரைத்தனராதலின், அவர் கட்டளையை மேற்கொண்டு நூலியற்றல் தமிழ்மொழியாளர்க்குப் பொருந்தியதாகுமென்பது என்றுணிவு"[6] எனத் தன்னுடைய நோக்கத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

### நூலின் பெயர்க்காரணம்

இக்கதைத் தலைவனான சாருதத்தனின் குழந்தை உரோகசேனன் பணிப்பெண் இரதனிகையுடன் மண் வண்டி வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். அவன் தனக்கு இம்மண் வண்டி வேண்டாம்; பொன்னால் செய்யப்பட்ட பொன்வண்டி வேண்டும் என அழுகின்றான் அப்போது சாருதத்தனின் இல்லத்திற்கு வந்த வசந்தசேனை இவன் எதற்காக அழுகின்றான்? என வினவுகிறாள்.

**இரதனிகை (பணிப்பெண்) :-**

> "இவன் அடுத்த இல்லத்தில் வாழும் ஒரு செல்வனுடைய குழந்தையின் பொன் வண்டியை உருட்டி விளையாடினான். அச்சிறுவன் அப்பொன் வண்டியைக் கொண்டு போய் விட்டான். அதன் பின் அப்பொன் வண்டியை விரும்பித் தேடும் இவனுக்கு இம்மண் வண்டியை யான் செய்து கொடுத்தேன். அதன்மேல் இவன் என்னைப் பார்த்து "இரதனிகே!

எனக்கு இம்மண் வண்டி எதற்காக? அப்பொன் வண்டியையே தரல் வேண்டும்" என்று சொல்லுகிறான்.

வசந்தசேனை:–

ஆ! துன்பம்! இவனும் பிறர் செல்வங் கண்டு வருந்துகின்றானே! ஆ! தெய்வமே! தாமரையிலைக் கண் வீழ்ந்த நீர்த்திவலைகளைப் போன்ற மக்களுடைய செல்வங்களால் நீ விளையாடுகின்றாய். (என்று கண்ணீருதிர்த்து) குழந்தாய்! அழவேண்டா. பொன்மயமான வண்டியினால் விளையாடுவாய்

- - - குழந்தாய்! அழகிய முகமுடையனாய் மிகவும் வருந்திக் கூறுகின்றாய் (நாட்டியத்தால் அணிகலன் களைக் கழற்றி அழுது கொண்டு) இப்பொழுது யான் உன் தாயாயினேன். ஆதலின் இவ்வணிகலன்களைப் பெற்றுக்கொள். பொன் மயமான வண்டியைச் செய்துகொள்" (ப. 217-218) என்று கூறுகிறாள்.

இந்த நிகழ்ச்சியே நூலின் பெயர்க் காரணமாக அமைந்துள்ளது. கணிகையர் குலத்தைச் சேர்ந்த வசந்தசேனையின் உயர் பண்பைக் காட்டும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது. அத்துடன் சிறு குழந்தை உரோகசேனன் விரும்பிய விதமே அந்நூலின் தலைப்புக்குரிய செய்தியாகக் கவிநயத்துடன் மண்ணியல் சிறுதேர் என அமைந்துள்ளது.

## சிறப்புப் பாயிரங்கள்

பண்டிதமணியின் இந்நூலிற்கு உ.வே. சாமிநாதையர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார். வே.ரா. இராகவையங்கார், வெள்ளகால் V.P. சுப்பிரமணிய முதலியார், பிரமஸ்ரீ நவநீத கிருஷ்ணபாரதியார், வயி.நாக.ராம. அ. இராமநாதச் செட்டியார் ஆகியோரும் இந்நூலிற்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளனர்.

"ஆரியநன் மொழிக்குமிக வணிசெய்மிருச் சகடிகநா
டகத்தை மேலாம்
ஏரியைமண் ணியல்சிறுதே ரென்றுமொழி பெயர்த்துயர்சீ
ரெய்தி னனானால்
சீரியதென் வடமொழிநூற் கடல்கடந்து கரையடைந்த
திறலோ னோர்பால்
நாரியர னன்பன்பண் டிதமணியாங் கதிரேச
நாவல் லோனே" (ப. 25)

எனச் சுருக்கமாக வழங்கிய V.P. சுப்பிரமணிய முதலியாரின் சிறப்புப் பாயிரம் குறிப்பிடத்தக்கது. சுவாமி விபுலாநந்தர் இந்நூலிற்கு அணிந்துரை வழங்கியுள்ளார். "கவிச்சுவைத் ததும்பும் தமிழ்ச்செய்யுள் முந்நூற்றெழுபத்தொன்று (371) வடமொழிச் சுலோகங்களுக்கு நேர்மொழிபெயர்ப்பாக இந்நாடகக் காப்பியத்திற்கு அணியெனத் திகழ்கின்றன" (ப. 27) எனக் குறிப்பிட்டுள்ளார். இதில் உவகைச்சுவை (சிருங்காரம்), பெருமிதச்சுவை (வீரம்), இளிவரற்சுவை (பீபற்சம்), வெகுளிச்சுவை (ரௌத்திரம்), நகைச்சுவை (ஹாஸ்யம்), மருட்கைச் சுவை (அற்புதம்), அச்சச்சுவை (பயோற்கர்ஷம்), அவலச்சுவை (கருணை), நடுவுநிலைச் சுவை (சமப்ரகர்ஷம்) ஆகியன எந்தெந்த இடங்களில் அமைந்து வருகின்றன என்பதைப் பாடல் எண்களைக் குறிப்பிட்டு வழங்கியுள்ளது சிறப்புக்குரியதாகும். ''ஒன்பது சுவைகளையும் நவமணிகட்கு ஒப்பிடலாமாதலின் ''மண்ணியல் சிறுதேர்'' நவமணிக்குவையினைத் தாங்கி நடப்பதென்பது பெறப்படுகின்றது" (ப. 28) என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். இந்நூலிற்கு ஆராய்ச்சி மதிப்புரை வழங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியார் இந்நாடகக் காப்பியத்தைச் சிலப்பதிகாரத்துடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

"நாடகமாயினும், சிலப்பதிகாரம் போல இதுவும் இயற்றமிழ் வகையான நாடகக்காப்பியமேயாகும். சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள். இது பாட்டிடை வைத்த உரைவகைப் பனுவல். முன்னது தனித்தமிழ் முதனூல். பின்னது மொழிபெயர்ப்பு, வழிநூல். இவ்வளவே இவற்றுள் வேற்றுமை. இவற்றிடைக் காணப்பெறும் ஒப்புமைகளோ மிகப்பலவாம். இரண்டும் இயற்றமிழ்ப் பனுவல்கள் இசையொடும் இசைந்த பாட்டுடையனவேனும் இசைத்தமிழ் வகையுமன்று; கூத்தியற் கூறாகும் நாடகத் தமிழ்ப்பகுதியுமன்று" (ப. 46) என்று பல நிலைகளில் சிலப்பதிகாரக் காப்பியத் தன்மையுடன் இந்நூல் ஒன்றுபடுவதும், வேறுபடுவதுமாகப் பிரித்து விளக்கமாகத் தமது ஆராய்ச்சி மதிப்புரையை வழங்கியுள்ளது இதன் தனித்தன்மையை வாசகர்கள் அறிய வாய்ப்பாக உள்ளது.

### பண்டிதமணியின் மொழிபெயர்ப்பு

இந்நூலின் மொழிபெயர்ப்பு முறை குறித்துப் பண்டிதமணி தமது முன்னுரையில், "மக்கட் பகுதியினரின் பல்வேறு இயல்புகளை மிகவும் வியக்கத்தக்க முறையில் எடுத்து விளக்கிச் செல்லும் இப்பிரகரணம், தன் ஒரு சிறு கூற்றாற் சூத்திரக மன்னர் திறமையையும் பெருங்கூற்றால் நாடகப் பேராசிரியராகிய

பாசமகாகவியின் ஆற்றலையும் தன்னகத்தே கொண்டு மிளிர்தலைக் கண்டு இது தமிழிற் சிறந்த முறையில் மொழிபெயர்க்கப்படின் தமிழறிஞர்க்குப் பயன் விளைவிக்கும் என்னும் உறுதியுடையனாய் இப்பணியிற் தலைப்படலானேன். வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்படும் நூல் முதனூனயத்தை யிழந்து விடாமலிருக்க வேண்டுமென்பதும், அம்மொழியில் அதனைப் பயிறற்குக் கருவிநூற் பயிற்சி முதலிய தகுதி எத்துணை வேண்டப்படுகின்றதோ, அத்துணைத் தகுதி மொழிபெயர்ப்பு நூலைப் படிப்போர்க்கும் வேண்டப்படும் நிலையில் இஃது அமைய வேண்டுமென்பதும் என் கருத்து. இக்கருத்தைச் சிறந்த கடைப்பிடியாகக் கொண்டமையால் இம்மொழிபெயர்ப்பு நடித்தற்குச் சில மாறுதலைப் பெறும் நிலையில் அமையினும், படித்தற்குத் தகுதிவாய்ந்ததாக இருக்கும் வண்ணம் செய்யப்பட்டது. முதனூலிலுள்ள சுலோகங்கள் ஒன்றும் விடாமல் தமிழில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பாவும் பாவினமுமான செய்யுள் வடிவில் மொழிபெயர்க்கப்பட்டன. முதனூலில் அமைந்த சுலோகங்கள் 382 ஆகும். அவை தமிழில் 371 செய்யுட்களாகப் பெயர்த்தியற்றப்பட்டன. ஒரு சில இடங்களில் தொடர்நிலையாக அமைந்த இரண்டு மூன்று சுலோகப் பொருள்கள், தமிழில் ஒரே ஆசிரியப்பாவிலமையச் செய்தமையால் முதனூலிலுள்ள எண்கள் பதினொன்று தமிழிற்குறையலாயின. நாடகப் பாத்திரங்கள் ஒருவரோடொருவர் உரையாடுங்காற் குறிப்பிற் பொருடரப் பேசிய உரைநடைகளுக்கும், செய்யுட்களுக்கும் வேண்டுமிடங்களிலெல்லாம், கருத்துக்களை விளக்கி வினைமுடிபு காட்டிப் பொருள் விளங்க ஆங்காங்கு அடியிற் குறிப்புரைகள் எழுதப்பட்டுள்ளன" (ப. 6) என விளக்கியுள்ளார்.

பண்டிதமணியின் இம்மொழிபெயர்ப்பு குறித்து அறிஞர்கள்

"– – – – – – கற்றோர்
ஏர்த்தமொழி பெயர்ப்பென்று மதித்திடமண் ணியல்சிறுதே
ரென்னும் பேராற்
கூர்த்தசுவைத் தமிழினளித் திட்டனன்யா ரவனென்னிற்
கூறக் கேண்மின்" (ப. 21)

என்று உவே. சாமிநாதையரும்

"எழில்கொள்சூத் திரகன்முன் னிசைசெய்நா டகமெனும்
பழமிருச் சகடிகப் பனுவல்பண் டிதமணி
தழையமண் ணியல்சிறு தேரெனத் தமிழிலே
மொழிபெயர்த் தனன்பொருள் முழுதுமொத் திலகவே" (ப. 25)

என வேரா. ராகவையங்காரும்

"நடையுந் தொடையு நல்லிசைச் சூழலும்
தொடர்ந்தகப் படுத்தித் துரிசின் றதற்கொரு
படிபடைத் திட்ட பான்மைத் தாமென
வியப்புறத் தமிழிற் பெயர்த்திரு மொழிக்கும்
அதுபொது வாகி யணிசெய வணிந்து
நறியமண்ணியல் சிறுதே ரெனும் பெயர்
சூட்டிப் பெரும்பெய ரீட்டினன்;" (ப. 26)

என நவநீதகிருஷ்ண பாரதியாரும் தங்களுடைய சிறப்புப் பாயிரப் பாடல்களில் பாராட்டியுள்ளனர்.

## முதனூலின் நிழற்படமே

மண்ணியல் சிறுதேர் எனும் இந்நூலின் மொழிபெயர்ப்பு குறித்து உமாமகேசுவரம்பிள்ளை (தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர், தமிழ்ப்பொழில் ஆசிரியர், வழக்கறிஞர்) தமது மதிப்புரையில் சில கருத்துகளை வழங்கியுள்ளார். இதில், ஆங்கில நாடகங்களைத் தழுவிய நூல்கள் தமிழ் மரபுக்கு ஏற்றதாக இல்லையென்பதால் புலவர்கள் மனதைக் கவருவதாக இல்லை. நமது நாட்டு இயல்பைப் புனைந்தெழுதும் புலமை மிக்க வடமொழிக் கவிகளின் நாடக நூல்கள், காவிய நயம் மிக்க பேரிலக்கியங்களாக மதிக்கப்படுகின்றன. அவ்வகையில் இத்தகைய மொழிபெயர்ப்பு நூல்கள் இன்றியமையாத சாதனங்களாகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். மேலும் முதனூலையொட்டிப் பண்டிதமணியின் மொழிபெயர்ப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்கும் பொழுது, "வடமொழிக் கருவூலங்களிற் சொல்லழகு பொருளழகு நிறைந்து நற்பயன் விளைப்பனவாய்த் திகழுந் சிறந்த நூல்களைத் தமது நுண்மாணுழைபுலனால் ஐயந்திரிபற ஆய்ந்தறிந்து முதனூலின் நிழற்படமே (Photo) போலத் தூயதமிழிற் பெயர்த்தெழுதித் தமிழ்மொழியை வளம்பெறச் செய்துவரும் பண்டிதமணியாரின் புகழைத் தமிழ்நாடு நன்கறியும். இவர்கள் மொழிபெயர்ப்பில் மிகவும் கைவந்தவர் என்பதற்குச் சுக்கிரநீதியின் தமிழ் மொழிபெயர்ப்பே போதிய சான்றாம். இவர்கள் வடமொழி தென்மொழிகளில் மிகப் புலமை வாய்ந்தவர். அவற்றின் பேரிலக்கியங்களின் சொற்சுவை பொருட்சுவைகளிற் பலகாலுந் தோய்ந்து தோய்ந்து இன்புறுவர்; அணியிலக்கணங்களையும் சுவைநயங்களையும் நன்கு ஆய்ந்து அனுபவிப்பவர்; மகாகவிகளின் இருதயங்களை உளங்கொளக் கொண்டு தமது மொழி மதுகையாலும் சொல்வளத்தாலும் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாருங் வேட்பமொழியும் ஆற்றல் படைத்தவர்; ஆதலால் பேரிலக்கியமெனக் கருதப்படும்

மிருச்சகடிகத்தை மொழிபெயர்க்குந் தகுதி பண்டிதமணியாரவர்கட்கே யுரியதாகும். முன்னொருகால் ஆங்கிலமும் வடமொழியும் வல்லாரொருவர், தமிழ்ப்புலவரொருவரது துணைக்கொண்டு மிருச்சகடிகம் என்று எழுதப்பெற்ற மொழிபெயர்ப்பு நூலைப் படித்திருக்கிறேன். அதிலுள்ள உரையும் செய்யுளும் மொழி வளமின்றிக் கொச்சை மொழியில் இயற்றப் பெற்றிருந்மையால் மூலநூலையே அவமதிக்க நேர்ந்தது. இம் "மண்ணியல் சிறுதேர்" என்ற நூல் பயில்தொறும் பல்வகைச் சுவைகளையும் நல்கி மனத்தினை இன்புறுத்துகிறது. மூலநூலில் உள்ளபடியே உரையும் செய்யுளுமாக இயற்றியிருக்கின்றனர். தமிழிற் காணாத உவமங்களும் கற்பனாலங்காரங்களும் இதில் காணப்படுகின்றன.

> நல்குரவே நினைக்குறித்து நானிவ்வா றயர்வுறுவேன்
> மல்கியநட் புரிமைகொடு வாழ்கின்றா யென்னுடலிற்
> புல்கியநீ ஈதெனதென் றெண்ணுறுமப் பொருண்முடிவை
> அல்கியா னுடனீப்பின் யாண்டடைவா யினியென்றே (செ. 36)

எனச் சாருதத்தன் நல்குரவை விளித்துரைக்குங் கூற்று "என்னை வகுத்திலையேல் இடும்பைக்கிடம் யாது சொல்லே" எனும் நமது சொற்கோவின் வாக்கை நினைவுறுத்துகின்றது. இந்நூலில் ஆங்காங்கு எழுதியிருக்கும் குறிப்புரைகளும் விளக்கங்களும், வடநாட்டு மரபுகளையும் சொன்னயங்களையும் தெரிந்து கோடற்கு மிகவுந் துணைசெய்கின்றன" (ப. 36) என்று பண்டிதமணி மொழிபெயர்ப்பின் சிறப்பைச் சான்றுடன் விளக்கியுள்ளார்.

## முதனூலுடன் ஒப்பிட்டுத் துருவி துருவிப் பார்க்கப்பட்ட மொழிபெயர்ப்பு

மதுரை இராமேசுவரம் தேவஸ்தானத்து வடமொழிக் கலாசாலை முதல்வர் V. சுப்பிரமணிய ஐயரின் மதிப்புரையில், "நூலின் பல்வேறு பகுதிகள் முதனூலோடு ஒப்பிட்டுத் துருவித்துருவிப் பார்க்கப்பட்டன. பார்க்கபார்க்க மொழிபெயர்ப்பின் பெருமை மென்மேலும் விளங்கலாயிற்று. கருத்திலோ அமைப்பிலோ நடையிலோ சுவையிலோ சற்றும் பிறழாமல் முதனூலின் பிரதிபிம்பம்போல் விளங்குகின்றது என்று துணிவுடன் கூறலாம். வடமொழியில் தெளிவுகுன்றிக் கிடக்குஞ் சில இடங்களில் இத்தமிழ் நூல் தெளிவு மலிந்து காணப்படுகின்றது. இவற்றால் இது முதனூலினும் மேம்பாடுடையதாகக் கருதற்பாலது. முதனூலிற், பல்வேறு விருத்தங்கள் கையாண்டிருப்பதற்கேற்ப மொழிபெயர்ப்பிலும் இடத்திற்குப் பொருத்தமாக மிக்க திறமையுடன் விருத்தவகைகள்

கையாளப்பட்டிருக்கின்றன. செய்யுள் நடை இலகுவாக ஓடுவதுடன் தெளிவு பொலிந்தும் நிற்கின்றது. கருத்திற்கேற்றவாறு நடையில் உயர்வு தாழ்வு காணப்படினும் அதன் மேம்பாடு ஓரிடத்தும் குன்றவில்லை. வசனமும் எளிதில் அறியக்கூடிய இயல்பு வாய்ந்து விளங்குகின்றது. இவ்வாறு வடமொழிக் கருத்துக்கள் குன்றாமலும் மாறாமலும் வழிநூலிற் கொண்டுவரப் பெற்றிருத்தல் மிகவும் பாராட்டத்தக்கது. முதனூலை நிழல்போல் எவ்வாற்றானும் அடுத்துச் செல்கின்றது என்னும் இம்மொழிபெயர்ப்பின் பெருமையைச் சிலர் ஒரு குறைவாகக் கருதலாம். இவர்களின் எண்ணம் மொழிபெயர்ப்பில் முதனூலின் பருப்பொருளை மாத்திரம் தழுவிக்கொண்டு பிறவற்றிற் சுதந்தரமாகச் செல்லலாமென்பதே. தற்காலத்தில் இதை ஏற்றுக்கொள்பவர் மிகச் சிலரேயாவர். ஏனெனில் இவ்வெண்ணத்துடன் செய்யப்பெற்ற மொழிபெயர்ப்புகள் வழுக்கள் மலியப்பெற்று முதனூற் கருத்துகளைச் செவ்வனே தெளிவுறுத்த இயலாதிருத்தல் பற்றியேயாம். ஆதலால், சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் ஒவ்வொரு அம்சத்திலும் முதனூலையே தழுவிநிற்பது நலமென்று கருதி வழிநூல்களை இயற்றுகின்றார்கள். பிற்கூறிய நெறியில் நிற்கும் பண்டிதமணியவர்கள் மிக வியக்கத்தக்க திறமையுடன் முதனூலினியல்பை நெருக்கத்துடன் தழுவி இந்நூலை வெளிக்கொணர்ந்திருப்பது பெரிதும் போற்றத்தக்கது'' (ப. 39-40) என்று விரிவாக இம்மொழிபெயர்ப்பை ஆராய்ந்து எழுதியுள்ளார்.

## மொழிபெயர்ப்பு - சில சிந்தனைகள்

1. இந்நூல் வடமொழி சுலோகங்களுக்குத் தமிழ் இலக்கண முறையுடன் அமைந்த செய்யுட் பாக்களாலும், உரைநடை இடம் பெறுகிற இடத்தில் அதே போன்று உரைநடையாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நேரிசை யாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் எனச் செய்யுள் வடிவில் சுலோகங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இந்நூலுக்குரிய தனித்துவம் எனச் சுட்டிக் காட்டலாம். இம்முறை பற்றி நாவலர் சோமசுந்தர பாரதியாரின் ஆராய்ச்சி மதிப்புரையில் குறிப்பிட்டுள்ளதைச் சான்றாகக் காட்டலாம். "இதில் ஆசிரியர் நாடக பாத்திரங்களின் பேச்சளவில் அவரவர் உளக்கிடை ஒழுக்கம் நோக்கம் நிலைமைகளைப் படிப்பவர் எளிதினுணருமாறு யாப்புறவு செய்தமைத்த செவ்வி மிகவும் பாராட்டற்பாலது. இத்திறம் முதனூலாசிரியரைப் பெரிதும் பொறுத்ததாயினும், இத்துறையில் மொழிபெயர்ப்பாளரின் பொறுப்புக் கொஞ்சமல்ல. செயற்கைச் செம்மொழியான ஆரியநடைப் போக்கும் இலக்கண முறையும் சொல்லாட்சித் துறைகளும், இயற்றமிழியல்புக்கும் இலக்கணப் போக்கு

கிளவியாக்க மரபுகளுக்கும் இயைபு மிகவுடையவல்ல என்பது அறிவாருக்கு, வடமொழி நாடகத்தைத் தமிழில் நாடகநாணயங் குறையாமல் மொழிபெயர்த்துத் தருவதன் அருமை வெட்ட வெளியென விளங்கும்" (ப. 41) இக்கருத்தை இம்மொழிபெயர்ப்பைப் படிப்பவர் எவரும் உணருவர்.

2. செய்யுளாயினும், உரைநடையாயினும், வாசகர்கள் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் அந்தந்தப் பக்கங்களில் சொற்களை விளக்கும் வகையில் நூல் முழுவதும் அமைந்திருப்பது மொழிபெயர்ப்பாளரான பண்டிதமணியின் கூடுதலான பங்களிப்பைக் காட்டும்.

> [1]மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்)[2] எனப் பெயரிய இப் பிரகரண நாடகத்தை நடாத்தும் முயற்சியுடையேம்"

என்பதை விளக்கும் வகையில்

1. மண்ணானியன்ற சிறிய தேர்

2. மிருத் - மண்; சகடிகா - சிறுதேர்; சிறார் விளையாடுதற்குரியது. அதனுடையது இந்நாடகமாதலின் இதனை 'மிருச்சகடிகம்' எனபர் முதனூலாசிரியர். சாருதத்தன் வறுமையால் அவன் புதல்வன் உரோகசேனன் விளையாடுதற்கு மண்ணாற் செய்யப்பட்ட சிறுதேர் அமைந்தது என்று இதன் ஆறாம் அங்கத்திற் கூறப்படும்" (ப. 4) எனப் பண்டிதமணி விளக்கமளித்துள்ளார்.

3. 'மொழிபெயர்ப்பாசிரியன் மூலநூலாசிரியனுடைய பணியாளனாக அவன் பக்கத்திலேயே இருந்து கொண்டிராமல் அவனுக்குப் பின்னால் ஏறி நின்று பார்க்க வேண்டும்[7] என்பது 'பெஞ்சமின் ஜோவெட்' என்ற அறிஞரின் கருத்து. இம்முறையைச் சில மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் மொழிபெயர்ப்புகளில் பின்பற்றியுள்ளனர். அறிஞர் வெ. சாமிநாதசர்மா, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை போன்றோர் இம்முறையில் மிகுந்த அக்கறை செலுத்தியுள்ளனர். அம்முறையில் பண்டிதமணி மூலநூலாசிரியர் கூறியதை மட்டும் மொழிபெயர்ப்பில் கூறாமல் சொற்கள் தரும் கூடுதலான பொருளை, செய்திகளை அங்கங்கு இடம் பெறச் செய்துள்ளார்.

> **"[1]எண்ணு [2]மின்பமுந் திண்ணிய [3]வேழமும்**
> **பற்றிய கலைகளும் முற்ற வுணர்ந்தோன்**
> **அரனரு ளாலே [4]யிருளகன் றொளிரும்**

> நாட்டமும் பெற்றோ னீட்டு பல்பொருட்
> பரிமகம் புரிந்து பார்முழு தாண்டோன்" (ப. 5)

எனும் நேரிசையாசிரியப்பா செய்யுளினைச் சான்றாகக் காட்டலாம்.

[1]எண் - கணிதநூல். [2]இன்பம் - காமநூல், [3]வேழம் - யானை நூல் [4]இருள் அகன்று ஒளிரும் நாட்டம் - இருட்படலம் என்னும் நோய் நீங்கப் பெற்ற கண்; அன்றி மயக்க முதலியன நீங்கிய ஞானநாட்ட மெனினுமாம்" என்று (ப. 31) அடிக்குறிப்பில் விளக்கமளித்துள்ளார்.

4. எளிய தமிழ் நடை என இந்நூலின் மொழிபெயர்ப்பைக் கூற முடியாது. சாதாரண மக்களுக்குப் புரியும் வகையில் எழுதப்பட்ட மொழிநடை அல்லது மொழிபெயர்ப்பு எனவும் கருத முடியாது. இம்மொழிபெயர்ப்பு முற்றிலுமாகச் செந்தமிழ் நடையில் அமைந்ததாகும் (எ.டு.)

**"விதூடகன் – (விடனை நோக்கி):**

> இச்செயலில் இவன் குற்றம் புரிந்தவனல்லன். (சகாரனை நோக்கி) இவனன்றே இக்கொடுஞ் செயலிழைத்தவன். எட! எட! [3]மன்னவன் மைத்துன! [4]சமத்தானக! [5]கொடியோய்! [6]கயவ! இது தகுமா? இது தகுமா? மாட்சிமிக்க ஐயர் சாருதத்தர் வறுமையுற்றுளாராயினும், அவர் [7]உயர் குணங்களால் உச்சயினி நகரம் அலங்கரிக்கப்பட வில்லையா? எதற்காக அவரில்லத்துட் புகுந்து ஏவன் மகளிர்க்கு இத்தகைய துன்பஞ் செய்கின்றனை" (ப. 43).

5. மொழிபெயர்ப்பு என்பது ஒன்றை மற்றொரு மொழியில் நகல்படுத்துவது என்ற ஒரு பணியை மட்டும் குறிப்பதாகாது. மூலத்தின் தன்மை, மரபு, பண்பாடு, காலம் என எல்லாவற்றையும் பெயர்த்துக்கொண்டு வருவதாக அமைகிறது. இதனால் மொழிபெயர்ப்பு எனும் வார்த்தையில் 'பெயர்ப்பு' என்பது கவனத்துக்குரியதாகியது. பண்டிதமணி கதிரேசச் செட்டியாரின் 'மண்ணியல் சிறுதேர்' எனும் இந்நூல் மேற்குறிப்பிட்ட அனைத்து நிலையிலும் உரியமுறையில் பெயர்ப்பதாக உள்ளது. 1700 ஆண்டுகளுக்கு முன் வடமொழியில் எழுதப்பட்ட சுலோகத்தால் கூறும் நாடகத்தைத் தமிழ்மொழியில் இருபதாம் நூற்றாண்டில் தமிழில் பெயர்க்கப்படும் பொழுது தமிழின் தனித்தன்மை விஞ்சி நிற்பதாக அதற்குரிய பாங்குடன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதைக் காணலாம்.

6. 'மிருச்சகடிகம்' நூலுக்குத் தமிழில் மொழிபெயர்ப்புகள் வெளிவந்த போதிலும் பண்டிதமணியின் மொழிபெயர்ப்பே இவ்வகையில் குறிப்பிடப்படுவதாக அமைந்துள்ளது. "பொதுவாக இந்நாடகப் பாட்டுக்களைச் சுவையுணர்ந்து படிப்பவர்கள், நம் பண்டிதமணி, வள்ளுவர், திருத்தக்க தேவர், மணிவாசகர், மூவர், சேக்கிழார் - அன்ன தெய்வப்புலவரின் இறவாப் பாசுரங்களிற் பல்காற் பயின்று பழுத்த பாவன்மையும், சொல்லைத் தொடுக்குங் கல்லாப்புலவர்தம் பொல்லாப் புலமை போலாது கற்றுக் கனிந்த நாவன்மையும் உடையரென்பதை நன்கு கண்டு தெளிவார்" (ப. 63) என நாவலர் சோமசுந்தர பாரதியாரின் கருத்து குறிப்பிடத்தக்கது. மேலும் பிறமொழிபெயர்ப்புகளை அறிந்த சோமசுந்தரபாரதியார் பண்டிதமணியின் மொழிபெயர்ப்பு பலவகையிலும் சிறப்பாக உள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"வடமொழி பயிலாத எம்மனோரால் முதனூலோடொத்து நோக்க இம்மண்ணியல் சிறுதேர் எத்துணைச் சிறப்புரிமை கொள்வதென்று அளந்து அறுதியிடற்கில்லை; எனினும், பலரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மிருச்சகடிக நாடகங்களைப் படித்த நான் ஈண்டுத் துணிந்து கூறற்குரிய தொன்று உளது. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட பாவலரொருவரின் மொழிபெயர்ப்பையும், வடமொழிக்கு விசேட உரிமை பாராட்டும் பார்ப்பன வித்தகரொருவர் மொழிபெயர்ப்பையும் ஆங்கிலத்தில் நான் படித்துளேன். அவற்றைப் படிக்குங்கால் இயலமைவிற் சிற்பவினை நயமோரார் வருத்தி யாத்த திருந்தாச்சிற்றில்போல, இயல்போ டெழில்சிவணாது மொழிபெயர்ப்பாளரின் முயற்சி யளவையே அவை விளக்கி நிற்கக் கண்டேன். நம் பண்டிதமணி ஆரியம்போற் றமிழும் தமிழேபோல் ஆரியமும் விரும்பிப் பயின்ற வித்தகரென்பது இம்மண்ணியல் சிறுதேரைப் படிப்பவருக்கு விசதமாகும்" (ப. 41) என்ற அவர் கருத்து இதற்குச் சான்றாக அமையும்.

## முடிவுரை

பண்டிதமணி கதிரேசச் செட்டியாரின் மொழிபெயர்ப்பு அதுவரை வந்த 'மிருச்சகடிக' மொழிபெயர்ப்புகளில் மிகச் சிறந்தது என அறிஞர்களால் மதிப்பிடப்பட்டுள்ளது. இது நாடகமாக நடிப்பதற்கேற்ப எழுதப்பட்டுள்ளது. தற்காலத்தில் இத்தகைய நாடகம் நடிக்கப்பெறும் நிலையில் இம்மொழிநடை மாற்றம் பெற்று இடம் பெறும் என்பதில் ஐயமில்லை. 'மண்ணியல் சிறுதேர்' சிலப்பதிகாரம் போலக் காப்பியத் தன்மையுடன் பலவகையில் அத்துடன் ஒப்பிட்டுக் கூறும் வகையில் இருப்பதால் தமிழிலக்கிய உலகில் இன்றும் அதன் சிறப்பு

எடுத்துக்காட்டப்படுகிறது. பண்டிதமணியின் வடமொழியிலிருந்து பெயர்க்கப்பட்ட நூல்கள் யாவும் அறிஞர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன என்பதை அந்நூல்கள் வழி அறியலாம். அவ்வகையில் 'மண்ணியல் சிறுதேர்' மொழிபெயர்ப்பும் பண்டிதமணியின் அறிவாற்றலை, புலமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் 31ஆம் ஆண்டு நிறைவு விழாவில் பண்டிதமணி அவர்களுக்கு அளித்த வரவேற்பிதழில் குறிக்கப் பெற்றவை.
   - பண்டிதமணி, சோமலெ, பூம்புகார் பிரசுரம், மூன்றாம் பதிப்பு, மே. 1977, ப. 74.
2. மேற்படி, ப. 9.
3. மறைமலையடிகள் வரலாறு, மறை திருநாவுக்கரசு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, மு.ப. ஜூன் 1959, ப. 516.
4. மிருச்சகடிகம், எஸ்.எ. பாலகிருஷ்ண ஐயர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113, பதி. 1909, ப. 7.
5. ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம்), வை. சச்சிதானந்தன், ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ், சென்னை, பதி. மார்ச் 1990, ப. 5.
6. மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்), மு. கதிரேசச்செட்டியார், மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, பதி 1933, முகவுரை, ப. 5. (இப்பதிப்பே ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது).
7. பிளேட்டோவின் அரசியல் (மொ.பெ) வெ. சாமிநாதசர்மா, திருமகள் நிலையம், சென்னை, பதி. டிச. 1985, ப. 6-7.

******

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம் | 30.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் - 3 தொகுதிகள் | 395.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம் - 2 தொகுதிகள் | 190.00 |
| மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி.1851-2000 | 180.00 |
| தமிழர் கண்ட தாவரவியல் | 40.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| திராவிட இயக்க இதழ்கள் தொகுதி 1 | 60.00 |
| சைவசித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை | 65.00 |
| பெரியபுராணம் - திருமுறைகளின் கவசம் | 55.00 |
| காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன் | 65.00 |
| திருவாவடுதுறைப் புராணம் | 250.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார் | 25.00 |
| தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும் | 20.00 |
| திருக்குறளில் பொதுநிலை உத்திகள் | 30.00 |
| தமிழிலக்கியத்தில் மனிதநேயம் | 115.00 |
| தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் | 30.00 |
| தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும் | 25.00 |
| வ.உ.சி. பன்முகப் பார்வை | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்தரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பாரதியின் சமுதாயச் சிந்தனைகள் | 25.00 |
| சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் | 80.00 |
| தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் தமிழ்த்தொண்டும் மொழியியல் பங்களிப்பும் | 25.00 |
| சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள் | 45.00 |
| மக்கள் நேயச் சுயமரியாதை | 30.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் | 40.00 |